சிரிப்பதிகாரம்
கலைமாமணி, கவிஞர்
எஸ்.டி.சுந்தரம்

உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் (https://ta.wikisource.org), தமிழ் இணையக் கல்விக் கழகமும் (http://tamilvu.org) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

No Copyright

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community (https://ta.wikisource.org) and Tamil Virtual Academy (http://tamilvu.org). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

சிரிப்பதிகாரம்

(நகைச்சுவை நாடகங்கள்)

கலைமாமணி, கவிஞர்
எஸ்.டி. சுந்தரம்

விற்பனை உரிமை:
வேமன் பதிப்பகம்
19, நியூ காலனி சோசியர் தெரு
நுங்கம்பாக்கம், சென்னை 600 034
போன்: 28211134

விக்னேஷ் வெளியீடு
19, நியூ காலனி - சோசியர் தெரு,
(இரண்டாவது தளம்)
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034

நூல் விளக்கம்

நூல் பெயர்	:	சிரிப்பதிகாரம்
ஆசிரியர்	:	எஸ்.டி. சுந்தரம்
பதிப்பு	:	2005
மொழி	:	தமிழ்
பொருள்	:	நாடகம்
அளவு	:	1 X 8 தெம்மி
எழுத்து	:	11 புள்ளி
கட்டமைப்பு	:	வல்லட்டை
விலை	:	ரூ 75/-
பக்கங்கள்		200
வெளியீடு	:	விக்னேஷ் வெளியீடு 19, நியூ காலனி, சோசியர் தெரு சென்னை - 34. தொலைபேசி : 28211134
ஒளியச்சு	:	சகுராம் கிராபிக்ஸ் சென்னை - 24
மறுதோன்றி	:	ரவிராஜா ஆப்செட் சென்னை - 14

காணிக்கை

தினசரியும் ஆற்ற வேண்டிய கடமைகளை நிறைவேற்றுவதில் உள்ள ஆனந்தம் வேறெதிலும் இல்லை. அந்த ஆனந்தத்தில் வாழ்க்கை சிறக்கிறது.

கடமை செய்யாத வாழ்வு சுமையாக அழுகிறது.

வாழ்வை மலரும் சிறப்பாகக் கொண்டு வாழும் நல்லவர்களுக்கு இந்நூலைப் படைக்கிறோம்.

எங்கள் தந்தையாருக்கு இதையே காணிக்கையாக்குகிறோம்.

அன்பு மகன்கள்
எஸ்.டி.எஸ். இரவி
எஸ்.டி.எஸ். இராஜா
எஸ்.டி.எஸ். திருமலை வாசன்

கவிஞர் எஸ்.டி. சுந்தரம் அவர்களின்

வாழ்க்கை குறிப்பு

பிறப்பு	:	22.07.1921
ஊர்	:	சேலம் மாவட்டம் ஆத்தூர்.
தந்தை	:	துரைசாமி அய்யா.
தாய்	:	பூங்கோதை அம்மாள்.
படிப்பு	:	1933-இல் நவாப் இராஜமாணிக்கம் நாடகக் குழுவில் சேர்ந்தார். ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், பட்டினத்தார் பாடல்கள், வள்ளலாரின் திருவருட்பா மனப்பாடம், இவரது தமிழ் புலமையைக் கண்ட நவாப் இராஜமாணிக்கம் அவர்கள் 1934-ஆம் வருடம் திருவையாறு அரசுக்கலைக் கல்லூரியில் சேர்த்தார். தமிழ் வித்வான் படிப்பில் முதல் வகுப்பில் தேர்ந்தார்.
குடும்பம்	:	1948-இல் திருமணம். மனைவி எஸ்.டி.எஸ். ஜெய லட்சுமி அம்மாள். திரு. டாக்டர் மு. வரதராஜன் அவர்களின் தலைமையில் திருமணம் நடைப்பெற்றது. (ஒரு மகளும் மூன்று மகன்களும் வாரிசாக உள்ளனர்)
1942	:	போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக தஞ்சையில் 9 மாதம் சிறைச் சென்றார்.
1943	:	மீண்டும் நவாப் இராஜமாணிக்கம் நாடக கம்பெனியில் சேர்ந்தார்.
1945	:	சக்தி கிருஷ்ணசாமியும், கவிஞரும் சேர்ந்து குருநாதர் ஆசியுடன் "சக்தி நாடக சபா"வில் சிறையிலிருந்த போது எழுதிய "கவியின் கனவு" என்ற நாடகத்தை அரங்கேற்றி புகழின் உச்சிக்கு சென்றார். இதில் நடிகர் திலகம் திரு. சிவாஜிகணேசன், திரு. எம்.என். நம்பியார், திரு. எஸ்.வி. சுப்பையா போன்றோர்கள் முக்கிய பாத்திரங்களில் அறிமுகமாகி புகழ் பெற்றனர். சுமார் 1500-க்கும் மேல் நாடகம் நடத்தப்பட்டது.

"கவியின் கனவு ஸ்பெஷல்" என்று திருச்சியிலிருந்து நாகப்பட்டினம் வரை தனியாக இரயில் பெட்டி விடப்பட்டது.

1946 : திருமதி. வி.என். ஜானகி அம்மாளின் முதல் திரைப்படமான 'மோகினி' திரைப்படத்திற்கு வசனம், பாடல்கள் எழுதினார்.

1947 : "நம் தாய்" நாடகம் அரங்கேறியது. புத்தக வடிவிலும் வெளியீடு செய்தார்.

1948 : "லைலா மஜ்னு" திரைப்படத்திற்கு வசனம் எழுதினார்.

1949 : அமரர் கல்கியின் "கள்வனின் காதலி" என்ற திரைப் படத்திற்கு வசனம் பாடல்கள் எழுதினார். இதில் நடிகர் திலகம் திரு. சிவாஜிகணேசன், திருமதி. பி. பானுமதி நடித்தனர்.

1950 : பி. பானுமதி தயாரிப்பில் வெளிவந்த 'விப்ரநாராயண' திரைப்படத்திற்கு பாடல்கள் எழுதி புகழ் பெற்றார்.

1953 : 'மனிதனும் மிருகமும்' என்ற திரைப்படத்தை சொந்த மாக இயக்கினார். இதில் நடிகர் திலகம், மாதுரிதேவி, திரு. கே. சாரங்கபாணி, திரு. டி.ஆர். ராமச்சந்திரன் நடித்தனர்.

1954 : 'மகா புத்திசாலி', 'இன்பம் எங்கே?' போன்ற நாடகங்கள் நடத்தப்பட்டது.

1955 : "சாரங்க தாரா" திரைப்படத்திற்கு வசனம் எழுதினார்.

1956 : 'ஆகஸ்ட் புரட்சி' இந்திய விடுதலை போரில் கலந்து கொண்டார்.

1957 : 'அரவிந்தர்' மேடை நாடகம் நடத்தப்பட்டது.

1960 : காங்கிரஸ் கட்சிக்கு மும்முரமாக பாடுபட்டார். பெருந் தலைவர் கு. காமராஜ் தலைமையில் வழிநடந்தார்.

1962 : இந்தியா - சீனா யுத்தத்தின் போது 'சிங்கநாத கேட்குது சீன நாகம் ஓடுது" என்ற டாக்குமெண்டரி படத்தை சொந்த செலவில் தயாரித்து தமிழ்நாட்டின்

பட்டிதொட்டிகளிளெல்லாம் திரையிடப்பட்டது. இதில் நடிகர் திலகம் மற்றும் புகழ்பெற்ற நடிகர்கள் அனைவரும் நடித்தனர்.

1963 : 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்படத்திற்கு வசனம் எழுதி புகழ் பெற்றார். மா.பொ.சி. கதை இந்த படத்தை பி.ஆர். பந்துலு இயக்கிய இந்த படத்தில் நடிகர் திலகம் வ.ஊ.சி வேடமேற்று புகழ் பெற்றார்.

1964 : 'வானமுதம்' என்ற கவிதை தொகுப்பு புத்தகத்தை பெருந்தலைவர் காமராஜர் தலைமையில் கவிஞர் கண்ணதாசன் முன்னிலையில் வெளியிடு செய்தார்.

1964 முதல் 1968 வரை : தமிழ்நாடு சட்டசபையில் மேலவை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

1965 : சிறந்த வசனகர்த்தாவுக்கான தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் விருது வழங்கப்பட்டது. (தற்போதைய கலை மாமணி விருது)

1966 : 'காந்தியுகம்' கவிதை தொகுப்பு வெளியீடு.

1968 முதல் 1976 வரை : இயல் இசை நாடக மன்ற செயலாளராக பணியாற்றினார்.

1972 : மகள் திருமணம் பெருந்தலைவர் காமராஜர் சீரிய தலைமையில் புரட்சிதலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் திருமணம் நடைப்பெற்றது. மணமகன் தமிழ் பேராசிரியர் கோ. கண்ணர் ஆவார்.

1973 : தேச விடுதலை 25-ஆம் ஆண்டு நிறைவை போற்றும் வகையில் பாரத பிரதமர் இந்திராகாந்தி அவர்களால் தாமிர பத்திர விருது வழங்கப்பட்டது. 'வீரசுதந்திரம்' நாடகம் நடத்தினார். (தேசத்திற்காக பாடுபட்ட தியாகிகளின் வரலாறு)

1974 : "கவியின் குரல்", 'சிரிப்பதிகாரம்', 'கவியின் கனவு' (4வது பதிப்பு) போன்ற நூல்களை வெளியிட்டார்.

1975 : சிறந்த கதை வசனகர்த்தாவுக்கான டெல்லி சங்கீத நாடக சங்கத்தின் ஜனாதிபதி விருது பெற்றார்.

1976 : "மகாபுத்திசாலிகள்', 'இந்தியா எங்கே?' புத்தகங்கள் வெளியீடு செய்தார்.

1977 : 'உலக நாடகம்' (World Stage) மாத இதழ் வெளியீடு செய்தார்.

1979 : கடைசி நிகழ்ச்சி 08.08.1979-இல் சென்னை வானொலி நிலையம் வழங்கிய விவ்தபாரதியின் சிறப்பு தேன்கிண்ண நிகழ்ச்சிக்காக ஒலிப்பதிவில் கலந்து கொண்டது. (அவர் இறந்த நாள் அன்று ஒலிபரப்பப் பட்டது)

10.03.1979 : மார்ச் 10.03.1079 அன்று மாரடைப்பால் காலமானார்.

10.05.1979 : சிறந்த எழுத்தாளருக்கான 1979-ஆம் ஆண்டு 'பாரதிதாசன் விருது' தமிழக அரசால் வழங்கப் பட்டது.

❈

உள்ளே....

1. முன்னுரை 9
2. காதல் செடியும் கல்யாண இடியும் 15
3. நகைச்சுவை - ஆராய்ச்சி 47
4. உலகம் சிரிக்கிறது 59
5. தலைவர்கள் ஜாக்கிரதை! 140
6. சிரிக்காதவர் மாநாடு! 170
7. பட(ம்) முடியாது இனித் துயரம்... 189

முன்னுரை

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு' என்றார் மகாகவி பாரதியார். நமது நெஞ்சங்களை மட்டுமல்லாமல், பிற நாட்டு நல்லறிஞர் நெஞ்சங்களையும் அள்ளும் ஆற்றல் பெற்றது அருமைச் சிலப்பதிகாரக் காப்பியம். இனிமேல் அத்தகைய மாமணி ஆரங்களைப் படைக்கும் அவசியமும், ஆற்றலும் நமக்கு ஏற்படுமா என்ற கேள்விக்குரிய பதிலை, காலந்தான் கூற வேண்டும். சிலப்பதிகாரம் போன்ற பல மணி ஆரங்களை நாம் படைக்காவிட்டாலும், நம்மால் முடிந்த ஏதோ சிறுசிறு பணியாரங்களையாவது அவ்வப்போது படைப்பது நமது கடமை!

கடந்தகாலச் சிறப்பை நாள் தவறாமல் பேசிக் கொண்டிருப்பதைவிட, ஏதேனும் ஒரு புதிய பணியைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தால், 'சிரிப்பதிகாரம்' என்ற இந்தப் பணியாரத்தைச் செய்தளிக்கிறோம். நாம் செய்யும் பலகாரங்களும் பணியாரங்களும் அன்னைக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ என்றெல்லாம் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கக் கூடாது. இந்தச் சந்தேகப் பிசாசு குறுக்கே வந்தால், எந்த ஒரு இலக்கியத்தையும் நம்மால் சமைக்க முடியாது. நம் கடமையைப் பற்றின்றிச் செய்வதே நமது வேலை. பெரிய பெரிய மகா காப்பியங்களையும், சங்க இலக்கியப் படையல் களையும், தங்கக் கலைக்கனிகளையும் உண்டு மகிழ்ந்த தமிழன்னை, ஏதோ இந்த ஏழையின் காணிக்கையையும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்பித்தான் இந்தச் சின்னஞ் சிறு பணியாரத் தட்டினை அன்னையின் திருமுன் படைக் கிறோம்.

எத்தனையோ பெரிய நூல்களையும், சாத்திர அலங் காரங்களையும், தத்துவ அணிகளையும், காவிய மாலை களையும், கல்வெட்டு நகைகளையும், கலை மணிமேகலை களையும் போட்டுக் கொண்டு புதுயுகப் பொலிவுடன்

வாழும் தமிழன்னைக்கு, இந்த ஏழை படைக்கும் இந்தச் சுவையற்ற பொருளும் ஒத்துக்கொள்ளும் என்றே கருது கிறேன்.

இதன் சுவையில் ஏதேனும் குறையிருந்தால் அதற்கு நானேதான் பொறுப்பாளி என்பதை நான் பலபேருக்கு முன் ஒப்புக் கொண்டே ஆகவேண்டும். இல்லாவிடில் எனது வாழ்க்கைத் துணைவியும் - பகைவியுமான சகதர்மிணி சண்டைக்கு வந்துவிடுவாள். 'ஆமாம் எங்கள் வீட்டில் ஏதாவது நல்லது வந்தால் அது அவளுக்குச் சொந்தம். கஷ்டம் வந்தால் அது என் தலையிலே விழ வேண்டும். இது தான் கலியாண மந்திரத்தின் கடைசி இரகசியம் என்பதை எப்படியோ தெரிந்து வைத்துள்ள செந்தமிழ்ப் பத்தினி அவள்.

அதனால் தான் சுண்டல், வடை, சுக்குக் காபி இவைகளைப் போடத் தெரியாமல், கடந்த இருபது ஆண்டு காலமாக ஹார்லிக்ஸ், ஓவல்டின் பிஸ்கட்டுகளைக் கொடுத்தே நவராத்திரிக் கொலுவுகளையும், புரட்டாசி சனிக்கிழமைகளையும் வெற்றிகரமாகக் கொண்டாடி, கஷ்டப்பட்டு சம்பாதித்த ஒரு சிறு பணத்தை நாசமாக்கி வரும் அதாவது பணத்தை தேசியமயமாக்கி வரும், அல்லது கேஷுலிஸமாக்கி வரும், எனதருமை வாழ்க்கைத் துணைவி தான் இதில் இருக்கும் நல்ல சுவைகளுக்கெல்லாம் பொறுப்பு என்பதை முன்கூட்டியே சொல்லி விடுவது நல்லது.

இந்த இலக்கியப் பணியாரத்தில் எந்தச் சுவை எப்படி இருந்தாலும், உப்புச் சுவை மட்டும் ஒரு சிறிதும் குறையாத என்பதை நீங்கள் தாராளமாக நம்பலாம். ஏனென்றால், என் மனைவிக்கு ரொம்பவும் தாராள மனசு. எதையும் குறைத்துக் கொடுக்கத் தெரியாது. பாரி வள்ளலுக்கு அடுத்த சாரி வள்ளல் பரம்பரை. ஆகையால் அவள் தயவில் தயாரான இந்தச் சிரிப்பதிகாரப் பணியாரத்தில் உப்பு என்ற சுவைப்பொருள் அளவுக்கு அதிகமாக இருந்தாலும் இருக்குமே தவிர, ஒரு போதும் குறையாது என்பதைப் பணிவன்போடு முதலிலேயே கூறிக்கொள்ள ஆசைப்

படுகிறேன். இதைப் பொறுத்தமட்டில் அந்த உத்தமியை ஒரு உப்பு சத்யாக்கிரகி என்று போற்றிப் பாராட்டுவிழா கூட நடத்தலாம். போஸ்டர்கூடப் போடலாம்.

என்னவோ அய்யா! பொறுமைமிக்க தமிழ் ரசிகர்களுக்கு ஒரு பெரிய சோதனையாக வருகிறது. இந்தச் சிரிப்பதிகாரப் பலகாரம். 'என்னய்யா இது. சிரிப்பதிகாரம் என்னும் இந்தப் புதுப் பலகாரத்தை தமிழ்த் தாய்க்குத் தானே படைக்கிறாய். அது நன்றாயிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி நாங்கள் ஏன் கவலைப்படவேண்டும்,' என்று ஒரு வினாவைக் கேட்டு, இந்த அரிய முயற்சியின் அவசியத்தை நீங்கள் அலட்சியப்படுத்தி விடக் கூடாது என்று மிக மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எழுத்தாளர் எழுதுவது, சிரமப்படுவது, சாவது, அதற்குப் பின் வாழ்வது, எல்லாமே வாசகர்களாகிய உங்கள் சேமத்தை முன்னிட்டுத்தான் என்பதை, நீங்கள் நம்பியே தீரவேண்டும். ஆம். தமிழ்த் தாய்க்குப் படைக்கும் பலகாரங்களை எல்லாம் அந்தத் தமிழ்த்தாய் விசுவரூபமெடுத்து வந்து சாப்பிட்டு விடுவதில்லையே! தமிழ்த் தாயின் பெயரைச் சொல்லிவிட்டு, நாம் தானே எடுத்து முழுங்குகிறோம்! ஆதலால், தமிழ்த் தாயின் ஏஜெண்டுகளாக அதாவது போலீசுகளாக, பூலோகத்தில் அவதாரம் செய்து, இலக்கியப் பணியாரங்களை எல்லாம் ஜீரணம் செய்துவரும் வாசகப் பெருமக்களாகிய உங்களைப் பெரிதும் வேண்டிக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தானே அவையடக்கம், அணிந்துரை என்ற முறைகளை ஆதியிலிருந்தே பெரியோர்கள் வைத்திருக்கிறார்கள்.

இல்லாவிட்டால் எதற்காக கதையைவிடப் பெரிதான முன்னுரை? அளவுக்கு மீறிய அணிந்துரை? அவசரமிக்க அறிவுரை? நூலைவிடப் பெரிய நுண்ணுரை? இப்படியாக எல்லாவித உரைகளையும் போட்டுப் பக்கங்களை நிரப்புகிறோம்.

'உடலைவிடப் பெரிதான வயிறு - முகத்தைவிட பெரிதான மீசை! பீரங்கியைவிடப் பெரிதான குண்டு! காதை

விடப் பெரிதான கம்மல்! விமானத்தைவிடப் பெரிதான என்ஜின்! இவைகளைப் போல், புத்தகத்தில் அடங்கிய விஷயத்தை விடப் பெரிதான முன்னுரைகள் எல்லாம், ரசிகர்களைக் காக்காய்ப் பிடிக்கும் முயற்சிகளின் விளைவுகள் தானே அய்யா! காக்காய்ப் பிடிக்கும் தொழிலைச் சிலர் கொஞ்சம் மறைவாகச் செய்வார்கள், சிலர் வெளிப் படையாகச் செய்கிறார்கள்!

பிரத்தியட்ச உண்மையான இந்தக் காக்காய்ப் பிடிக்கும் கலையைப்பற்றி, பகிரங்கமாகவே உங்களுக்குச் சொல்லி விட்டு, உங்கள் முழுச் சம்மதத்தைப் பெற்ற பிறகே, இந்த உத்தியைச் செய்கிறோம். ஆகவே இதில் ஏமாற்றுதலும் இல்லை - ஏமாறுவதும் இல்லை. இது ஒரு சமுதாய தர்மம்! இந்த அறத்தை நானும் நம்பித் தொலைக்கிறேன். ஆக, தர்மமும் ஒரு பக்கம் வாழ்கிறது. நம் காக்கையும் ஒரு பக்கம் பறக்கிறது, என்று நிம்மதி கொள்ளலாமே! மேலும் ஆயிரமுகத்தான் அகன்றதாயினும் பாயிரமல்லது பனுவல் அல்லவே! ஆகவே பாயிரத்தை ஆயிரம் வார்த்தைக்குள்ளே அடக்குகிறோம்.

மற்றும் ஒரு செய்தியை மறக்காமல் கூறிக் கொள்வேன். கூறிக்கொள்வேன் என்ன? அவசியம் கூறிக் கொள்ளத்தான் வேண்டும். அதாவது நாட்டில் எங்கு பார்த்தாலும் ஆங்காங்கு பட்டிமன்றங்கள் நடைபெறுகின்றன. சாதாரண குட்டி மண்டபங்களில் சொல்லாத அரிய பொருள்களை எல்லாம் பட்டி மன்றங்களில் பளிச்சென விளக்குகிறார்கள். இன்று எல்லாவித நிகழ்ச்சிகளிலும் பட்டி மன்றம் இடம் பெறுகிறது. ஏதாவது ஒரு மேடை கிடைத்தால் போதும், உடனே ஒரு பட்டி மன்றம் தோன்றிவிடும்! இன்னும் ஒரே ஒரு இடத்தில் மட்டும் தான் இந்தப் பட்டி மன்றம் படையெடுக்கவில்லை.

அதாவது திருமண மண்டபங்களில் புலவர்கள் ஒன்று சேர்ந்து, எது பெரிது? இல்லறமா? துறவறமா? பெண்ணா - மாப்பிள்ளையா? ஆண்மையா - பெண்மையா? உத்தியோகம் பார்க்கும் பெண்ணா? - வேலை கிடைக்காத ஆணா? காதலா

- கடனா! திருமணமா? மறுமணமா? வரதட்சணையா? வராத தட்சணையா? அது கரும் பணமா? வெறும் பணமா? என்ற பொருள் பற்றி, ஒட்டியும் வெட்டியும் பேசும் ஒரு பட்டி மன்றம் இன்னும் துவக்கப்படவில்லை. திருமண வீடுகளில் பட்டிமன்றம் நடத்தப்போகும் பெரியோர்களுக்கு ஒரு விண்ணப்பம். இனி திருமணங்களில் மேற்கண்ட பொருள்களைப் பற்றிப் பெரும்புலவர்களின் பட்டிமன்றங் கள் முழங்க வேண்டும். அப்படி முழங்கினால் இல்லறத்தை ஏற்கும் இளந்தம்பதிகளுக்குப் பட்டிமன்றம் நல்ல பல பாடங் களைச் சொல்லிக் கொடுக்கும். அறம், பொருள், இன்பங் களை வாரி வாரி வழங்கும்.

கலியாண வீடு ஆகையால் நவரசச் சுவையோடு கொஞ்சம் நகைச்சுவையும் ததும்பும் வண்ணம், பட்டிமன்றம் அமைய வேண்டும். அழுது வடியும் அவலச் சுவைகள் அதிகம் இருத்தலாகாது. அதற்குப் பதிலாகப் பெரும் பேச்சுப் புலிகள் நிறைய முன்வர வேண்டும். அத்தகைய பேச்சுப் புலிகளில் மிகச் சிறந்தவர்கள், இந்தப் பேனா சித்திரத்தில் வருகிறார்கள். உயர்திருவாளர்கள் சிரிப்பானந்த அடிகளும், வெறுப்பானந்த வெடிகளும், இட்லர் - பட்லர் - பேபி ராணி - சாதுவன் சாம்பிராணி, கற்பூரம், கண்றாவி கந்தருவன் முதலிய பாத்திரங்கள் வருகிறார்கள். அவர்கள் நடத்திய புகழ்பெற்ற சிரிப்பதிகாரம் என்ற நாடகப் பட்டிமன்றம் நடவடிக்கைகளை அப்படியே உங்கள் திருமுன்பு படைக் கின்றோம்.

படியுங்கள், அவர்களது பாணி பிடித்தால் அவர்களை விடாமல் பிடித்துக் கொண்டுவந்து உங்கள் திருமணங்களில் கெட்டிமேளத்தோடு பட்டிமன்றம் நடத்த ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். அவர்களது முகவரி வேண்டுமா? சிவத்திரு சிரிப்பானந்தவடிகள் மேற்பார்வை, சென்னை பிளாட்பாரம் என்றால் போதும்.

இந்த நூலிலிருக்கும் மற்றொரு எழுத்தோவியம் தலை வர்கள் ஜாக்கிரதை என்பது. இந்தத் தலைவரின் தலைமை யிலே திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்.

மற்றும் படாதிபதி, கலைமன்னன், பரதேசியார், கலைமணி இளையராஜா, உதயகுமாரன் போன்ற எத்தனையோ சிரிப்புப் பாத்திரங்கள் வருகின்றன.

அனைத்தும் களிம்பு நீக்கப்பட்டு, களிப்பினைப் பரிமாறிக் கலகலப்பினை உண்டாக்கும் சலசலப்பான பாத்திரங்கள்! நீங்களே படித்துப் பாருங்கள். பாத்திரங்களுக்கும், படிப்பவர்களுக்கும் இடையில் வீண் சாத்திரங்களைப் பற்றிப் பேசினால் ஆத்திரந்தானே வரும். ஆனால் ஒன்று, வாசகர்களுக்கு அத்தகைய ஆத்திரத்தை மூட்டிவிடுவதில்தான் எழுத்தாளனின் ஆற்றலே அடங்கியிருக்கிறது.

ஆமாம் அய்யா! இந்தக் காலத்தில் ஒரு எழுத்தாளன் என்பவன், வாசகரின் மனத்தைப் பிடித்தால் மட்டும் போதாது, மார்க்கட்டையும் பிடிக்க வேண்டும்! காக்காய்ப் பிடித்தால் மட்டும் போதாது. காசையும் பிடிக்கவேண்டும். வாழ்க காக்காய்! வாழ்க காசு! வாழ்க காசு கொடுத்து வாங்கும் கலிகால வாசக வள்ளல்கள்!

எஸ்.டி. சுந்தரம்

காதல் செடியும் கல்யாண இடியும்

(ஒரு சிறு நாடகம்)

காட்சி - 1

இடம் : பேயின் தனி இடம்

காலம் : பகல்

(பேபி ஒரு புது அலை - ராணி அந்த அலையைப் புரட்டும் தென்றல்)

(பேபியும் ராணியும் சேர்ந்து பாடுகிறார்கள்)

மோட்டாருக்கு பேட்டரிபோல மனசுக்கு வேணும் காதல்
மாட்டை ஓட்டும் சாட்டைபோல மனுசனை ஆட்டுது காதல்
பூட்டிய குதிரை கடிவாளம் போல் பெண்ணை ஆட்டுது காதல் நம்
பாட்டன் பாட்டியின் பரிகாசத்தில் பல்லைக் காட்டுது காதல்
ராக்கெட் வேகம் குறிதவறாது ரிம்மோட் கன்ட்ரோல் காதல்
பாக்கெட் நிறையப் பணமிருந்தாலே போயிங் ப்ளேன்தான் காதல்
வட்டி இல்லாமல் வாங்கியகடனே வாழ்வில் காதல் காதல்
இஷ்டப்பட்டே இருவரும் ஒன்றாய்க் கட்டப்படுவது காதல்
இட்லியும் கார சாம்பாரும்போல் என்பசி தீர்ப்பது காதல்
கட்டுக்கடங்கா வாலிபநதியில், கட்டும் அணையே காதல்.

(பாட்டு முடிந்ததும்)

பேபி : *எப்படி ராணி! என் நடிப்பு?*

ராணி : *என் நடிப்பு எப்படி? இனிமேல் என்னை ராணி என்று கூப்பிட வேண்டாம் பேபி, லைலா என்று கூப்பிடு, ஆ! என் மஜ்னு.*

(மண்டியிட்டு நடித்தல்)

பேபி : ஆ! லைலா, நம்ம காதல் என்னும் 'டபுள் என்ஜின்' ஏரோப்ளேனுக்கு நாமிருவரும் இரண்டு இறக்கைகள் கண்ணே!

ராணி : அய்யோ! ஏரோப்ளேனா? யாராவது வில்லன் ஹைஜாக் பண்ணிவிட்டால்.

பேபி : பயப்படாதே. அதற்கும் மேலே ஒரு ஹையர் ஜாக் வைப்போம். இது ஸ்பேஸ் ஏஜ். மேலே மேலே போய்க் கொண்டே இருப்போம். கண்ணே! உடல் நான். அதற்கேற்ற பட்டு ஆடை நீ.

ராணி : ஆ! பேபி புத்தம் புதிய கற்பனையெல்லாம் பொங்கித் ததும்புகிறதே உனக்கு!

பேபி : ராணி! உன்னைக் கண்டதும் நான் கவியரசன் ஆகிவிடுகிறேன். உன் கடைக்கண்ணிலே கவிதையின் இடைவெளியைக் காணுகிறேன். உன் பார்வையின் கோர்வையிலே பாட்டின் படை வீட்டினைப் பார்க்கிறேன். எல்லையில்லா வானம் நீ! கொள்ளையின்பக் கானம் நீ! வானவில் என்றால் வானவில் நொடியில் கலைந்துவிடும். தோகை மயில் என்றால் பெண் மயிலுக்குத் தோகை இல்லை. ராணி! நீ புதுசா பூட்டின பியட் கார். நான் தான் அதற்கேற்ற டன்லப் டயர். நீ வீடு - நான் ஜன்னல். நீ ரேஷன் - நான் அரிசி, நீ பணம் - நான் பதவி, நீ எலக்ஷன் - நான் கலெக்ஷன், நீ பதவி - நான் லஞ்சம், நான் பிளாக் மார்க்கெட் - நீ இரும்புப் பெட்டி, நீ நெருப்பு - நான் சாம்பிராணி.

ராணி : நான் டாக்டர் - நீ நோயாளி.

பேபி : நான் அமெரிக்கா - நீ இங்கிலண்ட்.

ராணி : நான் ப்ரான்ஸ் - நீ ஈஜிப்ட்.

பேபி : இல்லை கண்ணே - நான் இந்தியா - நீ இமயமலை. இதைப் பிரிக்க எந்த ஜின்னாவாலும்

முடியாது கண்ணே! நீ பொங்கி வரும் காவேரி - நான் மேட்டூர் டாம். எந்த டேம், நான்சென்ஸும் நம்மைப் பிரிக்க முடியாது.

ராணி : *சரி போதும். அந்த சோகரசப் பாட்டையும் பாடித் தொலைத்துவிடு. அதுதான் உன் பாத்திரத்துக்கு முக்யமான சீன். உம்... எங்கே தாடி.... தாடியைக் கட்டிக் கொண்டே பாடினாத்தான் உனக்கு மேடையிலே சுலபமாயிருக்கும்... உம்... நடி கண்ணே நடி! உலகமே ஒரு நடிப்பு மேடை...*

பேபி : *இதோ... எல்லாம் ரெடியாயிருக்குது கண்ணே!*

(மேஜை மீதிருந்த தாடியை எடுத்துக் கட்டிக் கொள்ளுதல்)

பாட்டு

உருகுதடி தாரகைகள் வானிடிந்து நடுங்குதடி
எரியுதே உலகமெல்லாம் - இனி நான்
போவது மெங்கே வழி எங்கே

பறந்து செல்லும் பைங்கிளியே மறதியாகுமா?
இது நீதியாகுமா?
விதி எதிர்த்து அழித்தாலும் உடல் புகைந்து போனாலும்
ஏழுகடல் எரிந்தாலும் உன் நினைவினிமாறாதே. என் ஜீவனே

(ஒரே சோகமான இருகுரல் பாட்டைப் பாடுகிறார்கள். மேடையில் உள்ளிருந்தே வேலைக்காரன் சாமி, கதவைத் தட்டுகிறான்)

சாமி : *பேபி... பேபி... பேபி... கதவைத் திறப்பா! பேபி.. பேபி...*

பேபி : *கடங்காரன் எவனோ இப்ப வந்துட்டானே. பாலிலே உப்பு போட்ட மாதிரி.... சரி, ராணி கொஞ்ச நேரம் அப்படிப் போய் மறைந்திரு. பிறகு நாடகத்தைத் தொடரலாம்.*

(கதவைத் திறக்கிறான்)
(சாமி உள்ளே வருகிறான்)

பேபி : *அடே கிழவா ஓல்ட்மேன்! என்னப்பாயிது! சுத்த முட்டாளாயிருக்கியே. கலையின் பெருமையைப் பற்றி கடுகளவாவது உனக்குத் தெரிந்திருந்தால் இப்படிக் கஷ்டம் கொடுத்திருப்பாயாடா காட்டேரி (சாமி சிரிக்கிறான்) சிரிக்காதே. இது கோபம்!*

சாமி : *என்ன பேபியிது! கானாவிலே ஆரம்பிச்சு கடைசி வரையிலும் கன்னாபின்னான்னு, கங்கு கரை யில்லாமே, கவியா அளந்து கொட்டறே?*

பேபி : *மோனை தவறாது மொழியும் முத்தமிழ்ச் சிங்கம்! அழகின் எழிலன்! அகராதித் தமிழன்! ஆனந்த மோகன்! இந்த பேபியின் ஹாபி நாடகம்! அதைக் கெடுத்துவிட்டாய் நீ பாபி!*

சாமி : *என்னைப் போல அன்னக் காவடிக்கு உன் அடுக்குத் தொடர் விளங்காது பேபி, சும்மா எப்பவும் போல தமிழ்லேயே பேசு. ஆமாம். இதெல்லாம் என்னப்பா ஒரே தாடி மயமா யிருக்குது.*

பேபி : *அடே ஓல்ட்மேன்! இந்தத் தாடியின் மகிமை யைப் பற்றி உனக்கென்னடா தெரியும்?*

சாமி : *எனக்கும் கொஞ்சம் தெரியும் பேபி. இந்தத் தாடி இல்லாமலிருந்தா அந்த சாட்சாத் முருகப் பெருமான், அந்தக் குறவள்ளியைக் கல்யாணம் செஞ்சுட்டிருக்க முடியாது. இந்தப் பாழாப் போன தாடி இல்லாட்டி நம்ம நாட்டிலே மதச் சண்டையே இருந்திருக்காது. இது மாத்திரமா இந்தத் தாடி இல்லாட்டி பல போலிப் பண்டாரங்களெல்லாம் பெரிய மனுஷன் போல பேசமுடியுமா இந்த நாட்டிலே! எல்லாம் இந்தத் தாடியின் மகத்துவம் தானே பேபி.*

(ராணி வருகிறாள்)

சாமி : அடே! இந்தக் குட்டித்தாடி யார்?

பேபி : இவன் என் ப்ரண்ட் மிஸ்டர் ராஜா!

சாமி : ராஜாவா - எந்த ஊர் ராஜாப்பா? இவரு ராணி எங்கே?

பேபி : முட்டாள்! நாங்கள் அடுத்தவாரம் காலேஜ்லே லைலா மஜ்னு நாடகம் போடப்போகிறோம். அதுக்காக ஒத்திகை நடத்துகிறோம்.

சாமி : நாடகத்திலே இது என்னா கட்டமப்பா!

பேபி : இது ஸ்வாரஸ்யமான காதல் கட்டமடா!

சாமி : இது என்ன எழவுக் காதல்... தாடிக் காதல்.

பேபி : அடே! உனக்கொன்றும் தெரியாது. காதலர்கள் தாடியோடு சந்திக்கும் ஒரு பயங்கரமான கட்டம் இது. பரபரப்பான சுறுசுறுப்பான விறுவிறுப் பான காட்சி!

சாமி : அடப்பாவமே! என்னா பேபியிது. உங்கப்பா கோடீஸ்வரர். அவருக்கு பிள்ளையா வந்த நீ, இப்படி எல்லாம் பிச்சைக்கார வேஷம் போட்றது நல்லாவா இருக்குது. எனக்கொன்னும் பிடிக்கலே பேபி. என்ன தம்பீ - நீங்க சொல்லுங்க - பணக்காரர் புள்ளை பிச்சைக்கார வேஷம் போடலாமுங்களா?

பேபி : பணக்காரன், ஏழை என்கிற வித்தியாசம் இந்த பேபியிடம் கிடையாது. நான் ஒரு பெரிய சமரஸ வியாதி.

சாமி : என்னா... என்னா! சமரஸ வியாதி - என்னாப்பா இது. இதுவரையிலும் கேள்விப்படாத புது வியாதியாயிருக்குது!

பேபி : சம.... ரஸ.... வியாதி....!

சாமி : பரவாயில்லை பேபி! வியாதியிலேகூட ஒரு சமரஸ வியாதி இருக்குதே. எனக்குத் தெரியலே

பாரேன். அது சரிங்க... நீங்க சமரஸ வியாதி, இவர் என்னா வியாதி? சம்சார வியாதியா?

பேபி : வியாதியாவது வெண்டைக்காயாவது! நாடகத்திலே இவர்தான் கதாநாயகியா வரப்போகிறார்!

சாமி : என்னா எளவு, இவரா! தாடியுங்கீடியுமா இருக்கு!

பேபி : தாடி! இது ஒரு மீடியம் ஆப் லவ். ஹிப்பியுகச் சுப்பிகளிடம் உப்பியிருக்கும் காதல். எங்க ராஜா ஆக்ட் பண்ணினால், பெண்களெல்லாம் பிச்சை வாங்கணும். பார் ஆக்ட் பண்றோம். நீயே பாரேன். உம், ராஜா, கமான்... ஆ... மை-டியர் டிலைலா!

ராணி : ஓ! மை ஸ்வீட் ஸாம்ஸன்!

சாமி : உம்... பேஷ் பேஷ் காதல் கட்டம் கனஜோரா யிருக்குதே!

பேபி : ஆம்! காதலென்பது தொட்டதும் கெட்டுப் போகும் ஊறுகாயல்ல. அது வெட்ட வெட்ட ஊறும் அமுத ஊற்று. சாமி! காதலென்னும் ஜீவநதி உற்பத்தியாகும் இடம் எது தெரியுமா!

சாமி : எது? காலேஜ் கட்டிடங்களா?

பேபி : நீ ஒரு முட்டாள்! தியாகமென்னும் மலையில் தான் ப்ரேமை அருவி பொங்கி எழுகிறது. காதலுக்காக உலகம் உயிரைவிட வேண்டும். அது ஒரு கலை.

சாமி : ஓகோ! உயிரை விடறத்துக்குத்தான் கலைன்னு பேரா? இந்தக் கலை வளர்ந்தா உலகத்திலே. ஜனத்தொகை குறையும்!

பேபி : ஆம்! அந்தக் கலையை உலகுக்குப் பரப்ப வேண்டும். காதல், தியாகம், கலை இதுவே என் லட்சியம். இதற்காக மஜ்னுவைப் போல் மடிய வேண்டுமா? ரோமியோவைப் போல் சாக

வேண்டுமா? கோவலனைப் போல் கொல்லப்பட வேண்டுமா? நான் தயார்!

சாமி : என்ன பேபி! ஆவேசம் வந்தவன் மாதிரி பேசறே? புலி வேஷம் மாதிரி ஆடறே!

பேபி : ஆம். அமரகாதலைப் பற்றி நினைத்தால் ஆவேசந்தான் வருகிறது! போடா! இந்த தெய்வீகக் காதலைப்பற்றி உனக்கு ஒன்றும் தெரியாது. புரியாது. விளங்காது.

சாமி : சும்மா இருப்பா. இதெல்லாம் எனக்கு முப்பது வருஷத்திற்கு முந்தியே புரிஞ்சு போன விஷயம். இந்த எழவெடுத்த காதல் இருக்குதே, காதல்... அது ஏழெட்டுக் குட்டிச் சாத்தான்களை உண்டாக்கி விட்டு, இப்போ ரிடயர் ஆயிடுச்சு. இப்போ அதுக்கு நான் பென்ஷன் குடுத்துக் கிட்டிருக்கேன்.

பேபி : சரி. அலவன்ஸும் சேர்த்துக் குடு போ. அது சரி - ஓல்ட்மேன்! நீ இப்போ எங்கே வந்தே, எதுக்கு வந்தே, ஏன் வந்தே?

சாமி : நானா? நீ எங்கே இருக்கே? என்ன செய்யறே? எப்படிப் படிக்கிறேன்னு பார்க்கலாம்னு வந்தேன்? அது கிடக்கட்டும் பேபி. உங்கப்பா - உங்கிட்டே ஒரு முக்யமான விஷயம் சொல்லிட்டு வரச் சொன்னாரு.

பேபி : அது என்ன முக்கியமான விஷயம்!

சாமி : உனக்குப் பெண் பார்க்கப் போகணுமாம் நாளைக்கு. ராத்திரியிலே எங்கேயும் போகாம நல்லாத் தூங்கச் சொன்னாரு.

பேபி : முட்டாள் - எனக்கு வேறே பெண் எதுக்கு?

சாமி : இப்படியே நாடகமாடிக்கிட்டு இருந்திடலாம்னு இருக்கியா?

பேபி : *கலையே என் உயிர். கலைக்காகவே நான் வாழ்கிறேன். கலைவாணிதான் என் காதலி. மற்றப் பெண்களை மனத்தாலும் நான் பார்க்க மாட்டேன். எல்லாம் வல்ல ஈசன், என் அப்பன் தில்லை வாழ் நடராசன் கொடுத்த தலையை மறந்து கல்யாணம் செய்து கொள்ள மாட்டேனடா கசடனே! சரி சாமி நேரமாகுது. ராஜா கோவிச்சுக்குவான். நீ போ. ஒத்திகை முடியட்டும் காலையிலே வா. உபத்திரவப் படுத்தாதே! இந்தா இதை வைத்துக் கொள். போய்த் தொலை. (பணம் தருகிறான்)*

சாமி : *ஆ! பத்து ரூபாய் - பலே. இனிமே ஒரு நாளைக்கு நூறு தரம் நாடகம் நடத்தப்பா - அமர்க்களமா நடத்துங்க, காலா காலத்திலே கல்யாணம் நடந்திட்டா இந்தக் காதல் ஒத்திகை வேணாம். உண்மை நாடகமே நடத்தலாம். குட் நைட் பேபி.*

(கிளம்புகிறான்)

பேபி : *ஓல்ட்மேன், யார்கிட்டேயும் சொல்லாதே ஓல்ட்மேன் நீ ஒரு கோல்ட்மேன்!*

சாமி : *ஆமாம். ஜாக்ரதை. உன் காதல் பீல்டிலே கலியாண வேலிபோட்டு பயிர் பண்ணு. குட்பை!*

(போனபின்)

பேபி : *ராணி*

ராணி : *போதும் தொடாதே!*

பேபி : *என்ன ராணி! உண்மையிலேயே நடிக்கிறே?*

ராணி : *யார் பெண்? நாளைக்குப் பார்க்கப் போகிறாயாமே!*

பேபி : *ராணி! அப்பாவின் காசாசைக்காக, நான் இந்தக் கல்யாண விலங்கில் மாட்டிக் கொள்ள மாட்டேன். கொஞ்சம் நாள் பொறு. வீட்டில்*

மெதுவாகத் திருடித் திருடி 2 லட்சம் ரூபாய் சேர்த்து விடுகிறேன். பிறகு நாம் இருவரும் காஷ்மீர், சைனா, ஜப்பான் எங்காவது பறந்து விடலாம். மனிதன் ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்ததே நமக்காகத்தான் ராணி.

ராணி : (அழுது கொண்டு) கேவலம் ஏழைப் பாடகி தானே என்று எண்ணி என்னைக் கைவிட்டுவிட மாட்டாயே பேபி!

பேபி : ஆகா! இந்த உலகம் புரண்டாலும் சரி, இந்து மகா சமுத்திரம் காய்ந்தாலும் சரி, இமயமலை வெடித்தாலும் சரி, இன்றைய இந்தியா இருப தானாலும் சரி, இந்த பேபி இந்த ராணியை கைவிடமாட்டான் கண்ணே! நம்பு என்னை! இது தேர்தல் வாக்குறுதியல்ல! தெளிவான காதலின் தெய்விகக் குரல்!

ராணி : உன் அப்பா பார்க்கணும்னு சொன்ன பெண் யார்?

பேபி : அந்த வாணிதான் ராணி!

ராணி : யார் வாணியா! எனக்கு ரொம்பத் தெரியுமே!

பேபி : ஐயோ! பெண்ணா அவள். அவளைப் பார்த்தாலே எனக்கு பயமாயிருக்கிறது. அவளையாவது நான் கல்யாணம் செய்து கொள்வதாவது! ராணி நீ வருந்தாதே, நான் பி.ஏ. பாஸ் பண்ணினால் தானே வாணியை அவள் தாத்தா எனக்குக் கொடுக்கச் சம்மதிப்பார். நான் பாஸ் பண்ணப் போவதுமில்லை. வாணி என்னைக் கலியாணம் செய்துகொள்ளப் போவதுமில்லை.

ராணி : இந்த வருஷம் பரீட்சை எழுதியிருக்கிறாயே!

பேபி : உம். என்னமோ எழுதியிருக்கேன். அப்பா திட்டு வாரேன்னு பரீட்சைக்குப் போனேன். எல்லாப் பேப்பர்லேயும் நிச்சயம் சைபர் மார்க்தான்.

ராணி! என்னை நம்பு. உனக்காகவே நான் தவறாமல் எல்லாப் பரீட்சையிலேயும் நல்லா தோல்வி அடை வேன் கண்ணே! அதுவே என் வெற்றி!

ராணி : *ஆஹா! எனக்காக எவ்வளவு கஷ்டப்படுகிறாய் பேபி! இதே அன்பு கடைசி வரையிலும் இருக்கட்டும்.*

பேபி : *ஓ கட்டாயம் கடைசிவரை பாஸ் பண்ண மாட்டேன். கடைசி என்ற வார்த்தையே நம் காதல் அகராதியில் இல்லை கண்ணே!*

I Love you ஜுலியட்.

Yonder the east; Juliet is the Jull Moon

(சந்திர சூரியர் என்ற மெட்டில் இருவரும் காதல் பாட்டு பாடுகிறார்கள்)

சந்திர சூரியர் ராக்கட்டு மாறினும்
வீழினும் நமக்கென்ன
இந்த இன்பமே சொந்தமதானால்
வேறுலகே வேண்டாம்.

காட்சி - 2

இடம் : மகேஸ்வர பூபதி, வாணியின் வீடு.

காலம் : பகல்

(சாமி, பேபி, பூபதி வருகிறார்கள். மகேஸ்வர பூபதி எதிர் கொண்டு அழைக்கிறார்)

மகேஸ்வர பூ : *வாங்க, வாங்க பூபதி! வாப்பா பேபி வா. உட்காருங்க பூபதி. உட்காரப்பா பேபி உட்காரு.*

பூபதி : *நம்ம பேபி ரொம்ப கூச்சப்பட்டவன். வரவே மாட்டேன்னு பிடிவாதம் புடிச்சும் நான் கொண்டு வந்துட்டேன். பெரியவர்களைக் கண்டால், ரொம்ப பயபக்தியோட நடந்து கொள்வான். உட்கார்ரா பேபி. நம்ம தாத்தா - 'சும்மா உட்கார்'*

பேபி : Yes, *தாத்தா,* I am shy fellow - *பயம் பக்தி - அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எல்லாம் உள்ளவன். அது பெண்களுக்கு மட்டுந்தான் சொந்தமா? ஆண்களுக்கும் வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையுள்ளவன். நான் நல்லவன். நாடறிந்தவன். நற்கலைஞன் - நாளைய கவிஞன்!*

ம, பூ : *சரி! உட்காரப்பா. அம்மா வாணி....*

(பேபி பயந்து உட்காருகிறாள்)

ம, பூ : *வாணி! வாம்மா.*

வாணி : *ஏன் தாத்தா.*

ம, பூ : *பார், மாமா வந்திருக்கார். பேபி வந்திருக்கு.*

வாணி : *ஓ! மாமாவா! வணக்கம் மாமா! யாரது.. பேபி கூட வந்திருக்கா - என்னப்பா பபூன் பேபி*

சௌக்கியமா! தாத்தா - எங்க காலேஜிலே பேபிக்கு பபூன்னு பேரு.

ம, பூ : அப்படியா - ஓவல்டின் கொண்டு வாம்மா!

வாணி : ஆகட்டும் தாத்தா.

(மேஜை மீதிருந்த பிளாஸ்கிலிருந்து ஊற்றித் தருகிறாள்)

பூபதி : அற்புதமாயிருக்கு - பேஷ் - வாணிக்கு ஓவல்டின் கூட போடத் தெரியுமா?

ம, பூ : என்னப்பா பேபி - சாப்பிடு - ஓவல்டின் கேக் எல்லாம் சாப்பிடு.

பேபி : தாத்தா! இந்த மேல்நாட்டு உணவுகள் எல்லாம் எனக்கு பிடிக்காது தாத்தா, நான் அவைகளை வெறுக்கிறேன்.

ம, பூ : பின்னே என்னதாம்பா உனக்குப் பிடிக்கும்?

பேபி : சொல்லட்டுமா தாத்தா! எனக்கு சுத்தமான சுதேசிப் பலகாரமான இட்லிதான் தாத்தா பிடிக்கும், பாருங்க தாத்தா, இந்த இட்லியின் மகிமையைப் பற்றி ஒரு கவிகூடப் பாடியிருக்கேன். அதைப் பாடட்டுமா தாத்தா!

பூபதி : டே! பேபி...

ம, பூ : பரவாயில்லை எங்கே பாடு பார்ப்போம்.

(உடனே பாடுகிறான்)

பேபி : யாமறிந்த உணவுகளில் இட்லியைப் போல்
இனிதாவதெங்கும் காணோம்
தேமதுர வடநாட்டு ஜாங்க்ரி எல்லாம்
தென்னகத்து இட்லியின்முன் நிற்குமோதான்?
நாமமது ஸ்வீட் என்று நெய்யே இன்றி
நாக்குகளை அறுப்பதனால் என்ன லாபம்?
சேமமுற சாப்பாடு செழிக்க வேண்டில்
சேர்ந்தெல்லாம் இட்லிகளை ஆதரிப்போம்

இட்லி, இட்லி. இட்லி இட்லி
இட்லி என்று பாடுவோம்
சுற்றி நல்ல எண்ணை ஓட
சூட்டுடனே தள்ளுவோம்.

ம, பூ : *போதும், போதும், போதும்! பேபி இட்லியைப் பற்றி இவ்வளவு தூரம் புகழ்ந்து பாடிட்டு, நீ ஏன் கருகிப் போன தோசை மாதிரி ரொம்ப களைச்சுப் போயிருக்கே?*

பேபி : *ஆமாம், கொஞ்ச நாளாக அறிவுக்கு வேலை மூளை கொதிப்பு! மண்டைக் கொழுப்பு! மன நெருப்பு! எல்லாம் வெறுப்பு! எதுக்கு இந்தப் பிறப்பு?*

ம, பூ : *இந்த வருஷம் பரீட்சையில் எல்லாப் பேப்பரும் நல்லா எழுதியிருக்கியோ?*

பூபதி : *ஓ! எல்லாம் நல்லாத்தான் எழுதியிருப்பான்! சொல்லேண்டா பேபி; தாத்தா கேட்கிறார்.*

பேபி : *உம், என்னமோ எழுதியிருக்கேன், ஆனால்...*

ம, பூ : *இந்த ஆனால் ஈனால் என்று நீட்டிப் பேசுவதே எனக்குப் பிடிக்காது. கச்சிதமாப் பேசணும். வாலிபனைப் போல தைரியமாப் பேசணும்.*

வாணி : *ஆமாம் பேபி! தாத்தாவிடம் இப்படியெல்லாம் விளக்கெண்ணை மாதிரிப் பேசக்கூடாது. தெளிவாக தைரியமா, கண்டிப்பா. கணக்காப் பேசணும்.*

பேபி : *கரெக்ட்.... சரி... தாத்தா இந்த வருஷம் பாஸ் பண்ண முடியாது தாத்தா.*

ம, பூ : *ஏன், ஏன், ஏன்?*

பேபி : *என் உடம்பு சரியாயில்லை. கணக்குப் பேப்பர் அன்று கண் வலி! சைனஸ் பேப்பர் அன்று ஜலதோஷம்! தமிழ் பேப்பர் அன்று தலைவலி!*

சே, சே, ரொம்ப மோசம் தாத்தா,, வரவர எஜுகேஷன் ரொம்ப ஹோப்லஸ் - கல்வி! ஒரு கண்றாவி! இந்த பரீட்சை என்ற பிசாசு ஒழிந்தால் தான் பாஸ் பண்ண முடியும் போலிருக்கு தாத்தா. உண்மையாச் சொல்லப் போனா இந்த பாழும் பரீட்சை ஒழிந்தால்தான் நமது பாரதநாடு உருப்படும், வாட் யூ சே வாணி?

வாணி : எப்படித் தாத்தா பேபியின் பிரசங்கம்?

ம, பூ : ஓகோ! பரீட்சையின் எதிரிகளில் நீயும் ஒரு ஆளா தம்பி!

பேபி : ஆமாம் தாத்தா! என்னைப்போல் புத்திசாலிகளெல்லாம் கூட பெயில் ஆகறதுக்கு, இந்த பரீட்சை தானே காரணம். ஆகையால் அது ஒழிக! நான் வாழ்க! பரீட்சை எதிர்ப்பு இயக்கத்திற்கு நான்தான் தாத்தா தலைவன். தாத்தா, உண்மையாகச் சொன்னா... சீனாவும் அமெரிக்காவும் ஒத்துப் போனாலும் போகலாம். ஆனால் மாணவர்களும் பரீட்சையும் ஒருக்காலும் ஒத்துப் போகவே முடியாது. இது சத்தியம்.

ம, பூ : பேஷ்... பேஷ்... பேபிக்கு பேசத் தெரியாது என்கிறீர்களே பூபதி - பெரிய ஆள் போல இருக்கே. எழவு அரசியல் வியாதிபோல உளறித் தள்ளுறானே?

வாணி : ஆமாம் தாத்தா இந்த அரசியல் அதிசயத்தை ஆப்பிரிக்காவுக்குத்தான் அனுப்பணும்.

பேபி : வாணி புத்திசாலி! பாருங்க தாத்தா! பரீட்சை ஒரு தொத்து வியாதி, காலேஜ் ஒரு டி.பி. ஆஸ்பிடல்.

பூபதி : பேபி என்னடா இது, பேசாமலிரு. அவன் அப்படித்தான் மாமா - தமாஷாப் பேசுவான். எல்லாப் பேப்பரும் நல்லாத்தான் எழுதியிருக்கான் கட்டாயம் பாஸ் பண்ணிவிடுவான்.

பேபி : இம்பாஸிபிள் தாத்தா! ஒருக்காலும் முடியாது. பாஸாவது பாஸ், அவுட்பாஸ்தான். டாக்டர் கைவிட்ட கேஸ்தானா பிழைக்கப் போவுது!

ம, பூ : பேபி நல்லா நடிக்கிறானே!

பூபதி : ஓ! நல்லாப் பாடுவான். ஏன், நம்ம வாணிக்குக் கூடத் தெரியுமே.

வாணி : ஆமாம். பேபி பபூன் வேஷம் போட்டால் ப்ரமாதமாயிருக்கும் தாத்தா! பேபி, ஒரு கலைப் பைத்தியம்!

ம. பூ : எதிலாவது ஒரு பைத்தியம் பிடிக்கணும். இளம் பிராயத்திலே இப்படித்தான்.

பேபி : ஆமாம் தாத்தா! கலை! கலை! நாமெல்லாம் கலைகளை வளர்க்க ஈடுபட்டால்தான், கலாதேவி யின் கண்ணீரைத் துடைக்க முடியும்.

வாணி : ஆமாம். இப்போது கலாதேவி ஒப்பாரி வைத்து அழுது கொண்டிருக்கிறார். இவர்தான். சமாதானம் சொல்லப் போகிறார்.

பேபி : தாத்தா! எனக்கு வாழ்க்கையிலேயே ஒரு பெரிய ஆசை, அதாவது பெரிய ஆம்பிஷன். ஒரு இண்டர் நேஷனல் ஆர்ட்டிஸ்ட், அதாவது அகில உலக நடிகன்னு பேர் வாங்கணும் - அதாவது அமெரிக்கா, இங்கிலாண்ட், ரஷ்யா, ஹாலண்ட், போலண்ட், வாலண்ட், லேலண்ட் எங்கும் போகணும். அதாவது ஷேக்ஸ்பியர், ஷெல்லி, கோல்ட் ஸ்மித், கம்பன், காளிதாசன் எல்லோரையும் போல, நானும் புகழோடு சாகணும் தாத்தா.

(மண்டியிட்டு வணங்குகிறான்)

ம. பூ : அப்படியே ஆகட்டும்னு வாழ்த்துகிறேன், பேபி! வெற்றி கிடைக்கட்டும். உன் மனம் போலவே எல்லாம் நடக்கும்.

பேபி : *நன்றி தாத்தா! நன்றி! என் புத்திசாலித்தனத்தை நான் செத்த பிறகுதான் தாத்தா இந்த உலகம் தெரிந்து கொள்ள முடியும். என்ன செய்வது, என்னைப் போன்ற புத்திசாலிகளுக்கெல்லாம் செத்த பிறகுதான் தாத்தா சமாதி கட்றாங்க!*

ம. பூ : *பயப்படாதே அப்பா! நீ உயிரோடு இருக்கும் போதே உனக்கு எல்லாம் செஞ்சுடலாம்!*

பேபி : *நீங்கள் பெரிய ஜென்டில்மேன் தாத்தா. அப்பா! டைம் ஆச்சு - நான் டென்னிஸ் மேச்...*

ம. பூ : *சரி நானும் வெளியே போகணும். ஒரு வேலை இருக்கு.*

பூபதி : *ஆமாம் - எனக்கும் ஒரு அவசரமான காரியம்...*

(வாணி, சாமி போகிறார்கள்)

பூபதி : *மாமா! வாணிக்குத் தெரியுமோ?*

ம. பூ : *கல்யாண விஷயம்தானே? அதற்கென்ன பூபதி? ஆகட்டும். இந்த கோமாளிக்குத் தகுந்த ஒரு ஏமாளியைப் பார்த்து முடிக்க வேணும். உங்க பையனுக்கு முதல்லே கலைப் பைத்தியம் தெளியட்டும். பரீட்சையும் பாஸ் பண்ணட்டும். பிறகு பேசுவோம்.*

பூபதி : *ஆகட்டும் மாமா வருகிறேன்.*

(போகிறார்கள்)

பேபி : *தாத்தா* your are a great man - Gentleman
Long Live our Grandfather
Long live your Broad Valour
Send him victorious
Happy and glorious
God Save the Baby

காட்சி - 3

இடம்	:	தேவேந்திர் பூபதி வீடு
காலம்	:	மாலை
பாத்திரம்	:	பேபி, சாமி, பூபதி, ஆசிரியர்

பேபி : *பைத்தியக்கார உலகம்! என்னை இன்னும் அறிந்து கொள்ளவில்லை. ஓல்ட்மேன்! நான் ஒரு லட்சியவாதி! எவ்வளவு புத்திசாலித்தனமாகப் பேசினேன் பார்த்தாயா! எவ்வளவு கணக்கா, அழுத்தமா, அழகா, ஒழுங்கா, ஸ்ட்ராங்கா பேசினேன் பார்த்தாயா?*

சாமி : *அட போ பேபி! காரியத்தைக் கெடுத்துப் புட்டியே!*

பேபி : *சாமி! என் காதல் ஒரு பூ மலர்ப்பாதை. அதை வாணி போன்ற யுத்த டாங்கி வந்து அழிக்கவிட மாட்டேன். லட்சியத்துக்காக தன் உயிரையும் கொடுப்பேனே தவிர - உறுதி தளரமாட்டான் இந்த பேபி - போடா இடியட்.*

சாமி : *நானா இடியட்! சரிதான் - பெண் பார்க்கப் போன இடத்திலே உன் கோமாளித் தனத்தைக் காட்டிபுட்டு, இப்போ என்னை வந்து இடியட்டுங்கறே! சரிதான் நீ என்னப்பா செய்வே? இந்தக் கலிகாலமே இப்போ சிரசாசனம் போடுது. ஆமாம் இப்படித்தான் பேசறதா? அந்த பொண்ணு உன்னைப் பத்தி என்னப்பா நினைச்சிருக்கும்!*

பேபி : *என்னடா நினைத்திருப்பாள்? நான் சுத்த முட்டாள், பைத்தியம், அசடு என்று நினைத்தி*

ருப்பாள். அது எனக்கு வெற்றியடா வெற்றி. அவளப்படி நினைக்கட்டும் என்றுதான் நான் அப்படிப் பேசினேன்.

சாமி : அப்படியெல்லாம் நினைச்சா நாளைக்கு எப்படி யப்பா கல்யாணம் கட்டிக்கும்?

பேபி : அந்தக் காட்டேரி என்னைக் கட்டிக்கொள்ளக் கூடாது என்றுதான் அப்படிப் பைத்தியம் மாதிரி நடித்தேன்!

சாமி : ஆமாம்ப்பா, அந்த அம்மா காட்டேரி! நீதான் கண்ணபரமாத்மா - ஐயோ கலிகால ராவணா!

பேபி : நீ ஒரு மடையன்! அந்த வாணியைப் பற்றி உனக்குத் தெரியாது. அவளைக் கண்டாலே எனக்கு கைகால் எல்லாம் நடுங்குது!

சாமி : ஏன் நடுங்குறே? அந்த அம்மா என்ன ஐஸ் கட்டியா? நெருப்புப் பெட்டியா?

பேபி : அடேயப்பா! அன்றொரு நாள் காலேஜிலே அவளிடம் ஏதோ தமாஷாப் பேசியதற்கு கன்னம் இரண்டும் வீங்கற மாதிரி அடித்துவிட்டாள்!

சாமி : ஓஹோ! முதல்லேயே நெருப்பைத் தொட்டுக் கையைச் சுட்டுக்கிட்டியா?

பேபி : எப்படிப்பட்ட கலைஞன் நான்? எப்படி அறைந்து விட்டாள்? அந்தக் கோபக்காரியைக் கட்டிக்கொண்டு யாருடா அழறது?

சாமி : கட்டிக்கிட்டு அழவேண்டாம்! சதா சிரிச்சு கிட்டே இரேன்.

பேபி : அதென்னமோ அப்பா, அப்பாவிடம் சொல்லி விடு. எனக்கு வாணியைக் கண்டாலே வாந்தி வருகிறது. நீ சொல்லிவிடு, நான் போகிறேன்.

சாமி : அதென்னமோ அப்பா, எனக்குத் தெரியாது. உங்கப்பாகிட்டே போயி இதைச் சொல்லப்

போனா அவர் என்னைக் கையாலே அடிக்க மாட்டாரு...

(பூபதி வருகிறார் - பேபி நழுவுகிறான்)

பூபதி : பேபி - பேபி எங்கே போகிறாய். நில்!

பேபி : என் அறைக்கு அப்பா, இன்னிக்கு டென்னிஸ் மேச்... நாடக ஒத்திகை....

பூபதி : நண்டுப்பயலே! உன் பிழைப்பே ஒரு நாடகமாகத் தான்டா இருக்கு. ஏது வரவர ரொம்ப கெட்டுப் போகிறாய். ஆமாம், பெண் பார்க்கப் போன இடத்தில் அப்படித்தான் பேசுவதா? உம்!

பேபி : அவுங்ககிட்டே எல்லாம் அப்படித்தாம்பா கரெக்டா பேசணும். அப்பொதாம்பா நாளை மறுநாள் நம்மேகிட்டே பயம் இருக்கும்.

பூபதி : ரொம்ப புத்திசாலித்தனமா பேசணும்னு உன்னிடம் எவ்வளவு தூரம் எடுத்துச் சொன்னேன்!

பேபி : அந்த வாணியை நான் கல்யாணம் செய்து கொள்ள மாட்டேன் அப்பா!

பூபதி : மடையா! அது உன் இஷ்டமல்ல!

பேபி : கல்யாணம் எனக்குத்தானே அப்பா!

பூபதி : கல்யாணம் உன் எழவுக்கு. அதனால் வரும் கௌரவம் எனக்கு! பேபி எனக்குப் பின்னால் நீ கோடீஸ்வரனாய் இருக்கலாம்.

பேபி : அப்பா! நான் கோடி-ஈஸ்வரனானாலும் சரி, பிச்சைக்காரன் ஆனாலும் சரி, வாணி வேண்டாம் அப்பா... மனசு கலங்குது.

பூபதி : கோழைப்பயலே! எனக்கு மகனா நீ? பயந்தாங் கொள்ளி! பூபதியின் மகன் ஒரு பெண்ணுக்குப் பயப்படலாமா?

பேபி : *என்னப்பா செய்வது? ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால், உங்களுக்குத் தெரியாதா அப்பா! சூர்ப்பணகையால் ராவணன் அழிய வில்லையா? ஒரு பெண்மணியால் பாரதப்போர் எழவில்லையா? சிம்சனால் எட்டாம் எட்வர்ட் ஏழையாகவில்லையா? சிங்காரிகள் விளம்பரத் தால் சோப்பின் விலை ஏறவில்லையா? பேஷன் பெண்களால் நாங்கள் எல்லாம் பெயில் ஆக வில்லையா... அந்த... அந்த... அந்த... சிவபெருமான்...*

பூபதி : *முட்டாள்! என்னிடம் வேதாந்தமா பேசுகிறாய்?*

பேபி : *வேதாந்தமல்லப்பா - வாழ்க்கையின் சிக்கல்!*

பூபதி : *கட்டாயம் நீ வாணியைக் கல்யாணம் செய்து கொள்ளத்தான் வேண்டும். இல்லையேல் செய்து வைக்கப்படும்.*

பேபி : *உங்களால் முடியாதப்பா!*

பூபதி : *என்னையா எதிர்த்துப் பேசுகிறாய்? என்னிடம் வேறெவனும் இப்படிப் பேசினது கிடையாது - பேச முடியாது! நான் யார் தெரியுமா? எமன்! உன்னைச் சித்ரவதை செய்து விடுவேன்.*

பேபி : *அப்பா! நான் பி.ஏ. பாஸ் பண்ணாத்தானே வாணியை எனக்குக் கொடுத்து சித்ரவதை செய்வீர்கள். நான்தான் இந்த வருஷமும் வெற்றி கரமாக வேண்டுமென்றே பெயில் ஆகப் போகிறேனே!*

பூபதி : *சீ! வாயை மூடு! பெயில் ஆகப் போகிறாயா? டேய் பேபி! நீயா பெயில் ஆகப் போகிறாய்? உன்னால் பெயில் ஆக முடியுமா? இப்போதே காலேஜ் பிரின்ஸ்பாலை வரச்சொல்லி இருக் கிறேன். நீ பாஸாகும்படி செய்கிறேன். போ, நீ மரியாதையாய் இரு. பெயில் ஆகப்போகிறோமே என்று வருத்தப்படாதே. அதெல்லாம் நான் சரி செய்கிறேன் - போடா.*

பேபி : *எசமான்! பிரின்ஸ்பால் அய்யா வந்துட்டாருங்க.*

(சேகர் வருகிறார்)

பூபதி : *வாங்க வாங்க! பிரின்ஸ்பால் சார்! சௌக்கியந் தானே? பார்த்து ரொம்ப நாளாச்சு. உங்களைப் பார்த்துப் பேசாவிட்டால் பொழுது போவதில்லை.*

சேகர் : *சுகந்தானே?*

(பேபியை பார்த்து)

சேகர் : *என்னடா பேபி! என்ன இந்த வருஷமும் பரீட்சையில் மட்டந்தானா?*

பேபி : *மட்டமில்லை சார்! உடம்பு நல்லாயிருக்கணும் நிறைய முட்டை சாப்பிடுன்னு டாக்டர் சொன்னார். அந்த முட்டையினுடைய Reaction பரீட்சையிலும்.... வந்துட்டுது... எல்லா சப்ஜக்டிலும் ஒரே கோழி முட்டை மயம்.*

பூபதி : *அடே பேபி! போ வெளியே! (போனதும்)*

பூபதி : *சாமி! நம்ம பிரின்சில்பல் சாருக்கு நல்ல பசும் பால், குங்குமப்பூ போட்டுக் கொண்டு வா. பிரின்ஸ்பால் சார்! உங்களிடம் ஒரு முக்கிய விஷயம் சொல்ல வேண்டும் என்றுதான் கூப்பிட்டேன்.*

சேகர் : *என்ன அது?*

பூபதி : *வேறொன்றுமில்லை. உங்கள் மகன் மணியை நம்ம பம்பாய் கம்பெனியின் மானேஜராகப் போடலாமென்று தீர்மானம் செய்து விட்டேன். மாதம் ஒன்றுக்கு இரண்டு ஆயிரம் சம்பளம், அலவன்ஸ் ஐந்நூறு. இது தவிர கார், பங்களா அது, இது, எது வேண்டுமானாலும் எல்லாம் தருகிறேன் என்ன? உங்கள் உத்தரவு தான் தேவை!*

சேகர் : என் மகன் மணி, மஹேஸ்வர பூபதியிடமல்லவா மானேஜராய் இருக்கிறான். அவனை எப்படி நீங்கள் பம்பாய்க்கு அனுப்ப முடியும்.

பூபதி : அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். அதையெல்லாம் நான் சரிப்படுத்தி விடுகிறேன். உங்கள் அனுமதிதான் தேவை. நாளைக்கே மணி பம்பாயிலிருப்பான், அவனைப் போன்ற புத்திசாலிக்கு இந்தச் சின்ன ஊர் சுகபுரி பிரயோஜனமில்லை. நல்ல சான்ஸ் - என்ன சொல்கிறீர்கள்?

சேகர் : மன்னிக்க வேண்டும் மிஸ்டர் பூபதி! என் பையனுக்கு இந்த தீடீர் சான்ஸ் எல்லாம் வேண்டாம்.

பூபதி : அதிருக்கட்டும். நம்ம பேபி இந்த வருஷம் பாஸ் ஆயிடுவானா சார்!

சேகர் : யார்? உங்க பையன் பேபியா? *(சிரிக்கிறார்)*

பூபதி : ஏன் சிரிக்கிறீர்?

சேகர் : பேபிதான் - பாஸாகக் கூடாதுன்னு, பிள்ளையாருக்கு பூஜை போடுறானே!

பூபதி : என்ன சார்! இப்படித்தானா நீங்கள் காலேஜ் நிர்வாகத்தை நடத்துவது? ஒரு பையன் பெயில் ஆனால் பிரின்ஸ்பால் ஆன உங்களுக்குத்தானே அகௌரவம்.

சேகர் : மிஸ்டர் பூபதி! உங்க பேபி சின்னக் குழந்தையா என்ன? அடிச்சு புத்தி சொல்றதுக்கு, அவன் இருக்கான் ஆப்பிரிக்கா நாட்டுக் காட்டு யானை மாதிரி!

பூபதி : இந்தாருங்கள். இதை வைத்துக் கொள்ளுங்கள். பத்தாயிரம் ரூபாய். போதாவிட்டால் இன்னும் தருகிறேன். ஒரு காரும் எடுத்துக் கொள்ளுங்கள், யார் யாருக்கு என்னென்ன கொடுக்க

வேண்டுமோ இஷ்டப்படி கொடுங்கள். எப்படி யாவது பேபி பாஸாக வேண்டும். முடிவு வருவதற்கு முன்னால் நீங்கள் இந்தப் பெரிய உதவியைச் செய்ய வேண்டும். ரொம்பக் கேட்டுக் கொள்ளுகிறேன். உம், எடுத்துக் கொள்ளுங்கள்.

சேகர் : என்னை என்ன சோதிக்கிறீர்களா? நான் என்ன லஞ்சம் வாங்கறவனா? இல்லே கள்ள மார்க்கெட் ஆசாமியா?

பூபதி : அதெல்லாம் இல்லை சார். சத்யமாகச் சொல்லு கிறேன். பேபி உங்க தயவினால்தான் பாஸாக வேண்டும். அவ்வளவுதான்.

சேகர் : நீங்கள் கல்லூரி ஆலோசனை சபையின் தலைவர். நீங்களே இந்தக் கேவலமான காரியத்தைச் செய்யச் சொல்லுவது எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

பூபதி : இதெல்லாம் கேவலமில்லை சார்!

சேகர் : கேவலமில்லை - கரப்ஷன்!

பூபதி : கரப்ஷன் இல்லை சார்! கர்டஸி! பரஸ்பர உதவி! பரோபகாரம். எல்லாம் பிஸினஸ் சார்! இந்த உலகமே ஒரு மாயச் சந்தை, நாமெல்லாம் அதில் வியாபாரிகள். சும்மா துணிந்து செய்யுங்கள்.

சேகர் : இது ஒநாய் வேதாந்தம். இந்த நாச வேலைகளை எல்லாம் செய்யும் வழக்கம் எனக்கில்லை. செய்யவும் மாட்டேன். வந்தனம்!

பூபதி : பத்தாயிரம் ரூபாய் உங்களுக்குத் தனியாகத் தருகிறேன் சார்!

சேகர் : *(சிரித்து)* மிஸ்டர் பூபதி! வைர வியாபாரிக்குக் கசாப்புக் கடையில் மாமிசம் வெட்டத் தெரியாது. குல பத்தினிக்கு விபச்சாரம் பண்ணத் தெரியாது. எனக்கு இந்த வியாபாரம் தெரியாது. வேறு ஆளைப் பாரும்.

பூபதி : *சார்! பேபி பி.ஏ., பாஸ் பண்ணாவிட்டால், அவனுக்கு மகேஸ்வர பூபதி வாணியைக் கொடுக்க மாட்டார் சார்!*

சேகர் : *பரவாயில்லை சார்! இப்படி பிளாக் மார்க் கெட்லே பி.ஏ., பாஸ் பண்ணிக் கல்யாணம் செய்து கொள்வதைவிட, உங்க பையன் காவி கட்டிக் கொண்டு காசி யாத்திரை போவது எவ்வளவோ நல்லது.*

பூபதி : *அப்படியானால் பேபியின் கல்யாணம்?*

சேகர் : *ஆனந்தமா, அமர்க்களமா நடக்கட்டுமே சார். உலகத்திலே கல்யாணம் செய்து கொள்கிறவன் எல்லோருமே பி.ஏ., பாஸ் பண்ணியிருக்கணும்னு கட்டாயம் இல்லையே சார்!*

பூபதி : *அப்போ என் கோபத்தை சம்பாதித்து கொண்டு போகிறீர்!*

சேகர் : *ஓய்! கோபத்தை உம்மிடமிருந்து நான் சம்பாதிக்க வேண்டியதில்லை. என்னிடமும் கொஞ்சம் ஸ்டாக் இருக்கு. ஆனால் அனாவசிய மாக அதைச் செலவிடும் பழக்கம் எனக்கில்லை.*

பூபதி : *நான், உமது காலேஜ் ட்ரஸ்ட் போர்டின் ப்ரசிடெண்ட். நீர் அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதாக ஏற்கெனவே கவர்ன்மெண்டுக்கு ரிப்போர்ட் போயிருக்கிறது. நான் நினைத்தால் ஒரே கூட்டத்தில் உம்மை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்ய முடியும்.*

சேகர் : *டிஸ்மிஸ்! டிஸ்மிஸ்! மிஸ்டர், பூபதி! கேவலம் இந்த உத்தியோகத்திலிருந்து தானே நீர் என்னை டிஸ்மிஸ் செய்ய முடியும்! இந்த உலகத்திலிருந்தே டிஸ்மிஸ் செய்யும் மகா சக்தி வாய்ந்த அந்த எமனே வந்து, தன் மகனுக்கு பாஸ் மார்க் போடும்படி கெஞ்சினால்கூட நான் செய்ய*

மாட்டேன். நீர் என்னையா என்னை டிஸ்மிஸ் செய்வது, நாளைக்கே என் ராஜிநாமா உமது மேஜை மேல் வந்து விழும்! நான் போகிறேன்.

(வேகமாகப் போகிறார்)

பூபதி : *நான்சென்ஸ்! பரதேசிப் பக்கிரிப்பயல் - என்னைப் பகைத்துக்கொண்டு இந்த ஊரில் இவன் வாழ்ந்து விட முடியுமா! பார்க்கிறேன். உம். சரி. இவன் இல்லாவிட்டால் மற்றொரு* Examiner-*ஐ வைத்து என் காரியத்தை நிறை வேற்றுவேன். அடே சாமி! நீ போய் வைஸ்-பிரசிடெண்ட் வராகசாமியை அழைத்து வா. போ...... பென்ஸ் காரை பெரிய காரைக் கொண்டு போ. உம். இவனைப் பாஸ் பண்ணச் செய்யா விட்டால் நான் பண்ணையார்ப் பிள்ளை இல்லை.*

(போகிறான்)

(காட்சி முடிவு)

காட்சி - 4

இடம்	:	பேபியின் தோட்டம்
காலம்	:	மாலை
பாத்திரங்கள்	:	பேபி - ராணி

பூபதி : *'கள்ளைக் குடித்தால் கலகம் குறையும்' என்று ஒரு பெருங் குடியடிகளாரே சொல்லியிருக்கார். அடிகளே குடி என்று கூறும்போது குடிப்பது இங்கு தப்பா? சொல்லடா எங்க சுப்பா!*

குடிக்காதே என்று சொல்லும்
சோணங்கியான குப்பா
கூறடா தம்பி சுப்பா
குடிப்பது இனியும் தப்பா?

என்றும் ஒரு வரகவி பாடியிருக்கார். அஞ்சாதே எந்தன் ராணி. After all *இது ஒரு பாணி. இந்திமே பாணி போல்தா ஹை! தமில்மே தண்ணி சொல்றான் ஹை!*

Water with some power

Just like your lover

I will be failing for ever

You will be ailing me shiver

Hellow my dear flower (This)

Fellow will be Your Bower.

நீயும் கொஞ்சம் போட்டுக்கோ. ஆண், பெண் எல்லாம் இந்த சங்கதியில் சமம். இது நிஜம். கொள்ளாதே பயம். இனி எல்லாமே ஜெயம்.

ஆடுவோமே கள்ளுப் போடுவோமே
ஆனந்த சாராயம் அடைந்துவிட்டோம் என்று
(ஆடுவோமே)

ராணி : *இப்படி யெல்லாம் ஆடலாமா பேபி.*

பேபி : *ஏன் கூடாது? இந்தப் பிரபஞ்சமே ஓயாமல் ஆடுகிறது! நான் மட்டுந்தானா தண்ணி போட்றேன்.*

சிங்க மராட்டியர்கள் போடவில்லையா
சேலத்து வீரர்கள் ஆடவில்லையா?
வங்கத்திலும் தண்ணி ஓடவில்லையா - நம்
வழக்கமும் பாட்டிலைத் தேடவில்லையா?
(ஆடுவோமே)

பேபி : மை டியர் ராணி கேள்:
அஞ்சிக் குடிப்பது சிறுமை
அஞ்சாமல் குடிப்பது பெருமை
அதுவே நம் கடமை
அடைந்தோம் இது நம் உரிமை.
அதிகம் குடிப்பது வேகம்
மிதமாய் இருப்பது விவேகம் - இதை
தெரிந்து செய்வது யூகம்
தெரியாமல் குடிப்பது யோகம்.

ராணி : *பேபி. பணம் ஏதாவது மிச்சமிருக்கா?*

பேபி : *பணமா, முட்டாள். மிச்சமா? இதில் இச்சை வைத்தபின் மிச்சம் எப்படி இருக்கும் ராணி. நான் இப்போ ஒரு உண்மையான சமதர்மவாதி,* I am in the list of Neo Socialists!

மிச்சமில்லை மிச்சமில்லை
மிச்சம் என்பதில்லையே
எக்கச்சக்கமாகக் கள்ளு
இங்கு வந்த போதிலும்
வச்சிருந்த ரொக்கமோடு

வட்டிவந்த போதிலும்
கச்சை கட்டி ராணி இங்கு
கிட்டிவந்த போதிலும்
பச்சையாக நீயும் என்மேல்
இச்சை கொண்ட போதிலும்
மிச்சமில்லை மிச்சமில்லை
மிச்சமென்பதில்லையே.

ஆடுவோமே கள்ளுப் போடுவோமே
ஆனந்த சாராயம் அடைந்துவிட்டோம் என்று *(ஆடு)*

வெள்ளிப்பனை மரத்துக் கள்ளருந்துவோம் - அடி
மேலைக்குடல் நிறைய அருந்திடுவோம்
சுண்டியிழுக்குதடி சுதந்திரக்கள்ளு - அது
சுற்றி மயக்குதென்று ஆடடி பள்ளு *(ஆடு)*

சிங்க மராட்டியர்கள் போடவில்லையா
சேலத்து வீரர்கள் ஆடவில்லையா
தங்கநிற திராட்சைரசம் தேடவில்லையா - ராணி
ததிங்கணத்தோம் என்று ஆடவில்லையா? *(ஆடு)*

(இருவரும் ஆடுகிறார்கள்)

மிச்சமில்லை மிச்சமில்லை மிச்சமென்பதில்லையே
வச்சிருந்த கள்ள நோட்டு கெட்டழிந்தபோதிலும்
(மிச்ச)

உச்சமான போதைவந்து உந்துகின்றபோதிலும்
பச்சையான சேலை கட்டிப் பாவைவந்த போதிலும்
(மிச்ச)

சாமி : *(ஓடிவந்து பேப்பரைக் காட்டி) பேபி... பேபி..... இந்தாப்பா அப்பா இதைக் கொடுக்கச் சொன்னார். நீ பாஸ் பாஸ் பாஸ்... அய்யய்யோ நீ கூட பாஸ் பண்ணித் தொலைச்சிருக்கியே.... எங்கே ஒரு போஸ் கொடு போட்டோ எடுத்துத் தொலைப்போம்.*

பேபி : போடா இடியட், கொல்லுவேன் உன்னை! பாஸ் பண்ணி விட்டேனாம் பாஸ்! கேலி பண்றியா? நீ என்னடா சொல்றது? சாட்சாத் வைஸ் சான்ஸ்லரே வந்து சொன்னால்கூட நான் நம்ப மாட்டேண்டா! பாஸாம் பாஸ் அவுட் பாஸ்தான்!

சாமி : என்னப்பா! பாஸுன்னு சொன்னா, மத்த பையன்கள் எல்லாம், கல்கண்டு வாங்கித் தர்றாங்க. நீ என்னடான்னா சண்டைக்கு வர்றே. கவலைப்படறே, கண்ணீர் விட்றே....! கள்ளு போட்றே!

பேபி : ஆமாம் மற்றவனுக்கு பாஸாகறதுனாலே லாபமிருக்கு. நான் பெயில் ஆனாதானேடா என் காரியம் நிறைவேறும்.

சாமி : இதோ உன் நம்பர் 383! ஆகா! என்ன மங்கள கரமான நம்பர்! உனக்குன்னு வந்து வாச்சிருக்கு பாரு ஒரே எட்டும் மூணும்!

பேபி : ஆ! எந்த மடையண்டா எனக்கு பாஸ் மார்க் போட்டது!

சாமி : உங்கப்பாவின் ஏற்பாடு பேபி!

பேபி : அப்பா - அவர் ஒரு முட்டாள்! அடே சாமி! பாஸானா மட்டும் என்ன? நான் அந்த வாணியைக் கல்யாணம் செய்து கொள்ளவே மாட்டேன். நீ போடா - நான் வருகிறேன். போடா ஆசாமி! எல்லாம் சதி செய்து என் லட்சியத்தை நாசமாக்குகிறீர்கள்! கேவலம் இந்த சோதனை என்னை என்னடா செய்யும்? பாஸ் என்று சர்டிபிகேட் வந்துட்டா பயப்படுவேனோ? நச்சை வாயிலே கொணர்ந்து நண்பர் ஊட்டும் போதிலும் அச்சமில்லை! அச்சமில்லை!

சாமி : அச்சமென்பதில்லையே!

பேபி : போடா! நீ ஒரு முட்டாள்களின் தலைவன்.

சாமி : பின்னே, படிப்பில்லாத நாட்டிலே வேறு யாருக்கப்பா தலைவனாயிருக்க முடியும்?

(சாமி போக - ராணி)

ராணி : பேபி! பாஸ் பண்ணிட்டாயாமே! ஒருவேளை வாணி உன்னைக் கல்யாணம் செய்து கொள்வாளோ!

பேபி : வாணியாவது, வத்தலாவது! நீ வா. ராணி நீயும் நானும் விஸ்கியும் சோடாவும் போல - சிக்கனும் குருமாவும் போல. அடுத்த வாரம் ரோமியோ அண்ட் ஜூலியட் நாடகம்! வா போகலாம் ஒத்திகைக்கு. பெயில் ஆயிக்கிட்டே இருந்தா காலேஜ் சாக்கிலே நம்ம காதல் நாடகம் நடக்கு மென்று இருந்தேன். அப்பா, பாஸாகும்படி செய்துவிட்டார். ஊம்... இருக்கட்டும், வேறொரு இடம் இல்லாமலா போய்விட்டது நமக்கு! காலேஜ் இல்லாத காலத்திலும், உலகில் காதலர் கள் வாழ்ந்து கொண்டு தானே இருந்தார்கள். ராணி! உன்னை நேத்து எங்கெல்லாம் தேடுவது? மஜ்னு லைலாவை பாலைவனமெல்லாம் தேடினான், நான் உன்னை சினிமா தியேட்ட ரெல்லாம் தேடி விட்டேன். வா ராணி! நான் யார்? எப்பேர்ப்பட்டவன்? கலைச் சூரியன். நீ - நான் காலைத் தாமரை.

சந்திர சூரியர் சமுத்திரம் வானம்
காயினும் நமக்கென்ன
இந்தக் காதலே சொந்தமதானால்
சினிமாவும் வேண்டாம்.

ராணி : அதிருக்கட்டும். நாம் இப்படியே கலியாணம் செய்து கொள்ளாமல் சுற்றிக் கொண்டே இருந்தால் உலகம் என்ன நினைக்கும். என்ன சொல்லும்?

பேபி : *ஷட் அப், ராணி. உலகத்திற்கு மனம் ஏது? வாய் எது? காதலர் சுற்றக் கூடாது என்று சொல்ல இந்த உலகத்திற்கு உரிமை இல்லை. காரணம் அதுவே சுற்றிக் கொண்டிருக்கிறது. இந்த உலகமே ஒரு காதல் குற்றவாளி!*

ராணி : *இல்லை அப்படி சுற்றிக் கொண்டே இருந்தால் ஹிப்பிகள் என்று கேலி செய்யும்.*

பேபி : *ஆ!* Hippy! Don't worry my dear puppy. Don't care of those Zippies. We will play Tripiece!

ராணி : *அப்படியானால் நம் காதல்.*

பேபி : *ஆம். காதல் என்ற சுதந்திரத்தை, கலியாணம் என்ற கடுங்காவல் சிறையில் தள்ளாதே ராணி காதலைப்பற்றி எல்லா* Literatures-*யும் ஆதியோடந் தமாக அலசிப் படித்து, ஆராய்ச்சி செய்து அறிவால் முடிவு செய்தபின் நான் கூறுகிறேன்! நம் காதல் ஒரு பூச்செடி. இந்தக் கலியாணம் ஒரு கோடையிடி. காதல் ஒரு* Business! *கலியாணம் ஒரு* Incometax Case. *காதல் ஒரு நதி! கலியாணம் ஒரு அணை. காதல் ஒரு புதிய கார். கலியாணம் ஒரு* Vacum Brake! Let us fly like free Bird, *நம்ம காதல் செடியிலே கலியாண இடி விழ வேண்டாம்* Come on my dear butterfly ,- Be my better half!

Free love

Free world! - I

Pray you - to be my

Pradise dove

ராக்கம்மா - என்னை நீ
காக்கம்மா - நல்ல
நோக்கம்மா - இதில் என்ன
ஏக்கம்மா? - இன்னமும்
தூக்கம்மா! - எனக்கென்ன

சீக்கம்மா? - கொட்டைக் கண்
பாக்கம்மா - கயல் கண்ணில்
நோக்கம்மா - நீ ஒரு மானம்மா!
நான் ஒரு கானம்மா! நீ ஒரு மீனம்மா
நான் ஒரு ஆறம்மா.
இதைக் கொஞ்சம் பாரம்மா.
Bottle நாதம்!
Beatle கீதம்!
நோட்டில் வேதம்!

நாட்டில் ஓதும்
வீட்டில் மோதும்
வினைகள் போதும்,
காதல் - காதல்
காதல் போயில்
மோதல் - மோதல் - மோதல்.

Let our love flash and
Dash agaisnt clash and
Make the Villain into Ash!
We will smash the world.

(காதல் செடி நாடகம் முடிகிறது)

✻

நகைச்சுவை! ஒரு ஆராய்ச்சி
நகை இல்லாத நங்கையா?

இப்போது நகைச்சுவையைப் பற்றி ஒரு ஆராய்ச்சியில் நாம் இறங்கப் போகிறோம். சரியாய்ப் போச்சு, எதற்கெடுத் தாலும் ஒரே ஆராய்ச்சிதானா? என்னய்யா இது? நகைச்சுவை என்ன இரசாயனச் சாலையா? கல்வெட்டா? புதைப் பொருள் இலாகாவா? இல்லை, துப்பறியும் இலாகாவா? கலப்பட மருந்தா? ஆஸ்பத்திரியா? இல்லை மாஜி அரசியல் வாதியின் ஊழல்கேஸா? என்றெல்லாம் தயவுசெய்து பயப் படாதீர்கள். ஆராய்ச்சி என்பது இந்தக் காலத்தில் ஒரு அவசியப் பொருளாகி விட்டது.

திரை இல்லாத நாடகமா?

நாடகத்தில் கதாநாயகன், கதாநாயகி அல்லது இவர் களைப் பிடித்து விளையாடும் வில்லன், இவர்கள் மாத்திரந் தான் நாடகத்திற்கு இன்றியமையாத பாத்திரங்கள் என்று தானே நாம் எல்லோரும் எண்ணிக் கொண்டிருக்கிறோம். இல்லை, ஒரு நாடக வெற்றிக்கு இவர்கள் மட்டும் இருந்தால் போதாது. அனுஸ்வரங்களின் உதவி அவசியம் தேவைப்படு கிறதல்லவா?

பெண் இல்லாத கல்யாணமா?

அதைப்போல் ஒரு நாடகத்தின் வெற்றிக்கு நகைச்சுவை மிக முக்கியமான தேவையாகிறது. சிரிப்பில்லாத நாடகம் பருப்பில்லாத கல்யாணம். கருப்பில்லாத தலைமுடி. செருப் பில்லாத காலடி. சண்டையில்லாத சங்கம், சவால் இல்லாத பிரசங்கம். ஆடையில்லாத அங்கம். கண்தெரியாத சிங்கம். கொடியில்லாத கட்சி. கொள்கையில்லாத கொடி! கண்ணில்லாத காட்சி. ஊழல் இல்லாத ஆட்சி. விஷமில்லாத பூச்சி. பணமில்லாத தேர்தல், பொய்யில்லாத சாட்சி. சிரிப்பில்லாத குழந்தை. விளக்கில்லாத கோயில். நீரில்லாத

ஆறு, பேரில்லாத தலைவன். மோரில்லாத சாப்பாடு. காரில்லாத நடிகன். தேரில்லாத திருவிழா. ஊரில்லாத நாடு. வேரில்லாத மரம். சேறில்லாத நெல்வயல். நன்றியில்லாத மனிதர். சோறில்லாத விவசாயி. துணியில்லாத நெசவாளி. நயவஞ்சகமில்லாத சுயநலம். பாசமில்லாத நேசம். ஆசை இல்லாத பணம். அதைப்போல் நகைச்சுவையில்லாத நாடகமும் இருக்க முடியாது!

உடம்பும் உயிரும்!

உடம்புக்கு கால் எவ்வளவு அவசியமோ, வாய்க்குப் பல் எவ்வளவு அவசியமோ, கண் விழிக்குப் பாவை எவ்வளவு முக்கியமோ? தடாகத்திற்குத் தாமரை எவ்வளவு அழகோ, குளத்திற்கு தண்ணீர் எவ்வளவு அவசியமோ, கொடிக்கு மலர், மரத்திற்குப் பழம், பண்ணுக்கு சுருதி, பாட்டுக்குத் தாளம், நாட்டியத்திற்கு லயம், பெண்ணுக்குப் பொறுமை, ஆணுக்கு ஆண்மை, பதவிக்குப் பெருந்தன்மை, நட்புக்கு உதவி. உதவிக்கு விளம்பரமின்மை, செல்வத்திற்கு ஈகை, தலைவனுக்குத் தகைமை, வீரனுக்குத் தியாகம், வெற்றிக்கு அடக்கம், குழந்தைக்கு மழலை; பயிருக்கு மழை, நெஞ்சுக்கு உறுதி, பார்வைக்கு அழகு, பண்புக்கு அன்பு, தர்மத்திற்கு தயாளம், இதுவெல்லாம் போல் நாடகத்திற்கு நகைச்சுவை மிகமிக அவசியம். இன்றியமையாதொரு அங்கம். சிரிப்பில்லாத நாடகம், இனிப்பில்லாத பாயசம். ஆதலால் நாம் வாழ, நாடு வாழ, நாடகம் வாழ, நகைச்சுவை அவசியமாகிறது. 'அடேயப்பா, எவ்வளவு பெரிய ஆராய்ச்சி செய்து வீட்டீர் அய்யா' என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா, உங்களுக்கு? கொஞ்சம் பொறுங்கள். ஆராய்ச்சி என்றால் அவ்வளவு எளிதா என்ன?

சிரிப்பா? மறுப்பா?

கவிஞர்கள் காதல் உணர்ச்சிக்கு எக்கச்சக்கமான ஆடம்பர மெருகூட்டி, காதலை நவரச மணிகளின் ஒளி மகுடமாக ஆக்கப் படாதபாடுபடுகிறார்கள். பாவம். ஆசிரியர் செய்யும் அத்தனை முயற்சியும், அவரே படைத்த ஒரு

காமெடியன் வந்து, அவரே எழுதிய ஒரே ஒரு ஜோக் அடித்தால், அந்த ஜோக்கின் அதிர்ச்சியிலே, காதல் இருந்த இடம் தெரியாமல் ஓடிவிடுகிறது. காமெடியன் முன்னால் கதாநாயகனும் கதாநாயகியும், ஏன் வில்லனும்கூட, தேர்தலில் தோற்றுப்போன கட்சிகள் மாதிரி ஒளிந்து மறைந்து ஓடி ஒடுங்கிப் போவதை நாம் அடிக்கடியும் காணும் கண்றாவி யல்லவா? அதற்குப் பின் அந்தக் காமெடியன் எவ்வளவு சேட்டை செய்தாலும், அவர்தான் நாடக உலகின் எவரஸ்ட் என்றெல்லாம் தீர்மானிக்கும் ரசிகர்கள் பெருத்த நாடு அல்லவா இது? காமெடியன் காதலை ஏன் முழுங்கி ஏப்பம் விடுகிறார்? அதைக் கண்டுபிடிக்க வேணுமானால் காதலைப் பற்றியும் கொஞ்சம் துப்பறிய வேண்டும்.

காதலில் நான்கு கட்டங்கள் உண்டு. முதல் கட்டம் உடலின் அழகாட்டம். அடுத்தது மயக்கத்தின் மன மூட்டம். அதற்கடுத்தது ஆத்மீகக் கண்ணோட்டம். நான்காவது இருமையற்ற ஒருமைநிலை. வேகம், சோகம், மோகமெல்லாம் கடந்ததொரு யோக நிலை.

நாலாவது நிலைக்குச் செல்பவர்கள் மிகமிகக் குறைவு. முதல் இரண்டு நிலைகளின் நிழல்கள்தான் நாம் சாதாரண மாகக் காணும் நாடகக் காதலர்களின் களியாட்டங்கள்.

பாசவலையா, பருவக்கோளாறா?

பாவம். அவர்கள் அகப்பட்டுக் கொண்டிருப்பதுவோ, மீளமுடியாத பாசவலைகள்! உடல் எழிலின் வளைவுகளை கண்களால் உண்ணும் சாதாரண ஹோட்டல் சாப்பாட்டில் மிளகாய்ப் பொடி ரசனை! சுவை அல்லது மூக்குப் பொடி யின் மிளகாய்ப் பொடி ரசனை! சுவை அல்லது மூக்குப் பொடியின் சுவாரஸ்யம்! இந்த காரப்பொடி காதல் பாத்திரங்களை ஏதோ வானில் எம்பிப் பாயும் சுதந்திர வானம்பாடிகள் என்று நினைத்துக்கொண்டு ரசிகர்கள் ஏமாறுகிறார்கள். காதலர்களும் எக்காளங்கொண்டு விளை யாடுகிறார்கள். கீரியும் பாம்பும் போல் கட்டிப் புரளு கிறார்கள்! நேசமும் பாசமும் இருப்பதாக நடிக்கிறார்கள். எல்லாம் கீ (Key) கொடுத்த பொம்மைகளா என்ன? உள்ளங்

கள் ஒன்றுபடாத உடல்கள். சினிமாக் காட்சிகளில், வாங்கும் பணத்துக்காக இரண்டு உடல்கள் வெயிலில் படுத்துப் புரள்வதைப் பார்த்துக் கை தட்டலாம். ஆனால் அது காதலாய் விடுமா என்ன? அது காசு ஆகுமே தவிர காதல் ஆகாது. எல்லாம் சுத்த வெங்காயம்!

நிஜ வாழ்க்கையில் உள்ளங்கள் ஒன்றுபட்டால்தான் உயிர்கள் வாழ முடியும். இந்த உண்மைகளை இளமை யிலேயே உணர வைப்பது, பெரியோர்களது அன்பான பாச வாழ்க்கை! கடமையின் சூழ்நிலை! சத்தியத்தை அஸ்திவார மாகக் கொண்டு நடைபெறும் நல்ல குடும்பங்கள்! இந்த உண்மையை அறிந்தாலும் சரி, அறியாவிட்டாலும் சரி, இளமை துடிக்கத்தான் செய்யும். அதைப் பார்த்து ஊர் சிரிக்கத்தான் செய்யும்.

இன்பமா! துன்பமா!

இந்த இளமையின் விளையாட்டில்தான் எத்தனை ரசமான சங்கதிகள். எவ்வளவு சுவையான விளைவுகள். கொஞ்சல்கள்! குலுங்கல்கள்! வளைவுகள், நெளிவுகள், என்னென்ன விதமான குழைவுகள், குதூகலங்கள், அன்ன நடையென்ன? வண்ண உடை என்ன? பின்னல் சடை யென்ன? பேச்சுக்கள் ஏச்சுக்கள், கைவீச்சுக்கள், பெரு மூச்சுக்கள், இரகசியங்கள் என்று காதலர்கள் எண்ணிக் கொண்டிருக்கும், உலகறிந்த உண்மைகள். காதலர்கள் அறையில் அனுபவிக்கும் சுகங்கள். ஏதோ தங்களுக்கு மாத்திரந்தான் ஏற்பட்ட அனுபவம், வேறெந்தப் பயலும் இப்படி அனுபவித்திருக்க முடியாது என்று எண்ணும், இந்த சங்கதி, உலகில் பிறந்த ஒவ்வொரு காதல் ஜோடியும், அனுபவித்துத் தீர்ந்த மிகப் பழசான விஷயம் என்பதை அறிந்தும் அறியாதது போல் பேசிக் கொண்டு இருக்கிறார் களே! இந்தக் காதலர் சம்பாஷணைகளைவிட, மிகப் பெரிய நகைச்சுவை உலகில் வேறெதுவும் இருக்க முடியாது.

உயிரோடு ஒன்றுபட்ட அன்பு பேசாது. உடலோடு ஒட்டிய காமம் பக்கம் பக்கமாகக் கத்திப் பேசும். டூயட் பாடும். ட்விஸ்ட் நடனம் ஆடும். தீராத கோர்ட்டுக் கேஸாக

வளரும்! சில உளரும்! அவை அருமையான நகைச்சுவை களாக நம்மைச் சிரிக்க வைக்கின்றன. ஒவ்வொரு காதலனும் காதலியும் ஏதோ அவர்கள் அனுபவித்த இன்பத்தை, உலகில் மற்றெந்த உயிரும் அனுபவித்திருக்கவே முடியாது, என்று இருமாப்பு அடைவார்களாம். அந்த இறுமாப்பின் உச்சியில் நின்று அவர்கள் பேசும் பேச்சிலே காதல் ரசத்தைவிட, சிரிப்பு ரசம் தான் அதிகமாக வருமாம். இது கவிஞர்களது கணிப்பாம். அதாவது நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்கும் அவலநிலை இது! கவி, காதல் என்பதை, ரசிகன் ஹாஸ்யம் என்கிறார்.

ஆசிரியர் காதல் என்று ரொம்பச் சீரியஸாக நினைக்கும் பாத்திரங்கள் எல்லாம், மிகமிகச் சிரிக்க வைக்கும் சிம்பிள்டன் பாத்திரங்களாக மாறிவிடுவதும் உண்டு. அதாவது காதல் மிகையானால், அதன் முடிவு நகைச்சுவை யாகும். அதாவது இந்தக் காதல் உடும்பு இருக்கிறதே, 'உடும்பு' என்பதற்கு கோபித்துக் கொள்ளாதீர்கள். உடும்பு பிடித்தால் விடாது. குடும்பமும் அப்படித்தான். இது ஜன்ம ஜன்மாந்திரங்களில் நடக்கும் சுவாரஸ்யமான சோகக்கதை. சுகமான நாவல் என்றும் சிலர் சொல்வார்கள்.

கனியா! காயா?

ஆதியில் தேவனால் ஒதுக்கப்பட்ட மரத்திலிருந்து (Forbidden Tree) மறுக்கப்பட்ட ஒரு காமக்கனியைப் பறித்துத் தின்றுவிட்ட, ஆதாமும் ஏவாளும் (ADAM and EVE) ஆரம்பித்து வைத்த மாய விளையாட்டைத்தான் காதல் என்று ஏமாறுவதாக, கிறிஸ்தவ மறையான பைபிள் பேசும். காதலைப்பற்றி இது மேற்குத்திசை கண்ட ஆராய்ச்சி!

ஆணா! பெண்ணா?

நம் நாட்டிலோ, எல்லாமே ஈசன் திருவிளையாடல்தான்! ஆண்டவனே அர்த்தனாரீஸ்வரன்; அதாவது பாதிப்பெண் ஆண்டவன்! காதல் என்றால் அது ஒரு கடவுள் வழிபாடு! இறைவனுக்கு மனித ஜீவன் படைக்கும் நிவேதனம்! 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குவதே ஆண்டவனுக்கு

மனிதன் செய்யும் நித்திய பூஜை' என்பார்கள் பக்தமணிகள். மனித குலத்தை மிருக நிலைக்குத் தள்ளிவிடாமல், நாளது வரை காப்பாற்றும் ஒரு கடமையில் உதித்த, கௌரவமாக வளர்ந்த ஒரு சமுதாயக் கட்டுப்பாடுதான் காதல் என்பது எல்லோரும் ஒன்றாக ஏற்றுக்கொள்ளும் ஒரு உண்மை. இது ஒரு வாழ்க்கையின் சட்டம்? ஆமாம், ஒருவனுக்கு ஒருத்தி என்ற சட்டத்தை மீறும்போதும், மனிதன் தன்னையுமறியாமல் மிருக நிலைக்குத் தாவுகிறான் என்று அர்த்தம். இது காதலைப் பற்றி நமது மேலோர் கண்ட கோட்பாடு.

வேதாந்தமா?

பெரிய வேதாந்திகள் 'யோசிக்கும் வேளையில் எல்லாமே ஒருபோது, உண்ணுவதும் உறங்குவதுமாக முடியும்' என்பார்கள். ஆம். இந்த வேதாந்தம், யோசிப்பவர்களுக்குத் தானே. காதலை யாசிப்பவர்களுக்கு இது பொருந்துமோ? ஒருமுறை ஏதோ அறியாமல் ஒன்றுபட்டு விட்ட காதலர்கள், ஏழு பிறப்புகளிலும் ஒன்றாக வாழ அல்லவா விரும்புகிறார்கள். போகட்டும் வாழ்ந்து விட்டுப் போகட்டும், நமக்கென்ன?

வியாபாரமா?

"என்னய்யா இது? நகைச்சுவை ஆராய்ச்சி என்று காதலைப் பற்றி ஏதேதோ அளந்துகொண்டே போகிறீர். இந்த விஷயத்தில் உம்முடைய அபிப்பிராயத்தை சீக்கிரம் சொல்லித் தொலையும்" என்று நீங்கள் கேட்பதும், நம் காதில் விழுகிறது. நம்மைப் பொறுத்தவரை காதல் என்பது ஒரு எக்சேஞ்சு பிசினஸ். ஆம்! இது ஒரு இதயமாற்று வியாபாரம். ஆம். இரண்டு உயிர்கள் இடத்தை மாற்றிக் கொள்ளும் இயற்கையின் பிசினஸ். வட்டியில்லாமல் வாங்கிய கடன். இரண்டு உயிர்கள் இடத்தை மாற்றிக் கொள்ளும் இன்பத்தின் இரகசியம் என்றெல்லாம் கல்யாணம் ஆகுமுன்பு எழுதினேன்.

இப்போது அனுபவத்தின் அறிவு தந்த சாட்டை அடிகளால், அதாவது பட்டறிவு தந்த கட்டடிகளால்,

அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டது மனம். காதல் என்ற வார்த்தையைக் கேட்டாலே ஏதோ ஒரு கசப்பு. வெறுப்பு, அலர்ஜி. இரண்டு உயிர்கள் தத்தம் இடங்களை மட்டும் மாற்றிக் கொள்ளவில்லை. கடைகளையும் மாற்றிக் கொள்ளும் ஒரு கடைமாற்று வியாபாரம்தான் காதல் என்று சொல்லும் அளவுக்குத்தான் இப்போதைய ஆராய்ச்சியின் முடிவு இருக்கிறது! மேலும் மாறலாம். யார் கண்டது! ஆராய்ச்சிக்கு முடிவுதான் இல்லையே!

இந்த வியாபாரத்தில் லாப - நஷ்டம், இன்ப - துன்பம், உறவு - பகை, வெப்பம் - குளிர்ச்சி, சிரிப்பு - வெறுப்பு, குணம் - குற்றம், பாசம் - பக்தி, அமைதி - புயல், பயம் - நயம், அன்பு - பண்பு எல்லாமே வரும் போகும். ஆக, இதுகள் எல்லாம் காதல் மார்க்கட்டின் வரவு - செலவுக் கணக்குகள். ஆனால், இந்த உணர்ச்சிகள் அனைத்திற்கும் மேலாக மேலாதிக்கம் செலுத்தி, கங்காணியாக இருப்பது நகைச்சுவை ஒன்றுதான் என்பதை மட்டும் நாம் மறக்க முடியாது. காதல் நாடகம் என்ற பேரில் நடத்தப்படும் சில நாடகங்களில் வரும் நகைச்சுவையைப்போல், ஆயிரம் தெனாலிராமன்கள் சேர்ந்தாலும், நூறு கோமாளிகள் வந்தாலும், நகைச்சுவையை நமக்குப் பரிமாற முடியாது! ஆக, நாம் கண்ட சில காதல் பாத்திரங்களில் மிஞ்சியிருக்கும் சுவை நகைச்சுவைதான் என்பது நமது அசைக்க முடியாத முடிவு. அக்காலத்தில் தீட்டப்பட்ட தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் முதல் இக்காலத்து இல்காப்பியல் நாயகிவரை, முதலிடம் தருவது நகைச்சுவைக்குத்தான்.

தொல்காப்பியமா?

ஆம், தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில், அதாவது நடிப்பியலில், குறிப்பிடும் எட்டுச் சபைகளில் 'நகையே அழுகை, எளிவரல், மருட்கை' என்றுதான் துவங்குகிறார். 'பகையே, காதல்' பருவக்கனியே; என்று துவங்கவில்லை.

இக் காலத்தில் நமது சகதர்மணியும், அதாவது இல்லத் தரசியும், நகையுடன்தான் (சிரிப்புடன்தான்) தனது நகைக் கோரிக்கைக்குரிய முதல் அப்ளிகேஷனைப் போடுகிறாள்.

ஆம். நம் பெண்ணரசியின் புன்னகை பொன்னகைக்குரிய விண்ணப்பம் என்று ஒரு நன்னகை ஆசிரியர் கூறுவதை மிகை எனக் கொள்ளாதீர்கள். பெண்ணொருத்தி நகைத்தால், ஆண் ஒருவனுக்கு அழுகை கட்டாயம் உண்டு என்பதைக் கூறாமல் கூறுகிறார் ஒரு பேராசிரியர்.

இந்த நன்னகை ஆசாமி, பிஞ்சிலே பழுத்தவராக இருக்கலாம். பிஞ்சிலே பழுத்தவர்களை விட்டுவிடுவோம். முதிர்ந்து பழுத்த முதுபெரும் ஆசிரியர்களையே எடுத்துக் கொள்வோமே.

பத்தரா! பித்தரா! புத்தரா! சித்தரா?

மிகப்பிரபலமான மகாகவிஞர்கள்கூட, "காதல் என்பது பசிபிக் மகாசமுத்திரத்தைப்போல் ஆழமானது; அது எவரெஸ்ட் சிகரம்போல் உயரமானது - நீளமானது - பரந்தது - விரிந்தது - திறந்தது - இப்படியெல்லாம் பேசும் மகாகவிகள் கூட, காதலர்களைப் பற்றிச் சொல்லும்போது, கற்பனை ஹாஸ்யமிக்க பைத்தியங்கள்" (The lunatic the lover and the poet are of imagination all compact - Shakespare) என்றுதான் புகழ்ந்துரைக்கிறார்கள். அதாவது "காதல் பக்தர், பித்தர் அதை எடுத்துரைக்கும் கவிஞர் ஆகிய எல்லாருமே ஒரே மாதிரியானவர்களே" என்கிறார் ஷேக்ஸ்பியர். இந்த மனுஷனே ரோமியோவை ஒரு பைத்தியக்காரக் கவிபோல் பேச வைக்கிறார் பாருங்கள்: "ஜூலியட்டின் உப்பரிகைதான் கீழ்த்திசை! அதிலிருந்து எட்டிப் பார்க்கும் என் ஜூலியட் தான், காலைக் கதிரவன்" என்கிறான் ரோமியோ, (Yonder the East; Juliet the Sun!) என்கிறான். அவன் கொண்ட காதலின் கதகதப்பில் உதயமாகிறது காதலீய சூரியன். குளிர் தண் வெண்ணிலவான தளிர் மங்கை ஜூலியட், அவன் கண்ணுக்குக் காலைக் கதிரொளியாகக் காட்சி தருகிறாள்! இது ரோமியோ என்ற காதல் பைத்தியத்தின் வாயிலாக ஷேக்ஸ்பியர் தரும் மிகப்பெரிய நகைச்சுவையல்லவா!

பிரிந்தவர் கூடினால்?

'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ! "நோக்கு ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல" என்று. நம்மைப்

பார்த்து ஒரு கேள்வி கேட்டுவிட்டு பத்துப் பக்கம் காதலைப் பற்றி பேசிக்கொண்டே போகிறார், கவிதா சாம்ராஜ்யங்களின் சக்ரவர்த்தியான கம்பநாட்டாழ்வான், "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" இப்படி! இவர்கள் சந்திப்பதற்கு முந்தி இராமனும் சீதையும் என்ன, பார்வை இழந்த குருடர்களாகவா இருந்தார்கள்! இல்லை. வாக்கினைக் கடந்ததொரு தெய்விக நோக்கு இது!

தாமரை, தான் மலருமுன் மொட்டாக இருந்த தன்மை போல், இருவர் மனமும் காதல் விஷயத்தில் மொட்டாக இருந்தது. காலம் வந்ததும் மனக்கண் மலர்கிறது. மாசிலாக் காதல், ஒளிமதுக் களிப்பைக் காணுகிறது. தெய்வம் புன்னகை புரிகிறது. இராமனும் சீதையும் மாத்திரமா சிரிக்கிறார்கள். கம்பனும் நாமும் மாத்திரமா சிரிக்கிறோம். இந்த பிரபஞ்சத்தையே மலரச்செய்து, சிரிக்க வைக்கும் அமர சித்திர மல்லவா இது. மனித மனத்தை சிரிக்க வைத்து, படைப்பு நாட்டியத்தின் அலாரிப்பைத் துவக்கி வைக்கும் காதலின் சிரிப்பே நீ வாழ்க!

சிங்காரமா!

இதோ நம்மைச் சிரிக்க வைக்கும் மற்றொரு அழகுணர்ச்சி ஆட்டிவைக்கும் சிங்கார நாட்டியத்தின் ஜதிஸ்வரம்.

குரும்பைமென் முலையாராடக்
கூந்தலின் நறவம் தோய்ந்த
இரும்புனல் ஆறுபாய
எறிதிரை சுருட்டும்தெண்ணீர்
கருங்கடல் புலவிநீங்கி,
நறுமணம் கமழ்ந்ததென்றால்,
முருந்துறழ் மூரலார்தம்
மிகுதியை மொழியலாமோ?

இது அதிவீரராம பாண்டியன் நிடதநாட்டு அழகிகளை பற்றிக் கூறும் ஒரு அதிசயோக்தியான அற்புத நகைச்சுவை. அதாவது உயர்வு, நவிற்சி அணியின் உச்சக்கட்டம்.

பாட்டைப் படிக்கும்போதே, பெண்வாசனையின் நெடி நெடுந்தூரம் வீசுகிறது! திருமணங்களின் கதம்ப வாசனை, திணற வைக்கிறது. மானுட ரசகந்த மகத்துவம் மனிதனை திக்குமுக்காடச் செய்கிறது.

வாசனைக் கடல்!

அதாவது நிடத நாட்டின் கடல் எல்லாம் செண்டுக் கடலாக, (Sea of Scent) அதாவது, வாசனைக் கடலாக மாறி மணம் வீசுகிறதாம். அத்தர் - புனுகு - அரகஜா - பன்னீர். சந்தனக் கலவை - சண்பக மணங்கள் - மகிழம்பூ, தாழை, மல்லிகை - முல்லை, அல்லி, வல்லி... இத்தனை மணமும் மெழுகாகி, ஒன்றாகத் திரண்டு உருண்டு கலந்து, சிறந்த தொரு வாசனை மலை ஆகிவிடுகிறது. அந்த நாட்டு அழகான மங்கையரும், மாதரும் மேற்கண்ட வாசனை மெழுகு மலையில் கொஞ்சம் எடுத்தெடுத்து தங்கள் அணியுடன் அப்பிக் கொள்கிறார்கள். அதன் வேலை தீர்ந்ததும், அத்தனை வாசனைக் கலவையும், அவர்கள் தினசரி குளிக்கும் ஆறுகளில் கலந்து விடுகிறதாம். அந்த ஆறுகள் எல்லாம் வாசனை ஆறுகளாக மாறி, கடலில் கலக்கின்றனவாம். அதனால் நிடதநாட்டின் கடல் எல்லாம் (Perfumed Ocean) வாசனைக் கடலாகி விடுகிறதாம். என்ன அநியாயமய்யா இது. 'பொய் சொல்லுவதற்கும் ஒரு எல்லை வேண்டாமா? என்று அலுத்துக் கொள்ளாதீர்கள். மனுசன் படும் வேதனைக் கடலைத் தெளிவிக்க, கவிஞன் ஒரு வாசனைக் கடலைத் தன் கற்பனை வானில், கவிதா பிர பஞ்சத்தில் படைத்துக் காட்டுகிறான். பொய் சொல்லுவதால் அதி வீரராம பாண்டியனுக்கு ஒன்றும் லாபமில்லை. லாபம் ரசிக சிகாமணிகளாகிய நமக்குத்தான்! இது கருப்புப்பண லாபமில்லை! நல்லதொரு கவிதையில் வந்துள்ள கற்பனை லாபம்! அனுபவியுங்கள்.

நாலும் தெரிந்தவர்!

காதலை நாலுமறிந்தவர்கள் சிங்கார நகைச்சுவை என்பார்கள். நாமும் நாளைக்கு அந்த நாலுமறிந்த நாலு

பேரை அறிய வேண்டியவர்கள்தானே! ஆதலால் காதல் என்பதில் நாம் காணும் நகைச்சுவைகளை ரசிக்கக் கற்றுக் கொள்ளுவோமே. இது ஒரு நஷ்டமில்லாத வியாபாரம், கஷ்டமில்லாத காரியம். இதை விட்டு விட்டுக் காதல் என்பதை, ஏதோ பேய் பிசாசைப் போன்ற, பயங்கரமான தொரு சீரியஸ் விஷயமாக எடுத்துக் கொண்டு ஏன் பெருமூச்சுடன் சிரமப்படவேணும்? அப்படிக் கஷ்டப்பட்ட தெல்லாம் போதுமய்யா போதும்.

இந்தக் காதலர்கள், பைத்தியம் முற்றும்போது எப்படி யெல்லாம் காமெடியன்களாக மாறித் தொலைக்கிறார்கள் என்பதை இந்த நூலில் வரும் ஒரு சில நாடகக் காட்சிகள் மூலம் கண்டு ரசிப்போம்! கலை என்றாலே ஏதாவது ஒரு காட்சியை ரசமாகக் காட்டுவதுதானே.

ஊர் சிரிக்கிறது!

மணிமேகலை என்பதொரு காப்பியக் கதை! அதில் சாதுவன் என்னும் காதலன் ஒருவன் வருகிறான்! அவனுக்கு ஆதிரை என்னும் ஒரு பதிவிரதை மனைவி! கப்பல் வியாபாரி யாகிய சாதுவன், கன்னிகள் வியாபாரத்தில் ஈடுபடுகிறான். வாழ்வுக் கடலில் காதல் கப்பல் கவிழ்கிறது! விதியால் உயிர் பிழைத்து மீண்டும் வருகிறான்.

அது போகட்டும். அதே கதையில் கிள்ளி என்ற சோழ அரசனது மகன் உதயகுமாரன் என்பவன் ஒரு கதாநாயகன்! இந்தப் பயலுக்கு மணிமேகலை என்ற பெண்ணைச் சுற்றிச் சுற்றி வருவதைத் தவிரவேறு ஒரு வேலையும் இருப்பதாகத் தெரியவில்லை. இது அந்தக் காலத்துக் கதாநாயகனுக்கு அமைந்த இலக்கணம் போல் இருக்கிறது. அந்தக் காலம் மாத்திரமென்ன? இந்தக் காலம் மட்டும் ரொம்ப வாழ்கிறதா என்ன?

இந்தக் காலத்து நாடகம் சினிமாக்களில் வரும் பெரும் பான்மைக் கதாநாயகர்களும், இதே காரியத்தைத்தான் செய்கிறார்கள். இந்த லட்சணத்தில் புதுமை, கலை முன்னேற்றம் என்றெல்லாம் பேசி ரசிகர்களின் வயித் தெரிச்சலைக் கிளப்பி விடுகிறார்கள் விளம்பர வியாபாரிகள்!

ஒரு பெண்ணின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு அலைபவனுக்குப் பெயர் கதாநாயகனாம்! அந்தக் கதா நாயகனது வாலைப் பிடித்து இழுப்பவன் வில்லன்! இந்த வில்லனது காலைப் பிடித்திழுப்பவன் காமெடியன்! காமெடியன் தோலை உரித்துக்காட்டி ஒப்பாரி வைப்பவள் தோழி! அதாவது காமெடியனி. இப்படி ஓய்ந்து அறுதப் பழசாய்ப்போன முறைகளை, மீறியும் ஒரு சில நல்ல நாடகங்கள் உதயமாகின்றன. ஆனால் நம்ம வாடிக்கை ரசிகர்களுக்கு பழரசனை மாறும்வரை இத்தகைய நாடகக் காட்சிகளில், 'காதல்' என்ற பெயரில் வரும் கேலிக்குரிய சிரிப்புக் காட்சிகளைக் காணத்தான் வேண்டும். இது ரச ஆராய்ச்சியின் தலைவிதி. நமது நாடகக் கலையின் கதி! என்ற தைரியத்துடன் இதையெல்லாம் ரசிப்போம்! அப்போதுதான் காலத்துக்குரிய நாடகத்தை நம்மால் ஆக்கமுடியும்.

சிலப்பதிகாரக் கோவலனும், மணிமேகலையில் வரும் உதயகுமாரனும், குண்டலகேசியில் வரும் சத்துகனும் கதாநாயகர்கள் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு உதாரணங்களாக இருக்கிறார்கள். அதாவது (Negative Characters) பெண் பிள்ளையைச் சுற்றிக் கொண்டும், கடைசியில் அதற்காகக் கண்ணீர்க் கடலில் விழுபவனும் ஹீரோ அல்ல! சுத்த கோழைப் பயல்கள்! கடமை, கண்ணியம், கட்டுப்பாடில்லாமல், முன் ஜன்மம் என்ற அழுமூஞ்சி விதிக்கு அடிமைப்பட்ட கோழைப் பயல்களுக்கு! உதாரணம் இந்த மூவரும்! வீரமிக்க தமிழகத்தில், இப்பேற்பட்டவர்களும் இருந்தார்களே என்று நாமெல்லாம் எண்ணி வருந்துவதற்காகவே எழுதி வைக்கப்பட்ட பாத்திரங்கள்! இவர்கள் ஊர் சிரிக்க வாழ்ந்தவர்கள். உளம் சிரிக்கத் தெரியாதவர்கள். ஆகையால் இவர்களைப் பார்த்து நாமும் சிரிக்கலாம். சரி - சரி ஆராய்ச்சி போதும்.....! இனி நாடகக் காட்சிகளைக் காண்போம்!

'காட்டுவித்தால் யார் ஒருவர் காணாதாரே!
ஆட்டுவித்தால் யார் இருவர் ஆடாதாரே...!'

❋

உலகம் சிரிக்கிறது!

காட்சி - 1

இடம் : புகார் நகரம்

(புகார் நகரத்து வீதியில் சோழ இளவரசன் உதயகுமாரன், தன் நண்பன் கலைமணியுடன் உலா வருகிறான். அப்போது மாதவியைப் பார்ப்பதற்காகப் புறப்பட்ட மணிமேகலையும், சுதமதியும் ஒரு வண்டியிலும், மற்றொரு வண்டியில் பாட்டியும், மாமாவும் போய்க்கொண்டிருக்கின்றனர். பாட்டி சென்ற வண்டி வழிதவறி முன்னால் சென்றுவிட, ஒரு பள்ளத்தில் இறங்கி விடுகிறது. அவ்வமயம் அவ்வழியே வந்த உதயகுமாரன் அவர்களை ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறான். இளவரசனும், மேகலையும் தங்கள் இதயங்களை கண் வழியே பரிமாறிக் கொள்கிறார்கள். புன்சிரிப்பு ஒன்றைத் தவிர வேறெதுவும் பேச முடியாமல் மௌனமாக முழிக்கிறார்கள். தோழன் கலைமணி இந்த மௌனத்தைத் தன் கனைப்பால் கலைக்கிறான்)

சுதமதி : ஐயா; கடவுள் போல வந்து காப்பாத்தினீங்க! நீங்க வந்திருக்காவிட்டா...

கலைமணி : நாங்க இப்போ இங்கெ வராமல் இருந்தா வண்டியும் நீங்களும் வந்த இடத்துக்கே போயிருப்பீங்க!

இளவரசன் : கலைமணி! இவர்கள் இருப்பிடம் ஏற்கெனவே தெரியுமா உனக்கு?

கலை : யாருக்குங்க தெரியும்! பார்த்தா, தேவ லோகத் திலே இருந்து வந்தவங்க மாதிரி இருக்கு! நாம

வந்திருக்காவிட்டா... கட்டாயம் அவங்க அங்கே தானே போயிருக்கணும். அதனாலே சும்மா அப்படிச் சொல்லிப் பார்த்தேன்.

இளவ : நண்பா! யாரென்று கேள்...

கலை : *(சுதமதியிடம்)* ஏம்மா, உங்களுக்குக் காது கேக்குதில்லே?

(சுதமதி மேகலையைப் பார்க்கிறாள், அவளது சம்மதத்தைப் பெறுவதற்கு)

சுதமதி : பூம்புகாரின் கலையரசி! மாதவி பெற்ற மாதவச் செல்வி மணிமேகலை...

கலை : அட! உங்க பேரைக் கேக்கலீங்க அம்மா! அவங்க... அவங்க... பேரை...

சுதமதி : அவங்க பேருதான் நான் சொன்னேன்.

கலை : மனிமேகலை என்னப்பா! காதில உழுந்துதில்லே! சரி. போகலாமில்லே?

சுதமதி : ஐயா! தாங்கள்...

கலை : நம் பெயர், சகல கலா கதம்பதாசன், உயர் திருவாளர் உத்தமக் கலைமணியார்.

சுதமதி : அட உங்க பேரைக் கேக்கலீங்க... அவங்க அவங்க பேரை...

கலை : புரியுதுங்க... இவங்க பேரை நான் சொல்லாமலே தெரிஞ்சுக்குவீங்க! அதுதான் உங்களைப் போன்ற பொம்பிளை புத்திசாலிகளுக்கு அழகு! ஆகை யினாலே நீங்க போயிட்டு வாங்க...!

(இளவரசன் தன் பெயரைச் சொல்ல எத்தனிக்கிறான்)

இளவ : என் பெயர்...

கலை : உம்... மூச் கதாநாயகன் பேரை உடனே சொல்லிப் புட்டா, காரியம் கெட்டுப் போயிடும். கலாரசனை குறைஞ்சு போயிடும். இதோ பாரு! இலை போட்டாச்சு. பலாச்சுளையும் பால் பாயசத்தை யும் கொஞ்சம் பொறுத்துப் போட்டாத்தான் கலைநயத்தோடு சுவைக்க முடியும்! சரி... சரி வா அம்மா! பார்த்துப் போ... உங்க மாடு மிரண்டதோட இருக்கட்டும்... நீங்களும் மிரண்டுடாதீங்க.

(காட்சி - 1 முடிவு)

காட்சி - 2

இடம் : புத்தர் கோட்டம் - அங்குள்ள தோட்டம்

(சாந்தப் புன்னகை தவழும் புத்ததேவனின் பிரம்மாண்டமான சிலை - அணி விளக்குகள் அலங்காரமாக ஒளி வீசுகின்றன. புதிய மலர்கள் சூட்டப்பெற்ற பாத பீடிகை, அறவணர் முன்னிற்க, இருமருங்கிலும் பல பிட்சுக்களும், பிட்சுணிகளும் பிரார்த்தனைக் கீதத்தைப் பாடுகின்றனர். பாட்டு முடிந்ததும், ஒருபுறம் கண்ணீரிலே தன் துயரைக் கழுவி நின்ற மாதவியைக் கண்டு)

அறவணர் : மாதவித் தாயே! ஏன் மனக் கலக்கம். மாயை இருள் கடந்து மாதவ ஜோதியைக் காண வந்திருக்கும் உன் கண்களைத் துன்பத்திரை மறைக்கக் கூடாது அம்மா! ஏன்? இங்கு உனக்கு என்ன குறை? கவலையின் காரணம்?

மாதவி : என்னைப் பற்றி நான் கவலைப்படவில்லை அண்ணலே! என் மகள் மணிமேகலையின் வருங் கால வாழ்வு...

அறவ : உன் மகள் மணிமேகலையா? நீ யார்? அவள் யார்? அவளைப் பற்றிக் கவலைப்பட உனக்கு அதிகாரம் ஏது? அவரவர் வினையின்படியே சுற்றும் விதி யின் சக்கரம்! அதன் வேகத்தின் படியே உயிர் களின் வாழ்வுப் பாதையும் அமையும். உலகமே அழுதாலும் விதி இரக்கம் காட்டாது.

மாதவி : விதி விரட்டும்படி அவள் ஒரு குற்றமும் செய்ய வில்லையே தந்தையே.

றவ : மணிமேகலை! அவள் எதிர்காலத்தின் அணையா விளக்கு? கண்ணகிதேவி கற்புக்கனலானாள். மணிமேகலை கன்னித் தெய்வமாக விளங்கப் போகிறாள். கண்ணகி புரட்சியின் பெருங்கடல்!

மணிமேகலை, அக்கடலில் கட்டப்பட்ட ஒரு கலங்கரை விளக்கம். அவளைப் பற்றிக் கவலை வேண்டாம். நீ உன்னைப் பற்றி எண்ணிப்பார்! பந்த பாசம் துறந்து, பக்திப் பெருக்கிலே பணி செய்யம்மா! பிறவித் துயர் நீங்கும்! ஐயன் அருள் செய்வான். புத்தரின் பொன்னடிகளை உள்ளத்தில் வணங்கு. மலைபோன்ற மனத்துன்ப மெல்லாம் மலர் போன்று எளிதாகிவிடும். உனக்கு இன்னொரு புதிய பணி தருகிறேன். இன்று பிட்சுணிகள் மாமல்லபுரம் செல்கிறார் கள்... நீயும் போய் அன்புப்பணி செய்து வாம்மா...

மாதவி : *ஆணை தந்தையே!*

அறவ : *கவலைப்படாதே.. உன் மேகலை உன்னிடமே வருவாள்... புத்தம் சரணம் கச்சாமி...*

(காஞ்சனன் வருதல்)

காஞ்சனன்: *வணக்கம் அண்ணலே!*

அறவ : *யாரப்பா நீ? என்ன வேண்டும்.*

காஞ்ச : *சுவாமி! என் பெயர் காஞ்சனன். நான் ஒரு கந்தருவன். இவள் என் மனைவி காயசண்டிகை.*

அறவ : *(சற்று யோசித்து அவரது முன்கதை அறிந்து) பாவம்! தீராத பசி நோயால் இளைத்துவிட்டாள். அவதிப்படுகிறாள், இல்லையா?*

காஞ்ச : *ஆம் சுவாமி! தங்களுக்கு எப்படித் தெரியும்?*

அறவ : *தெரியும் மகனே! இன்னும் கேள். அன்றொரு நாள் பொதிகை மலையில் விருச்சிகன் என்னும் ஒரு மாதவ முனிவன், தன் பசிக்கு வைத்திருந்த உணவை, உன் மனைவி எடுத்ததால், அம் முனி வன் வெகுண்டு கொடுத்த சாபத்தின் விளைவாக, தீராத நோயால் தேம்புகிறாள் உன் துணைவி!*

காஞ்ச : *ஆ! தெள்ளத் தெளிய தெரிந்திருக்கிறதே தங்களுக்கு!*

அறவ : எங்களுக்கு வாழ்க்கை ஒரு திறந்த காவியம் தம்பி!

காஞ்ச : ஆம் ஸ்வாமி! அது இங்கே வந்தால் தீருமென்று சொன்னார்கள்.

அறவ : நோய் தீர்க்கும் மருத்துவன் நானல்ல தம்பி! எல்லா நோய்க்கும் காலம் என்ற மருத்துவனின் கருணை வேண்டும். அந்தக் காலமும் அணுகி விட்டது! அது வரை நீங்கள் இங்கேயே இருக்கலாம்.

காஞ்ச : ஆணைப்படியே சுவாமி! ஆனால் அடியேனுக்குக் கொஞ்சம் அலுவல் இருப்பதால் காயசண்டிகையை மட்டும் தங்கள் அடைக்கலமாக இங்கு விட்டுப் போக எண்ணுகிறேன்.

அறவ : கந்தருவப் பெண் காவி மடத்திலா...! உம்... இருக்கட்டும். மகளே! இனி இது உன் சொந்தத் தாய் வீடு! மனம் கலங்காதே! மாதவனை நம்பு! மாயப் பிணி நீங்கும். மரணம் மாண்டு விடும்! எல்லா நலமும் எளிதில் கிடைக்கும்!

காஞ்ச : காய சண்டிகை! நான் போய் வருகிறேன், சுவாமி! இனி தாங்கள்தான் தாய், தந்தை, குரு, தெய்வம் எல்லாம்!

அறவ : அடைக்கலம் என்பவரை அன்னைபோல் காப்பாற்றுவான் எனது ஐயன்! அஞ்சவேண்டாம் மகளே! *(மாதவியை நோக்கி)* மாதவி! மாதவனின் இல்லத்திற்கு மற்றொரு மகள் வந்திருக்கிறாள். அழைத்துப் போ.

புத்தம் சரணம் கச்சாமி!
தம்மம் சரணம் கச்சாமி!!
சங்கம் சரணம் கச்சாமி!!!

(மாதவி காயசண்டிகையை அழைத்துச் செல்கிறாள்)

(காட்சி - 2 முடிவு)

காட்சி - 3

இடம் : பூம்புகாரில் மணிமேகலை வீடு

மேகலை : சுதமதி! இங்கு வந்தும் என் தாயைக் காண முடியவில்லையே! எல்லோருக்கும் இன்பம்! எனக்கு மட்டும் துன்பமா? அம்மாவைச் சீக்கிரம் பார்க்க வேண்டுமே!

சுதமதி : புத்த சங்கத்தோடு எங்கேயோ யாத்திரை போயிருக்கிறார்களாம். அவங்க வந்ததும் நாம் தான் அங்க போய்ப் பார்க்கணும்! பாட்டி சித்ராபதியைக் கேட்டா, பஞ்சாங்கம் சரி யில்லைங்கிறாள்.

மேக : பெற்ற தாயைப் பார்ப்பதற்குப் பஞ்சாங்கம் எதற்கு சுதமதி?

சுதமதி : பாட்டியின் பிடிவாதம் அப்படி! நீ கவலைப் படாதே மேகலா! சீக்கிரம் உன் தாயைக் காண நான் ஏற்பாடு செய்கிறேன். இதோ பார்! எங்கே, உன் விரல்கள் இவ்வீணைக்கு உயிர் தரட்டும்...

மேக : சுதமதி! இந்த வீணையின் நரம்புகளில் நாதம் ஒளிந்திருப்பது போல், என் உள்ளத்தில் ஏதோ ஒரு சோகம் உறைந்திருக்கிறது!

சுதமதி : ஆசையின் மற்றொரு பெயருக்குத்தான் சோகம் என்று பெயர்.

மேக : ஆசை என்றால்?

சுதமதி : அதுவா! பாசத்தின் குழந்தை! அன்பு என்னும் மாறு வேஷத்தோடு ஆடுகின்ற சாத்தான்!

மேக : புனிதமான உணர்ச்சிக்குப் பயங்கரமான பட்டம் தருகிறாய் சுதமதி!

சுதமதி : என்ன செய்வது! உலகில் புண்ணியம் என்கிற பதம் தோன்றியபோதே, பாவம் - பயங்கரம் எல்லாம் தோன்றிவிட்டது மேகலா!

மேக : உன் தத்துவத் தலைவலி போதும். வேறு ஏதாவது பேசேன்.

சுதமதி : வேற எதைப்பத்திப் பேச? உன் மனசிலே இருக்கிற அந்த இளவரசரைப் பற்றிப் பேசினால் இன்பமா யிருக்கும் உனக்கு!

மேக : அவரைப் பற்றி நான் நினைப்பது உனக் கெப்படித் தெரியும்?

சுதமதி : நீ முழிக்கிற முழியிலிருந்தே தெரியுதே.. அன்னைக்குச் சந்திச்சதிலேருந்து, அவர் அழகு பாக்குற கண்ணாடியா ஆயிட்டே நீ...

மேக : அவர் மீண்டும் வருவாரா?

சுதமதி : வருவாராவது? வரச் செய்திருக்குமே உன் பார்வை!

மேக : அவர் பெரிய கலை வள்ளலாமே!

சுதமதி : இல்லாவிட்டால் அவர் கண், அன்னிக்கி, உன்னை அப்படிப் பார்த்திருக்குமா? அடே யப்பா... அன்புக் கண்ணு அம்புக் கண்ணுன்னு சொல்வாங்க. அதை அந்த ஆள்கிட்டேதான் பார்த்தேன்...

மேக : அந்தப் பார்வையில் வாஞ்சை இருந்தது...

சுதமதி : வஞ்சகமில்லாத உன் கண்களுக்கு வேறு எப்படித் தெரியும்?

மேக : உயிர் நிறைந்த பார்வை...

(இதே காட்சியின் தொடர்ச்சி)

காட்சி – 3 (a)

இடம் : கூடம்

(சித்ராபதியும் – மாமாவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்)

சித்ரா : ஆமாம் உயிரைப் போலக் காப்பாத்தினேன்!

மாமா : உடம்பைப் போலப் பிரிஞ்சு போயிட்டுது மாதவி!

சித்ரா : கண்ணைப் போலக் காப்பாத்தினேன்!

மாமா : காக்கா மாதிரி பறந்து போயிட்டுது! அதுக் கென்ன செய்யலாம்! இதோ பார் அக்கா! நீ இப்படி எதுக்கெடுத்தாலும், புலிமாதிரி பெரு மூச்சு விட்டுக்கிட்டே இருந்தே, அப்புறம் இந்த வீடு உருப்படாது! அப்படிக் கலகலன்னு கோயில் பசுமாடு மாதிரி சுறுசுறுப்பா சுத்திக்கிட்டு இருக்க வேணாமா? ஆமா இப்போ நீ எதுக்காக வருத்தப் படறே? யாருக்கு என்னா வந்துட்டுது?

சித்ரா : என்னமோடா அப்பா! நான் சாகறதுக்குள்ளே–

மாமா : யாரு! நீயா? நீயா சாகப்போறே? அக்கா! நீயும் நாளும் சாகறதா இருந்தா என்னிக்கோ, நம்ம மாதவி துறவியான அன்னிக்கே செத்திருக்கணும். அந்த எமப்பயல் ஏமாந்துட்டான்! நம்ம ஆயுசு கெட்டி! நீதான் அந்த நாள்ளே அரண்மனை வைத்தியர்கிட்ட காயகல்பம் சாப்பிட்டிருக்கியே! அப்புறம் எப்படிச் சாக முடியும்! சாகமாட்டே! உடும்பு மாதிரி ரொம்ப காலம் உன் உடம்பு உறுதியாய் இருக்கும்... நீ அனுபவிக்க வேண்டியது நிறைய இருக்கு!

சித்ரா : உம்... எப்படியாவது நம்ம மணிமேகலை அரங்கேத் தத்தைச் சீக்கிரமா நடத்தி முடிச்சுடணும் தம்பீ!

மாமா : அதுக்கெல்லாம் நான் ஏற்பாடு செய்துட்டேன்...

சித்ரா : அப்படியா! மகாராஜாவைப் பார்த்தியா?

மாமா : இதுக்கு மகாராஜா எதுக்கு! இன்னொரு சகா ராஜா மேலே வலை வீசி இருக்கேன். பெரிய கப்பல் வியாபாரி! சரியான பைத்தியக்காரன்! பொம்ப ளைன்னா, பம்பரமாச் சுத்துவான்! மேகலை பேரைக் கேட்டதிலேருந்து மத யானையா ஆயிட்டான். நான் மாவுத்தன் ஆயிட்டேன். இனி ஏறி சவாரி செய்ய வேண்டியதுதான்!

சித்ரா : எப்போ வருவான்!

மாமா : கூடிய சீக்கிரம் வந்துடுவான்! இப்பத்தான் மூட்டைக் கட்டிக்கிட்டிருக்கான்!

சித்ரா : என்ன மூட்டை?

மாமா : பாவ மூட்டையான பண மூட்டை! பசும்பொன் குவியல்! ஒரு நாளைக்கு அவ்வளவையும் உன் தலையிலே கொண்டு வந்து போட்டுறப் போறான்! அந்த ஆளு நினைச்சா மரகதக் கல்லி லேயே மாவறைக்கிற கல்லு செஞ்சு தருவான்! சிகப்புக் கல்லிலே உரலு செய்து தருவான்... செங்கல்லுக்கு பதிலா, தங்கக் கல்லையே வச்சு உனக்குச் சமாதி கட்டுவான்!

சித்ரா : ஆ! அவன் பேரு?

மாமா : அலங்கார, ஒய்யார, அதிரூப சிங்கார சீராளன், கப்பல் வியாபாரி சாதுவன் தெரியுதா? சதா கடலிலே சஞ்சாரம் செய்பவன் - கோடீஸ்வரப் பிரபு! அவனுக்கு உலகத்தில் பிடித்தது இரண்டே இரண்டுதான். ஒன்று பொன் கவரும் கடல் வியாபாரம். மற்றொன்று பெண் கவரும் உடல் வியாபாரம். இப்போ இரண்டாவது வியாபாரத் தைத் தேடி நம்ம வீட்டுக்கு வரப்போறானாம்.

(காட்சி - 3 முடிவு)

காட்சி - 4

இடம் : சாதுவன் வீடு

(நகைகளைப் பெட்டியில் அடுக்கிக்கொண்டே)

சாதுவன் : தெரிந்துகொண்டேன்! மேகலா மேகலா! உன்னைக் கண்டதிலிருந்து காதலா இல்லாட்டா சாதலாங்கற கேள்வி எழுந்துவந்து என் எதிரிலே எமன் மாதிரி நிக்குது. சாதுவன் மனசிலே வேதனை அலைமோதுது. இதை நீ தான் சாந்தப்படுத்தணும். ஆகா நண்பா! சாம்பிராணி!

சாம்பி : ஏம்பா நண்பா கற்பூரம்?

சாது : என்னடா என்னை கற்பூரம்னு கூப்பிடுறே?

சாம்பி : நீ ஏண்டா உன்னை சாம்பிராணி என்கிறே?

சாது : நீ சாம்பிராணி மாதிரி கருகிப் போயிக்கிட்டே இருக்கே?

சாம்பி : நீ கூடத்தான் கற்பூரம் மாதிரிக் கரைஞ்சு போய்க்கிட்டே இருக்கே! கற்பூரம் நெருப்பிலே எரியுது. நீ காமத் தீயிலே எரியறே!

சாது : காமம்! முட்டாள்! காதல் என்று கலையழகோடு பேசடா! ஆ! நண்பா! மணிமேகலை மோகனக் கலையின் காந்த மலை!

சாம்பி : ஐயோ... காந்தமலை ஆபத்து. அதுகிட்டே..... நெருங்காதே...

சாது : அவள் எந்த மலையானால் என்ன? நான் ஒரு இரும்புத் தலையன் நண்பா! அவள் பெயரைச் சொன்னாலே பசி தீரும் நண்பா!

சாம்பி : அப்பப் பேரைச் சொல்லிக்கிட்டே இரு. அரிசி மீதியாகும். உன் மனைவிக்கு சமையல் வேலை மிச்சம்.

சாது : திராட்சை ரசத்தைப் பருகினால் தான் மயக்கம்... ஆனா இவளைப் பார்த்தாலே மயக்கம்!

சாம்பி : அடிசக்கை! சொல்லிட்டு மயங்கித் தொலைடா... கீழே விழுந்துடப் போறே!

சாது : மயக்கத்தின் துவக்கமே மூண்டையைக் குடைகிறது நண்பா!

சாம்பி : ஆமாம்! இந்த நகையெல்லாம் எதுக்கு?

சாது : என் தெய்வத்துக்கு இந்த பக்தன் தரும் காணிக்கை.

சாம்பி : சாதுவா! ஜாக்கிரதை! இதோ பாரு... நெருப்பிலே விழுந்த கற்பூரம், கடல்லே கறைஞ்ச வெல்லம், காத்திலே கலந்த வார்த்தை, கணிகைக்கு கொடுத்த காசு, இதெல்லாம் திரும்பி வராது தம்பி! திரும்பி வராது. அனுபவிச்சவன் சொல்றேன். ஆலோசனை பண்ணு.

சாது : முட்டாள்! இந்த விஷயத்தில் என்னை விடவா உனக்கு அனுபவம்? பெண்ணாசையின் எல்லையைப் பார்த்தவன் இந்த சாதுவன்!

சாம்பி : என்னமோப்பா! உன்னைக் காப்பாத்திக்கோ... அவ்வளவுதான் சொல்லுவேன்.

சாது : ஆழம் காணமுடியாத கடல் என்பார்கள் அழகி களைப் பார்த்து! அவ்வாறு நான் சொல்ல மாட்டேன்.

சாம்பி : பின்னே எவ்வாறு சொல்லுவே?

சாது : ஆசைத் தோட்டத்திலே விளைந்த அன்புச் செங்கரும்புகள், சிங்காரிகள்.

சாம்பி : *அந்த தோட்டத்துக்குள்ளே உன்னைப்போல மதயானை புகுந்தா என்ன ஆகிறது?*

சாது : *யானையல்ல நான்! பழுத்துக் குலுங்கும் பெண்மைச் சோலையிலே பறந்து பாடும் பச்சைக்கிளி நான்! நினைத்தபோது பறப்பேன்... நேசித்த பழத்தை ருசிப்பேன்! தேனுண்ட வண்டோடு தெம்மாங்கு பாடுவேன். அழகிகள் இன்புற அந்தாதி பாடுவேன் - செல்விகள் மகிழ்ந்திட சிந்தினைப் பாடுவேன். ஆகா... திளைக்காத உடலின்பம் தீராத பேரின்பம். கண்ணான பெண்ணின்பம்! காதாரும் பண்ணின்பம்.*

சாம்பி : *இன்பத்தின் எல்லையிலே என்ன இருக்கு தெரியுமா உனக்கு?*

சாது : *துன்ப வேலிகள் இருக்கிறதென்று துறவிகள் சொல்லுவார்கள். காதல் கசப்பென்று காவி யுடைக்காரன் கவிபாடுவான். சுகம் மாயை என்று சோம்பேறி கிறுக்குவான். ஆனால் நான் அப்படிச் சொல்ல மாட்டேன். இன்பம் இனிது என்பேன். காதல் கனி என்பேன். நண்பா! பெண்மை எனும் ஊற்று இல்லாவிட்டால், இந்தப் பரந்த உலகமே, பற்றி எரியும் பாலை வனமாய் போயிருக்குமே. மேகலா என்று சொல்லிக் கொண்டே சாகலாமடா நண்பா!*

சாம்பி : *அடிசக்கை, என்னப்பா! காதல் வெறியிலே திடீர்னு கவியா மாறிட்டே.*

சாது : *நான் கவியாக வேண்டுமானால் காவிரி வெள்ளம் மெல்லாம் கள்ளாக மாறவேணும், நண்பா. நதிக்கரையிலுள்ள மரங்களெல்லாம் மேகலை களாக மாறவேணும்! அங்கே நான் ஒரு சிட்டுக் குருவியாகச் சத்தமிட்டு முத்தமிட்டு வருவேன்! தேனீ உருவெடுத்து திவ்யமது திருடுவேன்.*

ஆஹா! நண்பா! இதோ பார்! இப்படி ஒரு மணிமேகலை பிறப்பாள் என்று தெரிந்திருந்தால், நான் இந்த நகையில் உள்ள மரகதக் கல்லாகப் பிறந்திருப்பேன். அவள் மார்பிலே தவழ்ந்தி ருப்பேன். இந்த நகைகளை அவள் பார்த்தால்....

சாம்பி : நகையைக் கண்டு மயங்கும் வகையைச் சேர்ந்த வனிதாமணி மேகலையல்ல நண்பா! அவள் ஒரு புலிக் குகை! புதுப்பகை! கனற்புகை!

சாது : முட்டாள்! உனக்கென்ன தெரியும்! ஆணுக்கு மண்ணாசை! பெண்ணுக்குப் பொன்னாசை... நகையை விரும்பாத நங்கை, கிளையை விரும் பாத குரங்கு. உயிரில்லாத உடம்பு, உப்பில்லாத கடல் நீர், இதெல்லாம் உலகில் இருக்க முடியாது அப்பனே! மணிமேகலை என்ற பெயரே ஒரு நகையின் பெயர்தானே! தமிழைப் படியடா தம்பீ! தத்துவம் தெரியும்! காதல் மகத்துவம் புரியும்!

சாம்பி : அப்பனே! புத்திசாலி! மணிமேகலை என்பது நம் நகரத்தெய்வத்தின் பெயர் தெரியுமா?

சாது : தெய்வம்! எங்கிருந்து வந்தது? சிற்பக் கலைஞன் கண்ட அற்புதக் கற்பனை! உருவம் அற்ற கடவுளுக்கு உருவம் கொடுத்தான்... சிற்பக் கலைஞன்... அதற்குத் தகுந்த பெயரைத் தீட்டினான் தேன்மொழிக் கவிஞன்! இந்தக் கலைஞர்களும், கவிஞர்களும் சேர்ந்தால், கோடானு கோடிக் கடவுள்களை உண்டாக்கி, நம்மைத் திணற அடித்து விடுவார்கள்; சரி! அதிருக்கட்டும்! தம்பீ! நீ என் அறிவை மணி மேகலையிடமிருந்து வேறு எங்கோ திருப்பச் சதி செய்கிறாய்! நான் அங்கே போக வேண்டும்! நீயும் என்னுடன் வா போகலாம். வயதாகி விட்டவன். ஆகையால் வழித்துணைக்கு வரலாம்! வா!

சாம்பி : டேடே! உன் மனைவி ஆதிரை இதைக் கண்டால்...

சாது : அவள் பத்தினி. பதியின் வார்த்தைக்குப் பதில் சொல்ல மாட்டாள். பதிவிரதை!

சாம்பி : சொல்ல மாட்டாள். ஆனால் மனசுக்குள் புகைவாள்... அது ஒரு பகைவாள்! மௌனத் தற்கொலை!

சாது : சேச்சே! அவள் ரொம்ப நல்லவள். என் உடம்பு வலித்தால் அவள் உயிர் வலிக்கும்? அவள் பெய்யெனப் பெய்யுமழை! அவள் கை பெரும் கற்பகக்கை.

சாம்பி : இப்பேற் பட்ட உத்தமியை விட்டுட்டு ஏம்பா ஊர் சுத்தரே! 'கட்டுக்கனி இருக்க, எட்டிக்காய் ஏனடா தோழா'

சாது : நண்பா! பாசம் அங்கே! பக்தி இங்கே! ஆசை அங்கே! அன்பு இங்கே. பார்! ஆயிரம் பொன்... ஐந்து பை வைரம்... இதுவே என் கடைசி மூலதனம் கலையரசிக்காக கடன் வாங்கினேன்!

சாம்பி : அப்பா! கடன் வாங்கியா இந்தக் காரியத்தைச் செய்யறே... கடன் வாங்கிக் காதலா?

சாது : மடல் கூற ஏறுவேன்! வா... என் ராணி கோபிப்பாள்...

சாம்பி : வடிகட்டின மடையா வட்டி எவ்வளவு?

சாது : டேய்! அதோ என் மனைவி வந்து விட்டாள்... இந்த நகைப்பெட்டி சன்மான்களை எடுத்துக் கொண்டு ஆட்களோடு நீ முன்னால் போய்ச் சேர்... நான் இதோ வந்து விடுகிறேன். காசுவலை முன்னால் காமவலை பின்னால்! கன்னி வரும் தன்னால்! இது ஆகும் என்னால்!

(சாதுவன் ஓடுகிறான்)

(காட்சி - 4 முடிவு)

காட்சி - 5

இடம் : அரண்மனை மாளிகையிலுள்ள தோட்டம் (மண்டபம்)

(உதய குமாரன் மேகலையின் சித்திரத்தைத் தீட்டிக் கொண்டே பாடுகிறான்)

கலைமணி : *இளவரசே! என்னாங்க இது? பகைவர்களுக்கு எதிரா வீரவாள் ஏந்த வேண்டிய கை ஓவியம் தீட்டிக் கொண்டிருக்கிறது?*

உதய குமாரன் : *ஆம்! இன்னொரு புதிய பகைவன் என்னை எதிர்க்கிறான்...*

கலை : *யார் அந்த மடையன்.*

உதய : *மதனன்! அனங்கன்.*

கலை : *உருவமற்றவன்!*

உதய : *அவன் என் உள்ளத்தை முற்றுகை இட்டு விட்டான். இந்தப் பகைவனை வாளால் வெல்ல முடியாது?*

கலை : *பின் எதனால் வெல்ல முடியும்.*

உதய : *அந்த மேகலையின் காலால் வெல்ல முடியும்! இனி அவள்தான் என் வாழ்வுக்கேற்ற வளமாக முடியும். உயிருக்கேற்ற மூச்சாக முடியும். அந்த மங்கை நல்லாள் தான் என் மார்புக்கேற்ற கவசமாக வேண்டும். நண்பா!*

கலை : *வேண்டாம் இளவரசே, பகல்லே பக்கம் பார்த்துப் பேசணும்... யாராவது கேட்டா...*

உதய : *நண்பா! அழகின் முழு உருவம் எங்கே? எங்கே? என்று அலைந்து கொண்டிருந்தேன்! அந்த மோகன காவியத்தின் முடிவுரையாக, அவதரித்து விட்டாள் மேகலை...*

கலை : நீ அரசகுமாரன்... அவள் ஒரு சாதாரணப் பெண். நீ மன்னர் மன்னனின் மரபு காக்க வேண்டியவன் அவளோ மாதவியின் மகள். ஒரு மாய மான், கானல் நீர், தாகம் தீர்க்க முடியுமா, நண்பா!

உதய : முடியாதென்று முட்டாள் தான் சொல்லுவான்.

கலை : அப்போ நான் முட்டாளா!

உதய : புத்திசாலி என்றால் நண்பனுக்காக உதவி செய் தோழா... அந்த வான்மதி. மேகலை என் மனைவி யாக வேண்டும்.

கலை : அடிடா சக்கை. மனைவியாமே மனைவி! வான் மதி உலகுக்கே சொந்தம் ஆச்சே! உனக்கு மட்டும் எப்படி உரிமையாக முடியும்? மேலும் மகாராஜா எதிர்த்தால்?

உதய : மாபெரும் புரட்சி நடக்கும்! அடைந்தால் மணி மேகலை. இல்லையேல் மரண ஓலை! என்று சொல்லி விடு. விரைந்து போய் வெற்றிச் செய்தி கொண்டு வா நண்பா!

கலை : என்னப்பா இது! இருந்திருந்து அந்த வீட்டுக்கு போகச் சொல்றே. பொம்பளைகளைப் பார்த் தாலே எனக்கு கோபமில்லே வரும்.

உதய : கோவிக்காதே நண்பா! உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். உன்னைவிட, வேறு நம்பிக்கையாளர்கள் யார் இருக்கிறார்கள் எனக்கு. போய் வா... என் நண்பனல்ல! உயிர் காப்பான் தோழன்! போ!

கலை : என்னடா தர்ம சங்கடமாப் போச்சு... சரி... பார்க்கிறேன். இதோ பார்... இந்த ஒரு தடவை தான் நான் போவேன். அப்புறம் போகச் சொன்னே...? என்னால் முடியாது.

உதய : அதற்கு அவசியம் வராது நண்பா!

கலை : *ஆமாம்... ஆமாம்... காரியம் கை கூடிட்டா அப்புறம் நம்மை எங்கே நீ நினைக்கப் போறே... சரி... பார்க்கலாம்.*

உதய : *போ... காற்றென வேகமாய்ப் போ! மழையெனத் திரும்பி வா. அவள் மனத்தைக் கொண்டு வா.*

கலை : *என்னமோ.. மழையோடு இடி இடிக்காமே இருக்கணும். இது சுத்த அசிங்கமான வேலையப்பா! நண்பனுக்காகப் போறேன்! நாளையிலே இருந்து முடியாது!*

(காட்சி - 5 முடிவு)

காட்சி - 6

இடம் : மேகலை மாளிகை

சித்ராபதி : *என்ன தம்பீ! எப்போ வருவார்!*

மாமா : *வந்துடுவார்! சரி - வரவேற்க ஏற்பாடு செய்! நான் போய் ஆளைக் கொண்டு வரேன்... (போகிறான்) நீ போய் மாலை கொண்டுவா.*

சித்ரா : *அடியம்மா! அல்லி, மல்லி, தாமரை, சண்பகம்! எல்லாம் ஒழுங்கா எடுத்து வையுங்க. பன்னீர் சந்தனம், பழரசம், பலகாரம் எல்லாம் பெரிய தட்டு, நிறைய எடுத்து வையுங்க! பெரிய மனுஷன் வரப் போகிறார்!*

(சாம்பிராணி தன் ஆட்களுடன் வருகிறான்)

சாம்பி : *(தன் ஆட்களிடம்) உம்... எல்லாம் வரிசையாக வைங்கடா! (பாட்டியிடம்) நீங்கதானே...*

சித்ரா : *ஆமாம், நான்தான்... வாங்கய்யா வாங்கய்யா! வாங்க! வாங்க...! அடி அல்லி, மல்லி, தாமரை, ஷெண்பகம்... உம், உம், ஆகட்டும் எல்லாம்...! (பன்னீர் தெளிக்கிறான்)*

(தோழிகள் சாம்பிராணியை வரவேற்கும் முறையில் பலவித உபசரணைகள் செய்து மகிழ்விக்கிறார்கள்)

சாம்பி : என்னாம்மா? எனக்கு இதெல்லாம் எதுக்கு?

சித்ரா : பரவாயில்லீங்க! கூச்சப்படாதீங்க. வராதவங்க வாசல் தேடி வந்திருக்கீங்க! வந்தவங்களை வரவேற்க வேணாமுங்களா? ஐயா தலை மேலே பன்னீரை ஊத்து, சந்தனத்தைக் கொட்டு...

சாம்பி : அம்மா... நான்... நான்... வந்து...

சித்ரா : பரவாயில்லை.. உட்காருங்க! அழகு இப்பதான் உங்களைத் தேடிக்கிட்டு வெளியே போறான். வந்துடுவான்.

சாம்பி : நான் அழகைத் தேடி வரல்லேம்மா.

சித்ரா : யாரைத் தேடி வந்தீங்கன்னு தெரியும். நீங்க தேடி வந்த தெய்வம் மாடியிலே ஆடிக்கிட்டிருக்கு! இரும் வந்துடும். கரும்புத் தோட்டத்துக்கு யானை வந்திருக்கு!

சாம்பி : இதோ பாருங்க நான் அப்புறம் வர்ரேன்!

சித்ரா : ஊஹூம்... வந்து சாப்பிடாமப் போக முடியுமா? நீங்க போனாலும் நாங்க விட்டுடுவோமா?

சாம்பி : அம்மா! இந்த உபசாரமெல்லாம்...

சித்ரா : பரவாயில்லை... இந்தாங்க சாப்பிடுங்க...

(மாமா சாதுவனோடு வருகிறான்)

மாமா : அக்கா! அக்கா! வந்துட்டார் மாப்பிள்ளை! எங்கே வரவேற்பு? எங்கே ஆலத்தட்டு! எங்கே

பன்னீர்? எங்கே மாலை? அது, இது எல்லாம் கொண்டு வாங்க!

சித்ரா : ஆ! இவரா அவர்?

மாமா : இவரே தான்!

சித்ரா : நான், இவர் தான் மாப்பிள்ளைன்னு நெனைச்சி...

சாது : அவன் என் நண்பன். பெட்டியோடு வந்தான்.

சாம்பி : அந்தப் பெட்டிக்குத் தாம்பா இவ்வளவு மரியாதை...

சாது : பரவாயில்லை! சரி சாம்பிராணி! இனி நீ போகலாம்... உன் உதவிக்கு நன்றி...

சாம்பி : நண்பா! ஜாக்கிரதை! இந்த வரவேற்பு இங்கேயே மூச்சுத் திணறுது! இன்னும் உள்ளே போனா என்ன ஆகுமோ. பழைய குளம்டா! வழுக்கி விழுந்துடாதே!

சாது : முட்டாள்! அனுபவமில்லாதவன்! சரி... போய்வா! *(போகிறான்)* உம்... மாமா! பெட்டியைப் பாட்டி பார்த்தாளா?

சித்ரா : அதுக்கென்னாங்க? அப்புறம் பார்த்தாப் போச்சு! எனக்குக் காசு பெரிசில்லீங்க! பாசந்தான் பெரிசு!

மாமா : பாசமா? ஐயோ உலகத்துக்கே இவர் கடன் கொடுப்பாரே! ஆமாங்க ஆஸ்தி பெரிசில்லீங்க. அன்புதான் பெரிசு. தங்கம் பெரிசில்லீங்க உங்க தன்மைதான் பெரிசு.

சித்ரா : இருங்க வர்ரேன்.

மாமா : என்னங்க! அலங்காரம் எப்படி?

சித்ரா : மேகலை எங்கே?

மாமா : மேலே இருக்காங்க! வரச்சொல்லட்டுங்களா?

சித்ரா : ஐயோ! அவளுக்குச் சிரமம் வேண்டாம். நானே அங்கு போறேன்!

மாமா : கொஞ்சம் பொறுமையா இருங்க மாப்பிள்ளை... அதுக்குள்ளே எதுக்கு அவசரம் ஆக்கப் பொறுத்தீங்க! ஆறப் பொறுங்க...

சாது : ஆறிவிட்டால் அதிலே சுவை இருக்காது மாமா...

மாமா : பசிக்குதா! வாங்க! மொதல்லே சாப்பிடுங்க!

சாது : வயிற்றுப் பசியல்ல... மாமா! இது உயிரின் பசி! ஊழித் தீ! உலகையே எரிச்சுடும். இந்த நெருப்பை அணைக்கத்தான், அந்த சிவபெருமான் கங்கா தேவியைத் தன் தலைமேலே வைத்துக் கொண்டான்.

மாமா : சரி; கொஞ்சம் இரு! இதோ வந்துட்டேன்.

(எதிரிலிருந்த நிலைக்கண்ணாடியில் தன்னை அலங்காரம் செய்து சீட்டியடிக்கிறான். சுதமதி வருகிறாள், அவளை மேகலை என நினைத்துக் கொள்கிறான்! சுதமதி புன்னகை புரிகிறாள்)

சாது : ஆகா! என்ன இது! உண்மையா இல்லை ஓவியமா? கலையா? கவியா? காட்சியா? இல்லை கனவா? இல்லே உண்மைதான். மேகலை மேகலை, வா.. கண்ணே! நான்தான் சாதுவான்! ஏன் மௌனம்? வெட்கமா? ஓட்டிவிடு வெட்கத்தை! தீட்டிவிடு என் அறிவை! மாட்டிவிடு மலர் மாலையை. கண்காட்டி எனைக் கவர்ந்த காட்டுக்குயில் நீ! கூட்டுச்சுவை நீ! கொம்புத் தேன் நீ! என் வீட்டுக்கிளி நீ! விடியும் வெள்ளி நீ! ஓடிவா, இங்கே! ஆடிவா கண்ணே, தேடிவந்த என்னை நாடிவா கண்ணே! பயப்படாதே! இதோ மணிமேகலை... இதை உனக்குச் சூட்டவே கொண்டு வந்தேன்! கழுத்து வலிக்கும் என்றால் காலிலாவது பூட்டுகிறேன்... கண்ணே! வா... வா...

(நகையைப் பூட்டுகிறான்)

மாமா : என்னங்க மாப்பிள்ளை?

சாது : தரிசனம் கிடைத்து விட்டது மாமா! இதோ
இலட்சியத் தெய்வம்! வேத புத்தகம் இ
இனிமே புரட்டிப் புரட்டிப் படிப்பேன்.

மாமா : என்ன பேசறிங்க? இவள்...

சாது : நாணப்படுது அதுதானே? இன்னும் கொஞ்
நாணயம் தந்தால் நாணம் போயிடும்!

மாமா : இல்லீங்க! இவள் மேகலையின் தோழிங்க.

சாது : பரவாயில்லை... என்ன! என்ன! தோழியா?
தோழியே இப்படி என்றால் தலைவி.

மாமா : தலைவிக்குக் கொஞ்சம் தலைவலியாம்.

சாது : மாமா உனக்குக் கொஞ்சம்கூடப் புத்தியில்ல
மேகலைக்குத் தலைவலி என்று ஏன் முதலிலே
சொல்லவில்லை. யாரங்கே? கூப்பிடு ரா
வைத்தியனை!

மாமா : பொறுங்க. அது ஒரு சபதம் செய்திருக்குங்க!

சாது : என்ன சப்தம்?

மாமா : அரங்கேத்தம் நடந்த பிற்பாடு தான் மாப்பி
ளையை பார்க்குமாம்!

சாது : அப்படியானால் நான்? என் ஆசை! போட்
பூசை?

மாமா : சீக்கிரம் அரங்கேத்தத்திற்கு ஏற்பாடு செய்யுங்
ஆசை நிறைவேறிடும்!

சாது : எல்லாம் செய்துவிட்டேன். நான்கே நாளி
நடன மண்டபத்தில் அரங்கேறலாம்.

மாமா : அப்போ அஞ்சாம் நாள் உங்க ஆசை நிை
வேறிடும்...

சாது : அதுவரைக்கும்...

மாமா : கலைக்காகப் பாடுபடுங்க. கலைவாணி கிருபை கிடைக்கும். நடனமும் நடக்கும். உங்க கடனையும் அடைக்கும்!

சாது : சரி... அதுவரைக்கும் நான் சாப்பிட மாட்டேன். இன்று நான்காம் நாள் கலை மன்றத்தில் அழகு ராணியின் அரங்கேற்றம்! அதன்பிறகே என் முன்னேற்றம். ஆம்... நான்காம் நாள் அரங்கேற்றம் அரங்கேற்றம்... அரங்கேற்றம்... ஆனால், உங்கள் மனம் குரங்கேற்றமாகி விடக்கூடாது.

மாமா : ஆமாம் எச்சரிக்கை! அதெல்லாம் குரங்கேத்தமும் இல்லை; குதிரை ஏத்தமுமில்லை. எல்லாத்துக்கும் நான் ஒருத்தன் இருக்கேன், கவலை விடுங்க.

சாது : சரி. காரியத்தை முடி. காக்காப் பிடி!

(காட்சி - 6 முடிவு)

காட்சி - 6 (a)

இடம் : மேகலை தனியாய்

மேகலை : சுதமதி! அவர் என்ன நினைத்திருப்பார்?

சுதமதி : இளவரசரின் நினைக்கும் சக்தியைத்தான் நீ பறித்துக் கொண்டாயே!

மேக : அவர் மயங்கும் அளவுக்கு நான் அவ்வளவு அழகியா?

சுதமதி : அழகின் அருணோதயம் நீ! காலைச் சூரியன் நீ! மற்றப் பெண்கள் கண் சிமிட்டும் தாரகைகள்.

மேக : அவர்?

சுதமதி : உன்னிடமிருந்து ஒளியைத் திருட எண்ணும் உதயமதி.

மேக : சந்திரன் தேய்ந்து போகுமே சுதமதி!

சுதமதி : இந்த இந்திரன் ஓய்ந்து போவார்! மனிதர் என்பாய்! மாய்ந்து போவார்! மனிதர்கள் மட்டும் சாஸ்வதமா?

மேக : மண்ணாளும் வேந்தன் மகன் அவர்.

சுதமதி : ஆமாம்! மனம் போனபடி பேசலாம்!

மேக : மாறி விடுவாரா?

சுதமதி : மாற்றி விட்டார் உன்னை!

மேக : ஏற்றுக்கொண்டபின்!

சுதமதி : வீடு கட்டியபின் ஏணி எதற்கு என்று கேட்கலாம்...

மேக : மணம் புரிந்து கொண்டால்?

சுதமதி : மலர் வாடும் வரையில் தான் மணத்துக்கு மதிப்பு!

மேக : அவரைப் பார்த்தால் நல்லவர் போல் இருக்கிறார்?

சுதமதி : நல்லவர் போல் நடிக்கிறார் என்று சொல்.. நீ கூடத்தான் கலைவாணியைப் போல் இருக்கிறாய்.... புறத்தோற்றம் மட்டும் வாழ்வாகி விடுமா?

மேக : நம்பி விட்டேன் சுதமதி!

சுதமதி : நம்பு... ஆனால் நடந்து விடாதே!

மேக : புரியவில்லையே!

சுதமதி : புரிந்துகொள்! இளவரசர் இளைஞர்! மகாராணி ஆகும் எல்லாத் தகுதிகளும் உனக்கு இருக்கிறது

ஆனால் உலகம் ஒப்புக் கொள்ளுமா? அல்லது வேந்தர் தான் சம்மதிப்பாரா? இவை எல்லாம் நடந்த பின் நீ இளவரசரைப் பற்றி யோசிக்கலாம்... அதுவரை நிதானமாய் இரு...

மேக : நிதானம்! நெருப்பில் விழுந்த நெருக்கடியில் நிதானம் வருமா சுதமதி?

சுதமதி : மேகலை! நீயா இப்படிப் பேசுகிறாய்?

மேக : அதுதான் எனக்கே புரியவில்லை!

சுதமதி : நேற்று வரை காதல் என்றால் எந்தக் காட்டில் விளைகிறது என்று கேட்டாய்! இன்று காதல் கடலின் கரையாகி விட்டாயே!

மேக : நானா பேசுகிறேன்? என்னுள் இருக்கும் அவரல்லவா பேசுகிறார்!

சுதமதி : ஓகோ! உம்... சரிதான்... உணர்ச்சி வந்தால் பேச்சும் உடன் வரும் போல் இருக்கிறது! என்ன செய்வது? விதி மறுபடியும் விளையாட ஆரம்பித்து விட்டது; இந்த வீட்டில்.

(காட்சி - 6 (a) முடிவு)

காட்சி - 6 (b)

இடம் : மேகலை வீட்டில் மற்றொரு பகுதி

சித்ரா : *தம்பி! மீன் பிடிக்க வலை வீசினோம்! இப்பே திமிங்கிலமே கிடைக்கும் போல இருக்கே!*

மாமா : *அவசரப்படாதே அக்கா! திமிங்கில வலையையே முழுங்கிடும்!*

சித்ரா : *இந்தப் பொண்ணு மேகலை கூட ஒரு மாடு தான் இருக்கா!*

மாமா : *இருக்கும்! இருக்கும்! இதோ பாரு! கப்ப நம்மைக் கை விட்டுப் போயிடாமே பாத்து ணும்! முதல் இருந்தாத்தான் வியாபா நடக்கும்... மேகலை இருந்தாத்தான் நம மதிப்பு...*

சித்ரா : *ஏன்! இளவரசர் வந்தா, மேகலை ஓடி போயிடுவா?*

மாமா : *ஓட மாட்டா! ரெண்டு பேரும் பற போயிடுவாங்க! அது உனக்குத் தெரியா அனுபவிச்சவன் எனக்குத் தெரியும்!*

சித்ரா : *இதுக்கு என்ன செய்யலாம்?*

மாமா : *மாடு, கயிறு ரெண்டும் நம்ம கையிலே இருக்கணும்...*

சித்ரா : *அது நடக்குமா!*

மாமா : *நடக்கிறதாவது! ஓடிவரப் போறான் பாரு! வெ ணெயைக் கண்ட வீட்டுப் பூனை விட்டுடு சும்மா!*

(கலைமணி வருதல்)

மாமா : *வாங்க! வாங்க! வாங்க! நீங்களா....*

கலைமணி : *என்னய்யா நீங்களான்னு நெளியறே நண்டு மாதிரி...*

சித்ரா : *தம்பி யார்?*

மாமா : *அட தெரியலே! இவர் தான் திருவாளர் கலைமணி! இளவரசருக்கு அந்தரங்க ஆலோசகர் இளவரசர் உடம்புக்கு நிழல் மாதிரி...*

கலை : *ஆமாம்! அவர் இதுவரை அன்புங்கற ஆல மரத்தின் நிழலில் விளையாடினார்... இனிமேல் ஆசை என்கிற முருங்கை மரத்துக்கு தாவப் பார்க்கிறார்!*

மாமா : *உங்க பொன்மொழி எனக்குப் புரிஞ்சுதுங்க! அக்காவுக்குக் கொஞ்சம் புரியும்படி எடுத்து விளக்குங்க.*

கலை : *ஏன்? பாட்டிக்குக் காது மந்தமா?*

மாமா : *காது மந்தமில்லே.. அறிவு தான் கொஞ்சம்...*

கலை : *அதற்கு நான் என்ன செய்ய முடியும்! காது கேட்கா விட்டால் கத்திப் பேசலாம்! அறிவு செவிடானால் யார் கத்துவது?*

மாமா : *ஆமாம்! நின்னுகிட்டே பேசறீங்களே! உட்காருங்க! உட்காருங்க! ஏதாவது சாப்பிடுங்க...*

சித்ரா : *ஆமாங்க! அமருங்க! அரண்மனையிலே இருந்து வந்திருக்கீங்க... நின்னுகிட்டே பேசறிங்களே! உட்காருங்க! உட்காருங்க!*

கலை : *போதும் உபசாரம் வா என்று வாய் சொல்லும் போ என்று மனம் சொல்லும்... உங்கள் புத்தி எனக்குத் தெரியும்...*

மாமா : *தெரிஞ்ச நீங்க எதுக்கு வந்தீங்க...*

கலை : முன் ஜென்மத்தின் பாவம்! இங்கு வரப் போகும் இளவரசன் உதயகுமாரனைத் தக்க முறையில் வரவேற்கச் சித்தமாயிருங்கள்! அதைச் சொல்லவே வந்தேன்!

சித்ரா : ஆ! இளவரசர் எங்க வீட்டுக்கு வாராரா?

கலை : மாமா! ஜாக்ரதை.. இளவரசன் கலை மயக்கத்தால் இங்கு வருகிறார். அவருக்குக் காதல் விஷ மூட்டினால் கஷ்டம் வந்துவிடும்! எச்சரிக்கை! உதயகுமாரன் வருங்கால வேந்தன்! கோவலன் போல் வியாபாரியல்ல! பூம்புகாரில் நீங்கள் இருக்கவேண்டுமானால் எச்சரிக்கையாயிருங்கள்!

சித்ரா : என்னய்யா இது வம்பு! நாங்களா அவரை வரச் சொன்னோம்!

கலை : வரச்சொல்லவில்லை... வரச் செய்து விட்டது மேகலையின் வனப்பு!

சித்ரா : அதுக்கு நாங்க என்ன செய்யறது?

கலை : என்ன செய்யறது? சோழர் குலத்தின் விதி உங்கள் ரூபத்தில் நடனமாடுகிறது! நான் வருகிறேன்! எச்சரிக்கை!

(சாதுவன் வருகிறான் - எதிரே வந்த கலைமணியின் மீது மோதிக் கொண்டு கீழே விழுகிறான்)

சாது : ஐயோ! தூண் வச்ச வீடு கட்டாதிங்கடான்னு சொன்னாக் கேட்டால் தானே!

கலை : யார் சாதுவ மகாப் பிரபுவா? என்னய்யா! திராட்சை ரசக்கப்பல் இப்போது தான் கரை சேர்ந்ததா?

சாது : கப்பலா! மடையன்! நான் இது வரைக்கும் குடிச்ச மதுவை ஒண்ணா ஊத்தினா, நம்ம சோழச் சக்ரவர்த்தியின் கடற்படையையே அதிலே மிதக்க விடலாம்டா... அது சரி, அது சரி! நீ யாரு?

கலை : இவரைப்பற்றி சொன்னால் புரியாது! புரியும் போது சொல்கிறேன்!

சாது : அதெல்லாம் நான் நிதானம். தவற மாட்டேன். அனுபவசாலி! ஆமாம் நீ இங்கு எதுக்கு வந்தே? இங்கே வர இன்னும் உனக்கு வயசு பத்தாதே! பாவம், பாவம்! வழி தவறி வந்துட்டியா?

கலை : ஆமாம் உன்னைப்போல வழி தவறி வழுக்கி விழுந்தவங்களை வேடிக்கை பார்க்க வந்தேன்!

சாது : சேச்சே! உனக்கேம்பா இந்த வேலை எல்லாம்? போயி பட்டங்கட்டி காத்திலே விடு! வீணா உடம்பைக் கெடுத்துக்காதே! நான் தான் கெட்டுப் போயிட்டேன்.... நிறைய அனுபவிச்சவன் நான் சொல்றேன்... அறிவிருந்தா கேட்டுக்கோ! இல்லாட்டி நீயும் அனுபவி! கலைமணி கொலை மணி ஆயிடாதே! இது விலைமணி விடு!

கலை : சரியான மனுஷனய்யா நீர்! அதுசரி.. அம்மாவுக்கு எவ்வளவு விலை கொடுத்தீர்.

சாது : கொஞ்சமா! முப்பதாயிரம் பொன்தான்! முன் பணம் தான் இது! வியாபாரம் முடியட்டும் முழு விலையைச் சொல்றேன். ஏ! நீ போட்டிக்கு வந்துடாதே தம்பி! அந்தக் கிழவி பொல்லாதவ! விலையை ஏத்திப்புடுவா!

கலை : பயப்பட வேண்டாம்! பாட்டி மகா பதிவிரதை! உன் மேல உயிரையே வைத்திருக்கிறாள்....

சாது : என்ன? பாட்டியா? என்ன சொன்னே!

கலை : ஆமாம் பாட்டி உனக்காக பல்லாண்டு பாடுகிறாள் அட சட் போய்யா! போய்யா! இதோ பார்! நாளையிலே இருந்து இங்க நுழைஞ்சே! நடுங்கற உன் உடம்பை நடுக் கடல்லே தள்ளிடுவாங்க ஜாக்கிரதை..

(போகிறான்)

சாது : பைத்தியக்காரன்! பாட்டியாம் பாட்டி மேகலா! மேகலா! மேகலா! உன்னை நினைச்சுக்கிட்டே சாகலாம்!

சுதமதி : என்னங்க மாப்பிள்ளை!

சாது : அடச்சீ! போ வெளியே! என்னடா இது? குயிலைக் கூப்பிட்டா குரங்கு வந்து முழிக்குது! மேகலா!

மாமா : வாங்க மாப்பிள்ளை வாள்! ஏன்?

சாது : சே! என்ன இது! எழிலைக் கூப்பிட்டா, எலும்புக் கூடு வந்து பேசுது!? மேகலா! மேகலா!

சித்ரா : என்னய்யா அதிகாரம் பலமா இருக்கு?

சாது : பேத்தியை அழைத்தேன். பாட்டி நீ ஏன் வந்தே?

சித்ரா : அது பேச்சு மீறுது? பாட்டி இல்லாம பேத்தி எப்படி ஆடுவா! சாட்டை இல்லாம பம்பரம் எப்படி ஆடும்!

சாது : நிறுத்து! மாமா! இந்தக் கோட்டான் ஏன் கூவுது? பாட்டி பேசாதிருக்கத்தானே பதினாயிரம் பொன் கொட்டிக் கொடுத்தேன்!

சித்ரா : பத்தலே போலிருக்கு!

சாது : பத்தலியா! பாட்டிக்கு பத்தலியா! தலையிலே நெருப்பைக் கொட்டு நன்றாகப் பத்தும்! பத்தி விடும்.

சித்ரா : இந்தா பாரய்யா; புத்தி தடுமாறிப் பேசாதே! சித்ராவதிக்கிட்டே செத்தே பார்த்துப் பேசு!

சாது : சீ சித்ராவதி இல்லெ! சத்ராவதி! பிசாசு நான் இன்று ஒரு முடிவோடுதான் வந்திருக்கிறேன்.

சித்ரா : என்ன முடிவு?

சாது : பேசியபடி மேகலை என் மனைவி! உடனே அனுப்பி விடு. விலையை வாங்கிட்டே! கலையை அனுப்பிடு கடைக்கு!

சித்ரா : இதென்ன மாமியார் வீடுன்னு நெனைச்சியா!

சாது : மாப்பிள்ளை என்று நீதானே சொன்னாய்?

சித்ரா : சும்மா மரியாதைக்குக் கூப்பிட்டேன். நாங்க எல்லாரையுந்தான் அப்படிக் கூப்பிடுவோம்.

சாது : எனக்கு மரியாதை வேண்டாம்... மேகலைதான் வேணும்!

சித்ரா : அவ ஒண்ணும் உங்க கப்பல் சரக்கு இல்லே!

சாது : தெரியும்! சாதுவன் வாழ்க்கைத் துணைவி!

சித்ரா : சீ! வாழவே தெரியாத உனக்கு துணைவி ஒரு கேடா? சீ! சீ! வெட்கமில்லே உனக்கு?

சாது : வெட்கமிருந்தால் விறலியின் வீட்டுக்கு வந்திருக்க மாட்டேன் பாட்டி!

சித்ரா : இந்தா பாரு! இன்னொரு தடவை பாட்டீன்னு கூப்பிட்டே, எனக்குக் கோபம் வரும்!

சாது : கோவிச்சுக்காதே என் குமரிக் கன்னியே! அம்மா பேச்சுத் தவறாதவளே! பதினாலு வயசு பதிவிரதா ரத்தினமே! பாட்டியே! ஜாக்கிரதை! நீ மோசம் பண்ண நெனைக்கிறே?!

சித்ரா : தவறு மோசம் போயிட்டேன்னு சொல்லு.

சாது : என்னடி சொன்னே! நானும் பாக்கிறேன் இந்த வீட்டுக்கு எவனெவனோ வர்ரான்! போறான்!

சித்ரா : ஆயிரம் பேரு வருவாங்க! அதைக் கேக்க நீ யாரு?

சாது : நான் யார்? மாமா! நான் யார்? நீயா இப்படிக் கேக்குறே? இது நியாயமா?

சித்ரா : *இதென்ன நீதி சபையா? நியாயம் கேக்கறே?*

சாது : *அப்போ நான் கொடுத்த நகை?*

சித்ரா : *அது காக்கா தூக்கிப் போயிட்டுது அடசட் போய்யா கணக்கு கேக்கற இடமா இது!*

சாது : *கிழட்டுக் கழுதே! விளையாடாதே! என் பணத்தை திருப்பிக் கொடுத்துடு. இல்லாட்டி மனத்தைக் கொடு!*

சித்ரா : *உஹும் திருப்பிக் கொடுக்கிறதா? புது வெள்ளிக் கிழமை வரட்டும். இதோ பாரு . கண்ணுல போட்டமை, புடவையிலே போட்ட சாயம், சுவத்துல அடிச்ச சுண்ணாம்பு, எங்ககிட்ட கொடுத்த பணம், இதெல்லாம் திரும்பி வராதுய்யா... வராது. என்னமோ பெரிய அனுபவ சாலிங்கிறே! இது தெரியலே! அடசே! போயிடு வெளியே! (தோழிகளிடம்) உம்... கொண்டுபோய் வெளியே தள்ளுங்கடி இவனை...*

(அவர்கள் எல்லோரும் தாக்குகிறார்கள்)

சாது : *ஆ! ஐயோ! ஐயோ! முடியாது. முடியாது.. போகமாட்டேன்... ஐயோ... தள்ளுறாங்களே மேகலா! மேகலா! மேகலா!*

(மேகலை ஓடிவந்து குறுக்கிட்டுத் தடுத்து விடுகிறாள்)

(காட்சி - 6 (b) முடிவு)

காட்சி - 7

இடம் : அரண்மனையை அடுத்துள்ள நந்தவனம்

(இளவரசன் உதயகுமாரன் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான். கலைமணி அங்கு வந்து சேர்ந்ததும், அவனது ஆவல் அத்தனையும் வார்த்தைகளாக வெளி வருகின்றன)

உதய : *என் தெய்வத்தைப் பார்த்தாயா, நண்பா?*

கலை : *கோயிலைத் தாம்பா பார்த்தேன்?*

உதய : *கலைக்கோபுரத்தைக் காணவில்லையா?*

கலை : *அங்கே பயங்கரமான ஒரு பலிபீடம் இருக்குதுப்பா, பலிபீடம் இருக்குது....*

உதய : *பலிபீடமா!?*

கலை : *அதுதான் அந்தப் பாட்டி! அடேயப்பா என்னா பேச்சுப் பேசறா; என்னா பேச்சுப் பேசறா!*

உதய : *அன்பாய்ப் பேசினாளா?*

கலை : *உம்! ஆடிகிட்டே பேசினா!*

உதய : *என்ன சொன்னாள்?*

கலை : *வெளிச்சத்தை இருட்டு வேண்டாமுன்னா சொல்லும்?*

உதய : *அப்படியானால் உடனே...*

கலை : *தீவிர முடிவால் தீமை வந்தால்?*

உதய : *தீயை அணைப்பதில் தாமதம் கூடாது கலை மணி!*

கலை : *நெருப்பை நெருப்பால் அணைக்க முடியா தப்பனே!*

உதய : நெருப்பல்ல நண்பா எங்கள் நேசம்! கண்டோம் கலை எழில் உண்டோம்! காதல் ஒளி கக்கும் கார்த்திகைத் தீபமாக விளங்குவோம்.

கலை : ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள்....!

உதய : எங்கள் நேசம் மாறாத மணி விளக்கு! மறையாத கலைச்சிகரம்! குறையாத பொன் குவியல்!

கலை : என்றோ படித்த கவிதைகள்... என்னிடமே ஒப்புவிக்கிறே நீ! கற்பனை வேறு! கலையின் விற்பனை வேறு!

உதய : படித்த பாடமல்ல நண்பா! உள்ளே வெடித்துச் சிதறும் உயிரின் ஒளித்துளிகள்! உள்ளன்பின் ஊழிக்கீதம்! நான் பேசுகிறேன். என் உள்ளம் பாடுகிறது! கண் பார்க்கிறது. பூமி சுழல்கிறது! நண்பா! என்னை நன்றாகப் பார்! என்னில் நீ என்ன பார்க்கிறாய்?

கலை : மேகலை என்று சொல்லி விடுவேன். ஆனால் மனம் இடம் கொடுக்கவில்லை! இளவரசன் உடம்பில் இன்னொரு புதிய பிசாசு வேலை செய்கிறது.

உதய : பரிசுத்தமான பிரேமைக்கு பிசாசு என்ற பட்டமா?

கலை : எச்சரிக்கை! எங்கோ போகிறாய்? இதுவரை உன்னைக் காப்பாற்றினேன். இன்று என் கை விட்டுப் போகிறாய்! இனி விதிதான் உனக்கேற்ற நண்பன்!

உதய : விதியை வெல்வேன். விலை மகளைக் கலை மகளாக்குவேன்! கலையரசியைப் புவியரசியாக்கு வேன்! அவள் விரல் மீட்டும் வீணையிலே நானொரு நரம்பாக மின்னுவேன்! அவள் பாதச் சிலம்பினிலே ஒரு மணியாகப் பாடுவேன்! அவள் செம்மலர்க்கண் ஓரத்தில் நானொரு சிவந்த

ரேகையாவேன்! அவள் சிரிப்பு; நான் அதன் களிப்பு! அவள் தெய்வம்; நான் கோயில்! அவள் வானம்! நான் காற்று! அவள் மழை; நான் மேகம் அவள்...

கலை : ஆமாம்! அவள் பூகம்பம்! நீ கோடையிடி! இந்தாப்பா மணல்லே கோட்டையை கட்டாதே! சரிஞ்சு விழுந்துரும்.

உதய : நண்பா! நான் வருகிறேன்!

(அரசர் வருகிறார்)

வேந்த : குமாரா! எங்கே இந்நேரத்தில்?

உதய : நான்... நான்.. நான்... அப்பா.. நான்...

வேந்த : ஏன் தடுமாறுகிறாய்?

உதய : நான்... அப்பா...

கலை : இளவரசர் புதிய குதிரை ஒன்றை பழக்கப் போகிறார் மகாராஜா! ஆமாம் அழகான குதிரை. ஆனால் அறிவற்ற குதிரை. நாட்டியக் குதிரை

வேந்த : உம்... பலமுறை கூறிவிட்டேன்! உதயகுமாரா! காஞ்சி நகர்ப் பகுதியில் அயல் நாட்டு ஒற்றர்கள் அதிகமாக நடமாடுகிறார்களாம்! வீரர்களை அனுப்பியுள்ளேன்! அவர்கள் கடமையை ஒழுங் காகச் செய்கிறார்களா என்று கண்காணிக்க வேண்டும்! நீ உடனே புறப்பட வேண்டும்! இது தந்தையின் வார்த்தையல்ல! வேந்தனின் கட்டளை!

உதய : ஆணை தந்தையே! வந்து... வந்து...

வேந்த : போய் வந்தபின் பேசு... புறப்படு... (போகிறார்)

கலை : காஞ்சி நகர்க்கா போகப் போகிறான்... காதற் சிறையில் கைதியாகப் போகிறான்.

(காட்சி - 7 முடிவு)

காட்சி - 8

இடம் : சாதுவன் வீடு

(சாம்பிராணியிடம்)

சாது : *கடைசியா! தாய்க் கிழவி வேலையை நம்ம கிட்டேயே காட்டிட்டா, அந்தப் பழைய பாட்டி!*

சாம்பி : *படிச்சுப் படிச்சுச் சொன்னேனே கேட்டியா? கேக்காமே அவ வாசலுக்குப் போனே! இப்போ கடன்காரன் உன் வாசல்ல காத்திருக்கான்டா! இப்போ என்ன செய்யறது?*

சாது : *கை விரிக்கிறதுதான்!*

சாம்பி : *கை விரிச்சா கடன்காரன் காலை வாரி விட்டுடுவாண்டா! அப்புறம் வெளியே தலை காட்ட முடியாது!*

சாது : *சரி... நீ போய் நான் ஊரிலே இல்லேன்னு அவங்களுக்குச் சொல்லு போ!*

சாம்பி : *நம்பமாட்டாண்டா! என்னையும் பதம் பார்த்துடு வானுக!*

சாது : *போடா! உண்மை சொன்னாத்தான் உலகம் நம்பாது! பொய்யைச் சொன்னா உடனே நம்பும்.. பைத்தியக்கார உலகம்..*

(சாம்பிராணி செல்கிறான் - ஆதிரை அங்கு வருகிறான். வாசலில் கடன்காரர்கள் பண்ணும் கூச்சலும், குழப்பமும் கேட்கின்றது)

கடன் 1 : *முடியாது... பல தவணை பொறுத்தாச்சு!*

க. 2 : இனிமே பொறுத்தா மொதலுக்கே மோசம் வந்தடும்!

க. 3 : இந்தாய்யா சாம்பிராணி! நீயே சொல்லு! ஒண்ணா! ரெண்டா! எனக்கு மாத்திரம் பத்தாயிரம் பொன்!

க. 4 : எனக்கு இருபதாயிரம்!

க. 5 : எனக்கு எழுபதாயிரம்

சாம்பி : எல்லாம் நம்பித்தானே கொடுத்தீங்க?

க. 3 : ஆமாம்! பெரிய கப்பல் வியாபாரின்னு கடன் கொடுத்தோம். இப்பத்தான் அவன் கப்பல் கவுந்து போச்சே!

சாம்பி : ஆ! கப்பல் கவுந்து போச்சா...?

சாது : (உள்ளே) ஐயோ ஆதிரை! நான் என்ன செய்வேன்!

(வெளியே)

க. 1 : முடியாது! ஆளை விடமாட்டோம்.

க. 2 : ஆள் உள்ளேதான் ஒளிஞ்சிக் கிட்டிருக்காரு!

க. 3 : பிடி விடாதே!

(உள்ளே சீனில்)

சாது : என்னை விட்டுடு... நான் புழக்கடை வழியா ஓடிப் போயிடுறேன். அவனுங்க வந்தா நீயே பேசி அனுப்பிடு.

ஆதிரை : பயப்படாதீங்க... என் தாய் வீட்டிலிருந்து தருவதாக நான் சொல்லுகிறேன் - போக வேண்டாம்.

சாது : இப்போ தடுக்காதே... அப்புறம் வர்ரேன்...

(ஓடுகிறான்)

ஆதிரை : *தேவி...!*

(கடன்காரர்கள் கூட்டமாக உள்ளே வருகிறார்கள்)

க. 1 : *எங்கே உங்க புருஷன்!*

க. 2 : *வெட்கம் கெட்டவன்!*

க. 3 : *கடன் வாங்கிட்டு ஒளிஞ்சிட்டான்...*

க. 4 : *மானமில்லாதவனுக்கு மேகலை வீடா?*

ஆதிரை : *ஐயா! நீங்கள் கோபிக்க வேண்டாம்! அவர் உங்களிடம் வாங்கிய ஒவ்வொரு நாணயத்தையும் இன்னும் பத்து நாட்களில் நான் கொடுக்கிறேன்! போய் வாருங்கள்...*

க. 3 : *அப்படீன்னா அவன் இல்லையா?*

க. 2 : *சரிதாம்பா! பெரிய வீட்டுப்பொண்ணு சொல்லுது!*

அவங்களை நம்பலாம்! வாங்க... பத்து நாளு தானே பொறுத்துப் பார்க்கலாம்! நாங்க வர்ரோம்!

(கடன்காரர்கள் அனைவரும் வேளியேறு கின்றனர்)

சாம்பி : *உம்... போயிட்டு வாங்க! என்ன பண்றது? பணத்தைக் கடன் கொடுத்தவன் பொறுமையாத் தானே இருக்கணும்! சாதுவன் மானஸ்தன் - வந்தா பணத்தோட வருவேன் - இல்லேன்னா பிணந்தான் வரும் என்று சூள் உரைத்துக் கப்பல் ஏறிவிட்டான்.*

ஆதிரை : *ஆ? அப்படியா ஐயா! அவரை எப்படியாவது அழைத்து வாருங்கள்...*

சாம்பி : *ஆகட்டும் தாயே! பாவம்! நல்லவன்தான்! வழி தவறிப் போயிட்டான்! காசிருந்தபோது விலை*

மகள் வாசலிலே கதியாயிருந்தான்... அதன் பலன்தான் இது...

ஆதிரை : அவரை ஒன்றும் செய்யாதீர்கள்! அவர் எப்படி இருந்தாலும் என் கணவர், மீண்டும் மானம் தாங்காமல் கப்பல் வியாபாரத்திற்குக் கிளம்பி விட்டார்... அவர் திரும்பி வரும் வரை நான் உணவு கொள்ளேன் - எவரையும் காண மாட்டேன். இது சத்தியம்.

சாம்பி : 'கட்டாயம் வருவானம்மா' சாதுவன் புதுப் பிறவியா திரும்பி வருவான். கவலைப்படாதே தாயே-

(காட்சி - 8 முடிவு)

காட்சி - 9

இடம் : பூம்புகார் சாலை

உதய : எங்கே மேகலை?

கலை : யாராவது விலை அதிகமாக கொடுத்து வாங்கிட்டுப் போயிருப்பாங்க!

உதய : நண்பா ஜாக்கிரதை! வருங்கால மகாராணியை வார்த்தை தவறிப் பேசுகிறாய்!

கலை : ஓகோ! வருங்கால மகாராணியா! அத்தைக்கு மீசை முளைக்கட்டும்! அப்புறம் சித்தப்பான்னு கூப்பிடுறேன்!

உதய : நண்பா! மேகலை விஷயத்தில் நீ வேடிக்கை செய்வது விபரீதமாகி விடும்! நம் நட்புக்கே ஆபத்தாகி விடும்.

கலை : நீ என்னைக்கு அவ காதல் வலையிலே விழுந்தியோ, அன்னிக்கே நம்ம நட்பு தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டது அய்யனே! நம் நட்பின் பிசாசு தான் இப்போ பேசுது.

உதய : சரி... நான் போய் அழைத்து வருகிறேன்.

(காட்சி - 9 முடிவு)

காட்சி - 9 (a)

இடம் : மேகலை வீடு

மாமா : பொண்ணு கம்பி நீட்டிட்டுதா?

சித்ரா : அவங்கம்மாகிட்டே பழமொழி பேசிக்கிட்டிருப்பா... புத்தரின் தத்துவம்! பாவம்! புரியாது! போ.

மாமா : பருவப் பெண்ணுக்குப் பழமொழி ஒத்து வராதுக்கா! தத்துவமாவது வெண்டைக் காயாவது.

சித்ரா : பேசிக்கிட்டிருக்காதே... போ... சீக்கிரம் பார்த்துட்டு வா!

மாமா : போறேன் அக்கா!!

தோழி : பாட்டி! நடனம் ஆடலாமா?

சித்ரா : போடி பொழப்பத்தவளே! இனிமே பாட்டி தாண்டி ஆடணும்..!

உதய : (ஓடி வந்து) மேகலை எங்கே?

சித்ரா : அவ அம்மாவைப் பார்க்கப் போனவ அங்கேயே இருந்துட்டா! அப்பவே சொன்னேன்.. போகாதே பேசாதேன்னு தலைகீழே நின்னேன்! பாட்டி வார்த்தையை மீறிப்போனா... மாதவி என்னமோ சொல்லி பொண்ணு மனசை மாத்திட்டா போலிருக்குங்க! ஐயோ! இளவரசே, இனிமே எப்படி உயிர் வாழ்வேனுங்க?

உதய : கவலை வேண்டாம்!

சித்ரா : எனக்காக நான் கவலைப்படலீங்க! பாவம் நீங்க அவமேலே உயிரையே வெச்சிருந்தீங்களே! உங்களை நெனைச்சா என் உடம்பெல்லாம் எரியுதுங்க! நீங்க உடனே போய் அழைக்காட்டா அவ சன்யாசியாயிடுவாங்க... அப்புறம் நீங்களும் சன்யாசி ஆகணுங்க!

உதய : என்ன சந்யாசியாவதா? என் மேகலையா? பெரியதொரு சரித்திரத்தையே உருவாக்கப் பிறந்த பைந்தமிழ்ப் பாவை! என் பிரேமைப் புதுமலர், பக்தியெனும் பாலைவனத்தில் பட்டு, சருகாக நான் சம்மதிக்க மாட்டேன்! பளிங்குச்சிலை, பாறையிலே மோதித் தூளாகப் பார்த்துக் கொண்டிருப்பது அநியாயம்! அக்கிரமம்! இதோ போகிறேன். வரும்போது இருவரும் வருவோம். (உதயகுமாரன் வேகமாகப் போகிறான்)

சித்ரா : மனுசன் போற வேகத்தைப் பார்த்தா...

மாமா : தடுக்கி விழுந்திடாமப் போகணும்... பார்க்கலாம்.... உம்... அம்மா மாதவி கல்யாணம் ஆகியும் சன் யாசி... மகள் கல்யாணம் ஆகாமலே சன்யாசியா யிட்டா... பார்க்கலாம்! ஏ? உலகமே? நீயே ஒரு சன்யாசி ஆயிட்டா என்ன?

(காட்சி - 9 (a) முடிவு)

காட்சி - 10

இடம் : புத்தர் கோட்டத்தின் நடுப்பகுதி

(நன்றாய் இருள் படர்ந்திருக்கும் இரவு - இளவரசன் யாருக்கும் தெரியாமல் அங்கு வருகிறான்)

உதய : *மேகலா! கண்ணே!*

மேக : *தாங்களா!*

உதய : *வேறு யார் வருவார்கள்...?*

மேக : *எப்படி வந்தீர்கள்... இந்நேரத்தில் யாரும் இங்கு வரக்கூடாதே! கட்டுப்பாடுள்ள புத்த மண்டபத்துக்கு ஏன் வந்தீர்கள்?*

உதய : *அதைத்தான் நானும் உன்னைக் கேட்க வந்தேன் மேகலா! காதல் கிளி! காவி மடத்துக்கு ஏன் வந்தது? கலைத் தெய்வம் காவி மண்டபத்திற்கு வந்த காரணம்?*

மேக : *காரணம் கடந்தகால பயங்கரம்!*

உதய : *பயங்கரமா! என்ன சொல்லுகிறாய் மேகலை.. இதோ பார்! காணாத கடந்த காலம் ஒரு கற்பனை... எதிர்காலமும் ஒரு இருண்ட கனவு! எதிரில் நிற்கும் நிகழ்காலம் ஒன்றுதான் நித்தியம்! இதைப் பயன்படுத்துவதே பிறவியின் லட்சியம்! வாழ்வின் தலைவாசல் 'வா.. வா' என்று வரவேற்கிறது! எங்கே! எங்கே? என்று நம்மை எதிர் பார்க்கிறது இன்ப உலகம்! 'காதல் - காதல்' என்று காமன் கீதம் மீட்டுகிறான்...*

மேக : *அதில் 'சாதல்... சாதல்' என்ற சங்கொலியைக் கேட்கிறேன் இளவரசே!*

உதய : *இதென்ன திடீர் வேதாந்தம்?*

மேக : இதுதான் என் தாய் தந்த பொக்கிஷம்?

உதய : பெற்ற தாயே பெண்ணின் வாழ்வைக் கொல்வதுண்டா?

மேக : இல்லை... கண்கண்ட கருணையின் தெய்வம் என்தாய்! அந்தக் கருணையின் கண்ணீர் வெள்ளத்திலே என் உள்ளம் தூய்மை பெற்றது. தடுமாறிய நான் தெளிவு கண்டேன்! இதுதான் உண்மை...!

உதய : அப்படியானால் கள்ளமற்ற நம் உள்ளங்கள் செய்த முடிவெல்லாம்...

மேக : சிறு பிள்ளைகள் பேசுகின்ற சிங்கார மழலை மொழி, கால வெள்ளத்திலே கரைந்து போகும் களிமண் மண்டபங்களைக் கட்டினோம்! நிலையானதென்று நீர்க்கோலம் போட்டு விட்டோம்... இளமையின் இன்பம். முதுமையின் துன்பம்! முடிவில் மரணம்! அதற்குள் வீண் துயரம் எதற்காக இளவரசே!

உதய : முடிவற்ற இந்த மூட வேதாந்தம் உன் மதியில் ஏன் புகுந்தது மேகலா! விருப்பான உன்னெஞ்சில் வெறுப்பான நெருப்பைக் கொட்டியவர் யார்? கள்ளம் கபடமற்ற உன் வெள்ளை உள்ளத்தில் கவலை என்னும் விஷத்தை யாரோ கொட்டி விட்டார்கள். கண்ணே! தோன்றியதெல்லாம் மறைவது இயற்கை! அதற்காகத் தோன்றிய உடனே அழிந்து போக வேண்டுமா மேகலா? இந்த மாயாவாதம் உலகிற் பரவினால் உலகமே பாழாகி விடும் கண்ணே!

மேக : இந்த உலகம் நம்மை வாழ விடாது இளவரசே! வேண்டாம்! எனக்காகத் தாங்கள் சிரமப்பட வேண்டாம்! தாங்கள் இந்தச் சோழ ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக வேண்டியவர்கள்! உங்கள் பெருமையான சரித்திரப் பொன்னேடுகளில் என்

கதை ஒரு களங்கமாக இருக்க நான் விரும்ப வில்லை...

உதய : மேகலா! வேண்டாம்! விபரீதம் விளைந்து விடும்; மேகலை என்ற பெண் தன்னை நிராகரித்த தால் உதயகுமாரன் என்ற இளவரசன் தற் கொலை செய்து கொண்டு, பேயாக அலைந்தான் என்ற தீராத பழியை நீ தேடிக் கொள்ள வேண்டாம்!

மேக : ஆண்டவா! இதென்ன சோதனை!

உதய : அன்பின் சாதனை சக்தி பெற்று விட்டால், வாழ்வின் சோதனைக்கு அஞ்சாது மேகலா! ஒன்று நீ! அன்றி மரணம்!

மேக : தற்கொலை கோழைகளின் சரணாகதி! அறியா மல் செய்த முடிவுகளை மறந்து விடுங்கள். மண்ணிலே தோன்றிய மலர்ச்செடி, மண்ணுக்கே உரமாவது போல், நம் உள்ளத்தின் எண்ணங்கள் எல்லாம் தோன்றிய இடத்திலேயே மறைந்து போகட்டும்! நமது இரண்டுயிர்களும் ஒன்றான இன்ப மயக்கத்தில் எதிர்காலம் ஒன்றிருப்பதையே மறந்து விட்டோம்! உண்மை அன்பு உறுதி யானால் உடலை விரும்பாது அரசே! உயிரைத் தான் நேசிக்கும்! உள்ளத்தை உறுதி செய்து கொள்ளுங்கள்... உடனே போய் விடுங்கள்... உலகம் சிரிக்குமுன் போய் விடுங்கள்.

உதய : ஓலமிடும் சாகரத்தின்முன் நின்று ஓட்டைச் சங்கை ஊதுகிறாய்! பசியால் தத்தளிக்கும் மனிதனுக்குப் பழைய தத்துவங்கள் பயன்படாது கண்ணே! பாய வந்த வேங்கையிடம் பொறு மையை எதிர்பார்க்காதே மேகலா! நடுங்கும் என் உயிரை நாசமாக்கி விடாதே! கண்ணே வா போகலாம். நீயா இப்படி இருப்பது? ஐயோ! பார்க்கவே பரிதாபமாயிருக்கிறதே! புறப்படு

கண்ணே! அதோ பார்! நட்சத்திரங்கள் நம்மைக் கண்டு கண் சிமிட்டிக் கேலி செய்கின்றன. வா கண்ணே! ஏழடுக்கு உப்பரிகையில் எழிலரசியாக வீற்றிருப்பாய்! அங்கே தங்கப்படி கட்டிய பன்னீர்க் குளமே நிர்மாணிப்பேன்! அதில் மின்னும் அன்னம்போல் நீந்தி, உன் பொன்னு டல் இன்பமுறும்! சீனத்துச் சல்லாக்கள் உன் செந்தாமரை மேனியில் சிலுசிலுக்கும்...! யவனத்துச் சிற்பங்கள் உன் காட்சிக்கு மகிழ் வூட்டும்! நம் நாட்டு நீலப்பட்டாடைகள் உன் பருவ மேனியில் பளபளக்கும்! எனக்காகவே நீ பிறந்தாய்! உனக்காகவே நான் வளர்ந்தேன்.

மேக : *உஹூம்... எல்லாம் வீண் கனவு! என்னைப் பார்த்த மறுகணமே வேந்தர் உங்களை நாடு கடத்தச் சொல்லுவார்!*

உதய : *சந்தோஷமாக ஏற்பேன்... காதலுக்காகச் சோழ சாம்ராஜ்யத்தையே இழக்கத் துணிந்த பெருமை எனக்கு வரும்! நாம் தம்பதிகளாவோம்... நானில மெங்கும் சுற்றுவோம். நல்ல கலை வளர்ப்போம்... வா கண்ணே!*

மேக : *முடியாது அரசே! முடிவு செய்து விட்டேன்!*

உதய : *ஐயோ மேகலா! புது வீட்டின் முதல் வாசலையே மூடிவிட்டதுபோல், பருவத்தின் துவக்கத்திலேயே துறவியாவது இயலாத காரியம்! இதோ பார்! என் பொறுமை மீறுமுன் நீயாகவே புறப்பட்டு விடு... இல்லையேல் என் செல்வத்தை எப்படிக் கொண்டு போக வேண்டுமென்று எனக்குத் தெரியும்! புறப்படு மேகலா...!*

மேக : *மறந்து விடுங்கள் அரசே!*

உதய : *மேகலா!*

மேக : *கோபமா!*

உதய : மரணத்தைக் கண்டே பயப்படாதவன் நான்! புறப்படுகிறாயா? இல்லையா?

மேக : அரச அதிகாரம் புத்த மடத்தில் செல்லாது இளவரசே!

உதய : பார்க்கிறேன் அதையும்! தடுப்பது யார் என்னை இங்கே? மேகலை மனத்தை மந்திரம் செய்து மாற்றிய அந்தச் சண்டாளர்களைப் பலியாக்கு வேன். நீ என் செல்வம்! உரியவன் அழைக்கிறேன் எவனும் என்னைத் தடுக்க முடியாது!

மேக : நானே தடுத்தால்!

உதய : நீயே தடுத்தால்! மேகலா! நீயா பேசுகிறாய்?

மேக : நிச்சயம்! சத்தியமாக நீங்கள் போகத்தான் வேண்டும்... போய் விடுங்கள்!

உதய : ஆ! போய் விடுங்கள்! வேண்டாம் கண்ணே! உன் வாயால் மற்றொரு முறை அப்படிச் சொல்லாதே மேகலா! என் இதயம் இரண்டாக வெடித்து விடும்! உன் வாய் திறந்து போ என்றா சொல்லுகிறாய்?

மேக : ஆம் இளவரசே!

உதய : என்னையா?

மேக : உங்களைத்தான்.

உதய : போகிறேன் கண்ணே போகிறேன். உன்னை விட்டல்ல. இந்த உலகத்தைவிட்டே போய் விடுகிறேன்! கடைசியாக இந்த ஒரு வேண்டு கோளையாவது நீ நிறைவேற்றுகிறாயா?

மேக : என்ன?

(தன் கட்டாரியை அவள் கையில் கொடுத்து)

உதய : இதோ பல பகைவர்களை நாசமாக்கிய இந்தக் கட்டாரி! எடுத்துக்கொள்... என் மார்பைப்

பிளந்து என் இதயத்திலே மின்னும் உன்னுருவை எடுத்துக் கொண்டு, உடலை உன் கையாலேயே எரித்துப் சாம்பலாகப் பொசுக்கிவிடு மேகலா, பொசுக்கிவிடு மேகலா!

மேக : சுவாமி!

உதய : உம் ஏன் தாமதம்? உயிர்க்கொலை பாவம் என்று உன் வேதாந்தம் சொல்கிறதா? அப்படியானால் என் உயிரை அணு அணுவாகச் சித்ரவதை செய்கிறாயே? இந்தப் பாவத்தை எந்தக் கடவுள் மன்னிக்கப் போகிறான்?

அறவணர் : குழந்தைகளே! காவேரி நதியோடு போட்டி யிடுகின்றனவே உங்கள் கண்விழிகள்! அதென்ன கண்ணீர்? அறிந்தேன்? உங்கள் கண்ணீர் ஆசை யெனும் மாசகற்றும்... ஆனந்த ஊற்றாக மாறட்டும்! துன்பமெனும் அழுக்ககற்றி, தும்பை மலர்போல் உங்கள் உள்ளம் பொலியட்டும்! மாயக் கண்ணீர் தெளிந்ததும் பளிங்கு போல் தெளிவு பிறக்கும்! வேதனை தீரும்! உண்மை விளங்கும்! நாடாளும் மன்னன் மகன் நள்ளிரவில் இங்கு ஏன் வந்தது?

உதய : செத்துக் கொண்டிருக்கிறேன் சுவாமி! சிரித்துப் பேசுகின்றீர்கள்!

அறவ : நீயும் சிரிக்கலாம் மைந்தா! உள்ளம் சிரித்தால் உதடும் சிரிக்கும்! உலகமும் சிரிக்கும்!

உதய : இல்லை சுவாமி! குற்றமற்ற என்னை மேகலை அழவைத்து விட்டாள்!

அறவ : இல்லை. உன் மனமே உனக்கு எதிரியாகி விட்டது! மனோ வேகத்தில் குளிர் காய்ச்சலால் பேசுகிறாய்! மேகலை தெய்வமகள்! மகனே! காவலன் மைந்தன் நீ! எதிர்கால வேந்தன்! பாராளும் மன்னன் மகன் நீ! மாதவியின் மகள்

மணிமேகலை! திருமணம் செய்து கொள்ள நீங்கள் நினைத்தாலும் இந்த அநித்ய உலகம் அதைச் சம்மதிக்காது!

உதய : உலகைப் பற்றி எனக்குக் கவலையில்லை!

அறவ : உலகைப் பற்றி நீ கவலைக் கொள்ளவில்லையானால், உலகமும் உங்களைப் பற்றி கவலைப்படாது மகனே! உலகம் ஒருவேளை ஏற்றாலும், உங்கள் விதி வேறுவிதமாய் வேலை செய்து விடும்!

உதய : விதியை வெல்வேன்.

அறவ : அது விண்ணவராலும் முடியாது! போ இன்றுடன் மேகலையை மறந்துவிடு மகனே! போய் வா! மேகலை உனக்கு உரியவளல்ல... அவள் உலகின் செல்வம்! அறத்தின் திருமகள்! விடிவெள்ளி உதயமாகி விட்டது! வேறு எவரும் உன்னைக் காணுமுன் வெளியே போய்விடு மைந்தா! புத்தர் கோட்டத்தின் கட்டுப்பாட்டை அறிந்தும் பிழை செய்து விட்டாய்! பாதகமில்லை, மன்னித்தோம். மறுபடியும் தவறு செய்ய வேண்டாம். மகனே! உறுதிகொள்! உன்னை வென்றால், உலகையும் வெல்லலாம் போய்வா மகனே!

(காட்சி - 10 முடிவு)

காட்சி - 10 (a)

இடம் : புத்தர் கோட்டம் மறுபகுதி

அறவ : அழுகை என்ற வெள்ளத்துக்கு அறிவால் அணை கட்ட வேண்டும் தாயே!

மேக : அது என்னால் முடியவில்லையே சுவாமி!

அறவ : முயற்சி செய்தால் முடிவில் வெற்றி பெறுவாய்! துயரத்துக்குக் காரணமாவது ஆசை! அதை அழிக்க வேண்டுமம்மா!

மேக : அதற்கு வழி!

அறவ : காலில் தைத்த முள்ளை கையால் எடுப்பது போல், உன் உள்ளத்தின் ஆசைகளை அறிவால் களைந்து விடவேண்டும். ஆசையின் விளைவு பிரேமை... அதன் விளைவுதான் துயரம், துயரின் துன்ப மழைதான் கண்ணீர்! இத்தனையும் மாயையின் நடனம்! இதை மறக்கப் பகவான் பாதத்திலே பக்தி செலுத்த வேண்டும்.

மேக : பக்திக்கேற்ற பக்குவமில்லாவிட்டால்...

அறவ : பரிதவிக்கும் உயிர்களுக்குப் பணி செய்யலாம்.

மேக : அதற்கும் ஆற்றல் வேண்டும்!

அறவ : அவனருள் பெற்றால் ஆற்றல் தானே வரும் குழந்தாய்.

மேக : அருளைப் பெறுவதெப்படி?

அறவ : அது தவத்தால் சித்திக்கும் தாயே!

மேக : தவம் செய்யும் தகுதி எனக்கு இருக்கிறதா?

அறவ : ஏனில்லை? துணிந்து நில் மகளே! நமது பகவான் புத்த தேவர், அன்பின் மனைவி, அருமைச் சிறு குழந்தை, அரண்மனைச் சுகபோகம் எல்லா வற்றையும் துரும்பெனத் துறந்துவிட்டுக் கானகம் சென்று கடுந்தவம் செய்ததால் தானே, போதி சத்வர் ஆனார்! புவியெல்லாம் வசப்படுத்தினார்!

மேக : அவர்கள் எல்லாம் ஆண் பிறவிகள்! நான் பெண் பேதை!

அறவ : ஞானப் பாதையில் ஆண் பெண் என்ற பேதமில்லை தாயே! பிணி தீர்க்கும் மருந்துக்கு அதன் பெருமை தெரிவதில்லை! உன் பெருமை உனக்குத் தெரியவில்லை... நம்பு மகளே! நீ உயிர்களை ரட்சிக்கப் பிறந்தவள்! ஆருயிர்த் துயர் நீக்கும் அமுத கடாட்சம் பெறப் போகிறாய்! உன்னைப் பெறாமல் பெற்ற அன்னை கண்ணகி தேவி கற்பின் தெய்வமானாள்! நீ கன்னித் தேவதையாகக் கவலையை நீக்கப் போகிறாய்! மனமிருந்தால் மார்க்கம் உண்டு! இதுவே ஞான விருட்சத்தின் முதல் வித்து... இதைப் பயிர்செய் மகளே! பலன் கிடைக்கும்! கீழ்த் திசையில் கதிரவன் உதயமாவது போல், உன் இதயத்தில் தவக்கனல் உதயமாகும்! அப்போது ஆசா பாசங்கள் என்ற சருகுகள் எல்லாம் எரிந்து சாம்பலாகும்! உடலின் அவஸ்தைகள் எல்லாம் ஒளியின் முன் பனியாக மறைந்து விடும்... உறுதி கொள் மகளே! உண்மை உனக்கே தெரியும்!

(காட்சி - 10 (a) முடிவு)

காட்சி - 11

இடம் : வேறு ஒரு சோலை

உதய : *கலைமணி! பெண்களை ஏன் படைத்தான்?*

கலை : *அது கடவுளைத்தான் கேக்கணும்!*

உதய : *கடவுளா படைத்தான்?*

கலை : *சேச்சே! கட்டாயம் அவரிந்த காரியத்தைச் செய்திருக்கவே மாட்டார்!*

உதய : *பின் யார் செய்தது?*

கலை : *காதல் என்கிற பிசாசு செஞ்ச பொம்மைக்குத் தான் பொம்பளைன்னு பேரு!*

உதய : *பொய் சொல்லுகிறாய்!*

கலை : *போப்பா! ரொம்ப பெரியவங்களே சொல்றாங்க!*

உதய : *ஆனால், என் மேகலை அப்படியல்ல!*

கலை : *ஒவ்வொருத்தனும் அவனுக்குப் புடிச்ச பொண்ணைப் பத்தி இப்படித்தான் சொல்றது வழக்கம்.*

உதய : *பாசமுடன் பேசினாள்!*

கலை : *பாட்டி சொல்லிக் கொடுத்திருப்பா!*

உதய : *தென்றல் போல் ஆடினாள்...*

கலை : *தாயைப் போலப் பொண்ணு...*

உதய : *அசைந்து ஆடினாள்!*

கலை : *கொடி ஆடுவது இயற்கை! கோல மரம் ஆடக் கூடாது. ஆடினால் வேரோடு விழும்.*

உதய : அறிவற்றவனா நான்?

கலை : சே! அதை நானாகச் சொல்ல மாட்டேன்! அறிவை அடகு வெச்சிட்டே.

உதய : அறிவைப் பற்றிப் பேசாதே! அவளைப் பற்றிப் பேசு நண்பா!

கலை : பிரயோசனம்...?

உதய : ஊசலாடும் என் உயிருக்கு ஒரு ஆறுதல்!

கலை : அட போப்பா ஊசிப்போன பலகாரம், ஒடஞ்சி போன கண்ணாடி, இதை எல்லாம் வூட்லே வைச்சிருக்கக் கூடாது. ஓடிபோன பொம்பளை யையும் உடனே மறந்து உன் வேலையைக் கவனி!

உதய : மறப்பதா! முடியாது நண்பா! எந்த ஜென் மத்திலும் என் மேகலையை மறக்க முடியாது! வைரமணிச் சிரிப்பால் என் வாழ்வை அறுத்து விட்டாள்! வீணை இசைக் குரலால் என் உயிரை வசமாக்கி விட்டாள்! கண் விழியின் இமையில் என்னைக் கருமையாய்த் தீட்டி விட்டாள்! பாட்டின்பச் சாட்டையிலே பம்பரமாய் ஆட்டி விட்டாள்! பாதச் சிலம்பொலியில் பரமபதம் காட்டி விட்டாள்.

கலை : பேச்சு அதிகமானால் பைத்தியத்தின் ஆரம்பம்!

உதய : ஆம்! பைத்தியம் தான் நண்பா! மேகலையின் அழகின் முன் நான் பைத்தியக்காரன் தான்! பைத்தியக்காரன்! ஹஹ்ஹா... (சிரிப்பு) ஆசை என்ற அடிவானத்தைத் தேடி வேகமாக ஓடிக் கொண்டிருந்த என்னை, ஒரு நொடியில் தன் கடைக் கண்ணால், தடை செய்து, இதோ தொடுவானம், நான் இருக்கிறேன்! என்று ஆடி அசைந்தாள்! காட்சி தந்து, கைகாட்டி அழைத்த வளை நேசக்கரம் நீட்டி, நெருங்கிச் சென்றவுடன், காரிருளில் மின்னல் போல், கடும் பாலைக்

கானல் போல் மறைந்து விட்டாள்! கண்ணை யிழந்தவனாய், கானகத்தில் அலைகிறேன்! நண்பா நான் என்ன செய்வேன்?

கலை : கவலைப்படாதே! உனக்குன்னு ஒரு ராஜகுமாரி காத்திருக்கிறா!

உதய : பேசாதே கலைமணி! என் இதயம் துடிப்பதைப் பார்? இறந்து விடுவேனா? நண்பா! முடிவு நெருங்கி விட்டது! ஆம்! சோலை சுடுகாடாகி விட்டது! கனவு கலைந்து விட்டது.

கலை : இளவரசே!

உதய : தடுக்காதே என்னை! அதோ என் மேகலை! ஏமாற்றாதே கண்ணே! அதோ! அதோ! சிரிக்காதே. பெண்ணே! வா.... வா... வா... என் தந்தை சம்மதித்து விட்டார்! வா... ஏமாற்ற மாட்டேன்! என் சொந்த மனைவி நீ! மணமகன் நான்! நீ அவள் ராணி! மேகலா? மேகலா ஆ!

(பித்தம் பிடித்தவனாக தலைதெறிக்க ஓடவே, அடிபட்டு, தலையிலிருந்து ரத்தம் கொட்டுகிறது)

கலை : இளவரசரே!

உதய : இல்லை! நான் பைத்யம்! அதோ என் சிந்தனை உலகம் சுக்குநூறாக சிதறிவிட்டது! சூரியன் தூளாகி விட்டான்! புயல் வீசுகிறது! பூகம்பம் குமுறுகிறது! எரிமலை கொதிக்கிறது. அதோ கடல் கொந்தளிக்கின்றன. ஆயிரம் பாம்புகள் அதோ சீறி வருகின்றன! ஐயோ! ஐயோ! ஆ! மேகலா! மேகலா... மேகலா...

(கலைமணி முகத்தில் தண்ணீர் தெளிக்கிறான்)

(இளவரசன் உதயகுமாரன் மேகலையின் ஓவிய உருவப்படத்தின் முன்பு கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறான்)

சோழன் : உதயா! ஏன் கோழைபோல் தேம்புகிறாய்? காவலன் மகன் நீ! கணிகை அவள்! வீரனா யிருந்து உன் பெருமையை நிலைநாட்டு...

உதய : தோற்றுவிட்டேன் தந்தையே! தோற்றுவிட்டேன்! மனப்போராட்டத்திலே அடிபட்டு மரணவஸ்தை யிலே தவிக்கிறேன்! அவள் இல்லாவிட்டால் நானில்லை தந்தையே!

சோழ : நீ இல்லாவிட்டாலும் அவள் இருப்பாளடா முட்டாள்! என் பொறுமையைச் சோதிக்கிறாய்! என் கோபம் குமுறுகிறது!

உதய : குமுறி, என்னைக் கொன்று விடுங்கள் தந்தையே!

சோழ : போதும்! உன்னைப் பெற்ற பாபமே எனக்குப் போதும்! கொல்லும் பழிவேறு எனக்கு வேண்டாம்! வீரர் வழி வந்தவன் நான்! உன்னைப் போன்ற கோழையை, பெண் பித்தனைக் கொல்லும் அளவுக்குச் சோழ மன்னன் தாழ்ந்து விடவில்லை... கடைசியாகக் கேட்கிறேன்... நீ என் கட்டளைக்குப் பணிய விருப்பமா? இல்லையா? எனக்குப் பின் சோழ சாம்ராஜ்யத்தின் மணி முடியைச் சூட்டிக் கொள்ளப் போகிறாயா இல்லையா?

உதய : நான் மன்னனாக வேண்டுமானால் மேகலை மகாராணி ஆகவேண்டும்!

சோழ : மடச்சிறுவனே! மதியிழந்தவனே மமதையின் பேயே! மனிதப் பண்பை இழந்தவன், மைந்தனே ஆயினும் மன்னிக்க மாட்டான் மன்னன்! போய் விடு... கண்முன் நிற்காதே! இன்றுடன் நீ என் மகனல்ல... போ வெளியே! பூம்புகாரின் எல்லையை விட்டுப் போய்விடு! உன்னை மாற்றுவதைவிட மறப்பது சுலபம்! போ!

உதய : போகிறேன் மன்னவா! வருங்காலக் கவிஞர்கள் காவியம் எழுதும்போது, உங்கள் மகன் செய்த இந்த மகத்தான தியாக வரலாற்றைக் கண்ணீரால் எழுதுவார்கள்! முடிந்தது... இன்றுடன் நமது பாசம் முடிந்தது. போய் வருகிறேன்.... மன்னர் கீர்த்திக்கு மாசு கற்பித்த நான் இங்கிருக்கத் தகுதியில்லை என்பதை மனமார உணர்ந்தே போகிறேன் சோழ மன்னவா! மாறாத இக் குற்றவாளியை மன்னிக்காமல் தண்டித்த உங்கள் மனவுறுதியை மெச்சுகிறேன்... வருகிறேன்!

(காட்சி - 11 முடிவு)

காட்சி - 12

இடம் : புத்தர் கோட்டம்

மாதவி : உடைகளை நெய்து இன்று பிட்சுக்களுக்குக் கொடுத்தேயாக வேண்டும்!

சுதமதி : ஓய்வே இல்லையம்மா உங்களுக்கு?

மாத : உயிர் இருக்கும்வரை ஓய்வு ஏதம்மா உடலுக்கு? மணிமேகலை உலகில் வற்றாத நிதி எது? சொல்...

மணிமேகலை : வற்றாத நிதி வான நிதியம்மா! தேவன் கருணை!

மாத : சரியான விடை! நமக்கு உண்மையான பூஷணம்?

மணி : பொறுமைதானம்மா...

மாத : ஆம்! சுதமதி, மேகலை பதிலைப் பார்த்தாயா?

சுதமதி : உங்கள் மகள் இல்லையா?

மாத : தவறு சுதமதி! மேகலை என் வயிற்றில் பிறந்தாலும் அவள் என் மகள் அல்ல... பத்தினித் தெய்வமான கண்ணகி தேவியின் அன்பு மகள்... அந்தத் தெய்வத்தின் மகள், மற்றொரு தேவதையாக உலவுகிறாள் என்பதை நானறிவேன்...

(இச்சமயம் காயா சண்டிகை தோன்றுகிறாள்)

சுதமதி : இதோ வந்து விட்டாளே காயசண்டிகை!

மாத : வா! வா! நகரில் இன்று என்ன சிறப்பு விசேஷம்.

(புன்சிரிப்புடன்)

காய : ஊரைவிட்டு ஓடிப்போன சாதுவன் என்பவன் ஊர் திரும்பிவிட்டான். அவன் மனைவி ஆதிரை, தன் உயிரைவிட ஆயத்தமாயிருந்தாள்! அவன் சமயத்தில் வந்ததால் அந்தக் கற்புக்கரசியின் உயிர் தப்பியது இது பற்றித்தான் ஊரெல்லாம் பேச்சு!

மேக : என்ன? நம்ம அறவணரே போற்றும் ஆதிரையின் கணவனா சாதுவன்?!

மாத : ஆமாம்! சாதுவனை உனக்குத் தெரியுமா?

மேக : அவனை நான் தெரிந்து கொள்ளவில்லை! அவன் என்னைத் தெரிந்து கொண்டான்... நம் வீட்டை நாடி வந்த மனிதப் பூச்சிகளில் அவனும் ஒருவன். பாட்டி அவனைப் படாத பாடுபடுத்தி விட்டாள்... பாவம்...

காய : மணிமேகலை! அதே சாதுவன் இன்று அடி யோடு மாறிவிட்டானாம்! மனைவியை மகா லட்சுமி என்று கும்பிடுகிறானாம்...

மாத : அப்படியானால் நோன்பு பலித்துவிட்டதென்று தான் அர்த்தம்!

காய : நகரில் இன்று வேறொரு விசேஷச் செய்தியும் உண்டம்மா...

மாத : அதென்ன?

காய : இளவரசர் உதயகுமாரர்....

மாத : உம்...

காய : உண்பதில்லையாம்...

(மேகலை பூமாலை தொடுத்துக் கொண்டிருந்த வாறே காயசண்டிகையின் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறாள் மௌனமாக! பலவித முக பாவங்களோடு - சம்பாஷணைகளுக்கு ஏற்ப)

மாத : உம்...

காய : உறங்குவதுமில்லையாம்...

மாத : உம்...

காய : தனக்குத்தானே பேசிக்கொள்கிறாராம்...

மாத : (ஆச்சரியத்தோடு) அட...!

காய : இன்ன நோய் என்று எவருக்குமே புரிய வில்லையாம்!

மாத : உம்...

காய : ஆனால் நான் அந்தரங்கமாக விசாரித்ததில் அது காதல் நோய் என்று தெரிந்தது! மற்ற நோய் களுக்கு மருந்துண்டு... இந்த மனநோய்க்கு ஏதம்மா மருந்து? அவர் தந்தைக்கும் உதய குமார ருக்கும் இந்தக் காதல் காரணமாக வாக்குவாதம் ஏற்பட்டு, அது மனஸ்தாபமாக மாறிக் கடைசி யில் வேந்தர் அவரை அரண்மனையை விட்டே துரத்தி விட்டாராம். எல்லோரும் இளவரசருக்கு மனமயக்கம் என்றே சொல்கிறார்கள்... உம்... பாவம்... காதலை இழந்து, கண்ணியத்தையு மிழந்து, நாடோடி யாகி விட்டா ராம் உதய குமாரர்...

(இது சமயம் மாதவி தன் மகளின் நிலையை பார்க்கிறாள் - மேகலையின் கைவிரலிலிருந்த ஒரு மலரிலிருந்த முள் குத்தி ரத்தம் சொட்டு கிறது)

மாத : மேகலை... மேகலை!

மேக : ஓ! என்னம்மா?

மாத : அதென்ன ரத்தம் கொட்டுகிறது? பூவெல்லாம் ரத்தம்!

(தன் கையிலுள்ள ரத்தத்தைத் துடைத்தபடி)

மேக	:	*முள் விரலில் குத்தி விட்டது!*
மாத	:	*பகவான் பூஜைக்கான மலர்களின் பரிசுத்தம் கெட்டு விட்டதே!*
மேக	:	*ஆம்! இவற்றை எடுத்தெறிந்துவிட்டுப் புதுமலர் களைக் கொண்டு வரச்சொல்...*
மாத	:	*நானே பறித்து வருகிறேனம்மா!*
மேக	:	*புறப்படு மேகலா! நானும்கூட வருகிறேன்.*
உதய	:	*உம்... போய் வாருங்கள்.*
		(இருவரும் போகிறார்கள்)

(காட்சி 12 முடிவு)

காட்சி - 12 (a)

இடம் : உபவனம்

(சுதமதி ஒரு பக்கம் மலர் கொய்தல் - மேகலை மற்றொரு பக்கம் மலர் கொய்கிறாள். அவள் பக்கத்தில் இளவரசன் உதயணன் ஒரு மலர்ப் புதரிலிருந்து தலை நீட்டுகிறான்)

உதய : *மேகலா என்னையும் ஒரு மலராகப் பறித்து உன் இஷ்ட தெய்வத்திற்குச் சூட்டுவிடு கண்ணே! ஆகா! இந்த மலர்கள் செய்த பாக்கியம் கூட மனிதனான நான் செய்யவில்லையே!*

மேக : *இளவரசே!*

உதய : *கலையரசி!*

மேக : *அதெல்லாம் கடந்த காலம்! இப்போது நான் புத்த சங்கத்தின் சேவகி! பற்றையறுக்க எண்ணும் ஒரு பரிதாப ஜீவன்!*

உதய : *பற்றை அறுக்கிறேன் என்று சொல்லி இந்தப் பாவியின் நெஞ்சைப் பற்றி எரிக்கிறாய் மேகலா!*

மேக : *இன்னும் மறக்கவில்லையா?*

உதய : *இன்னும் இறக்கவில்லையா என்று கேள்...*

மேக : *பிறந்தவர் எல்லாம் இறப்பது உறுதி இளவரசே! இறப்பதற்கு அஞ்ச வேண்டியதில்லை! பிறப்ப தற்குத் தான் அஞ்ச வேண்டும்...*

உதய : *அப்படியானால் என்னைக் கொன்று உன் பழியை முடித்துவிடு... உன் பார்வையால் பைத்தியக்காரனாக அலையும் என்னைப் பார்ப்பவர் நகைக்கும் பரதேசியாய், பெற்றோர் வெறுக்கும் பாதகனாய், பதவி இழந்த ஏழையாய்,*

வீரமிழந்த கோழையாய், உயிரிழந்த உடலாய், செல்லரித்த சவமாய், எவர்க்கும் பயனற்றவனாய், மன்னன் ஆணைக்கு மறைந்து, கள்வன்போல் வாழும் என்னை, உன் கையால் கொன்று, என் உயிருக்கு விடுதலை கொடுத்துவிடு, மேகலா! - இதைத்தான் அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன்... என்னைக் கொன்றால், உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு மேகலா! யோசிக்காதே! என் வேதனைக்கு ஒரு முடிவு கட்டு...

மேக : இளவரசே!

உதய : இளவரசன்... நானல்ல மேகலா! இன்று நானொரு ஏழை வாலிபன்... உன்னை எண்ணி ஏங்கும் அபாக்கியவான்!

மேக : உறைந்து கல்லாகிப்போன உணர்ச்சிகளுக்கு இனி உங்கள் கண்ணீர்கூட உயிர் கொடுக்க முடியாது! பெண் எளிதில் ஒரு முடிவுக்கு வரமாட்டாள்! வந்தபின் அவள் மாறமாட்டாள்!

உதய : வைராக்கியம் என்ற பேய் பெண்களை மட்டும் பிடித்து ஆட்டுவதில்லை மேகலா! ஆண்களையும் அந்தப் பேய் பிடிப்பதுண்டு! இதோ பார் என்னை... உறுதி என்கிறாயே! முதலில் நீ எனக்குக் கொடுத்த உறுதி எங்கே போனது? அவ்வளவும் காவேரி வெள்ளத்தில் கலந்த கரும்புச்சாறுதானா?

மேக : அறிவு தெளிவற்றபோது, என் அன்னையைக் காணாதபோது, இளமை என்ற மயக்கத்திலே ஏதோ உளறியிருப்பேன். அதை உறுதி என்று எடுத்துக் கொண்டது உங்கள் குற்றம்!

உதய : தெரியும்! பெண்கள் எப்போதுமே சுயநலக் காரிகள்! தங்கள் குற்றத்தைத் தலை போனாலும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். சரி நடந்த

குற்றத்தை எல்லாம் நானே ஏற்றுக் கொள்கிறேன். உன்னைப் பார்த்தது முதல் குற்றம்... காப்பாற்றியதும் குற்றம்... பேசியதும் குற்றம்... பழகியதும் குற்றம்! விரும்பியதும் குற்றம்! உன் காரணமாகப் பெற்றோரைப் பகைத்துக் கொண்டதும் மன்னிக்க முடியாத மாபெரும் குற்றம்! இந்தக் குற்றங்களுக்கெல்லாம் சிகரமாய், இப்போது கடைசிக் குற்றத்தையும் செய்யப் போகிறேன்... என்னைத் தடுக்கச் சக்தி உள்ளவர்கள் வரட்டும் பார்க்கலாம் மேகலா! இதுவரை என் சுய உருவம் பேசியது... இனி என்னில் ஆடும் கோரமான பேய்தான் உன்னுடன் பேசப் போகிறது! மனிதனின் ஆசை நிறைவேறாதபோது அவன் பேயாகிறான்! மரியாதையாக என்னுடன் புறப்படு... இல்லையேல் உன்னை எப்படியும் அடையும் ஆற்றல் எனக்குண்டு! என்னடி நீலி! எங்கே ஓடப் பார்க்கிறாய்?

மேக : ஐயோ! ஆண்டவா!

உதய : ஹஹ்ஹஹ்... ஆண்டவனே வந்தால்கூட, அவனை எதிர்ப்பேன்! பார்த்து மயக்கி விட்டுப் பாசாங்கா செய்கிறாய்? பேசி வசப்படுத்தி விட்டுப் போகவா பார்க்கிறாய்? ஆடி, அடிமையாக்கி விட்டு அகலவா பார்க்கிறாய்?

மேக : வேண்டாம்... பைத்தியமாக வேண்டாம்.

உதய : ஹஹ்ஹஹ்... பைத்தியம்தானடி பைத்தியம்தான்... பிரேமை பிடித்தவரெல்லாம் பைத்தியம்தான்... உலகில் அழகு பிறந்த அன்றே பைத்தியமும் பிடித்துவிட்டது! காற்றின் பைத்தியம் மேகத்தைத் துரத்துகிறது! மேகத்தின் பைத்தியம் மலையிலே மோதுகிறது! மழையின் பைத்தியம் நதியிலே ஓடுகிறது! நதியின் பைத்தியம் கடலிலே முடிகிறது! கடலின் பைத்தியம் முடிவற்ற ஓசையாய்

மூண்டுகொண்டே இருக்கிறது! நான் நதி.. நீ கடல்! மேகம் நான்... மலைச்சாரல் நீ! ஆசைக் கடலே எங்கேயடி போகிறாய்? நரகம் சுவர்க்கம் எங்கு போனாலும் நான் உன்னைவிட மாட்டேன்... நில்...

(மேகலை மறைகிறாள்)

உதய : *ஆ! மந்திரக்காரி! மாயமாய் மறைந்து விட்டாய்! ஆ! மேகலா! மேகலா!*

(தலையை இடித்துக்கொள்ள ரத்தம் வழிகிறது)

(காட்சி – 12 (a) முடிவு)

காட்சி - 13

இடம் : சித்ராபதி வீடு

சித்ரா : கடைசியாக இப்படி மாறிட்டுதே கதை! நான் அப்பவே சந்தேகப்பட்டேன். அப்படியே ஆயிட்டுது!

மாமா : நான் அப்பவே சொன்னேன்... சந்தேகப்படாதேன்னு... கேட்டாத்தானே!

சித்ரா : இப்போ மேகலை எங்கேதான் போயிருக்காளாம்?

மாமா : யாருக்குத் தெரியும்? பாவம் அந்த இளவரசன் வேறு பைத்தியமாகத் திரியுறான்!

சித்ரா : எல்லாம் அந்தச் சாமியார் அறவண அடிகள் செய்யற வேலை... அந்த ஆளை ஒழிச்சா எல்லாம் சரியாப் போகும்!

மாமா : உம்... ஒழிச்சுப்புடுவே நீ... அந்த ஆளைப் பார்த்து மகாராஜாவே பயப்படறாராம்!

சித்ரா : பின்னே என்னதான் பண்ணறது?

மாமா : என்ன பண்ணறது? வயசான காலத்திலே, இருக்கிறது போதும்னு... வாயை மூடிக்கிட்டுச் சுகமாயிருக்கிறது.

சித்ரா : என்னடாப்பா இப்படிச் சொல்லிட்டே! சின்னம் சிறிசுகள் எல்லாம் உலகை வெறுத்துத் திரியுறாங்க! நான் சுகமாக இருக்கிறதா?

மாமா : சரி! நீயும் காவி கட்டிக்கிட்டு கிளம்பு... வயசான நீயெல்லாம் இப்படிப் பேராசை பிடிச்சு

அலையுறே? வயசுப் பெண்ணுங்க உலகை வெறுத்துச் சந்யாசி ஆயிட்டாங்க!

சித்ரா : அட யார்ரா? நீ ஒருத்தன்... வேகிற அடுப்புலே விறகெடுத்துப் போடுறே!

மாமா : இன்னும் நல்லா பத்தி எரியட்டுமின்னு தான்!

சித்ரா : பார்க்கிறேன் பார்க்கிறேன்... அந்தக் குட்டிகளை வசப்படுத்தா விட்டா என் பேரு சித்ராபதி இல்லே! இந்தா அழகு! நீ போய் அந்த மேகலை எங்கே இருக்கான்னு நல்லா விசாரிச்சுக்கிட்டு வா! போ!

(காட்சி - 13 முடிவு)

காட்சி - 14

இடம் : புகார் நகரில் ஒரு பகுதி

(ஒரு மண்டபத்தின் மீதிருந்து சாதுவன் ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்கிறான்)

சாதுவன்: *முட்டாள் ஜனங்களே! நான் சொல்றதைக் கேளுங்க! நல்ல வழி இருக்க - நாச வழியில் போகாதீங்க! கட்டின பொண்டாட்டியைக் கலங்க விடாதீங்க! வேறு பெண்களைச் சகோதரி களாக நினையுங்க! யாரையும் முட்டாள்னு எண்ணாதீங்க! உங்க உங்க கடமையை ஒழுங்காச் செய்யுங்க! இப்படி இருந்தாக்கா நீங்க நல்லா இருப்பீங்க! இல்லாட்டி நாசமாகப் போவிங்க. ஆமாம்! அனுபவிச்சவன் சொல்றேன்... அமைதி யாக் கேளுங்க!*

ரசிகன் 1: *ஆமாம்... இவ்வளவும் சொல்றியே! நீ பெரிய ஞானியோ?*

சாது : *ஞானிகள் சொல்றதைவிட நான் சொன்னாதான் உங்களுக்குப் படார்னு புரியும்... ஏன்னா நான் அனுபவசாலி. மேலும்*

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு!

தோழனே! என்னைப் பார்க்காதே! என் பேச்சைக் கேள்!

ரசி. 2 : *நல்லதைச் சொல்றவன் நல்லவனா நடக்கணும் தம்பி! வெட்டிப் பிரசங்கத்திலே உலகம் திருந்தாது!*

சாது : *ஒரு காலத்திலே நான் கெட்டவன்தாம்பா... இப்போ திருந்திட்டேன்! ஒரு காலத்திலே நோய்*

பிடிச்சிருந்தது.... மருந்து சாப்பிட்டேன், நல்லா ஆயிட்டேன் ஜாக்ரதை! உங்களுக்கு நோய் வராம உடம்பைக் காப்பாத்திக்கோங்க! ஆமாம் சொல்லிட்டேன்! அப்புறம் உங்க இஷ்டம்!

ஒருவன் : சரிதான் போய்யா! பெரிய இவரு! பிரசங்கம் பண்ண வந்துட்டாரு!

மற்றொருவன் : போறியா இல்லையா இப்போ?

சாது : தம்பி எனக்கு இதைப்போல உண்மையைச் சொல்றவன் இல்லாததால் தான் நான் ஊர் சுத்தி உடம்பைக் கெடுத்துக்கிட்டேன்! ஆகையினால் நானே கிளம்பிட்டேன் பிரசங்கத்துக்கு! நான் பெற்ற துன்பம் இந்த உலகம் பெறவேண்டாம்! நாகர்கள் கிட்டெ அகப்பட்டு கிட்டேன்... காமத்தாலே கண் இழந்தேன். காசு சம்பாதிக்க கப்பலில் போனேன் - புயல் வந்தது. கப்பல் உடைந்தது. நரமாமிசம் திங்கற கூட்டத்திலே இருந்து தப்பி வந்தேன்....

மற்றொ : சரிதான் போடா...

சாம்பி : சாதுவா வா! போகலாம். பசங்க கல்லெடுத்து அடிப்பாங்க போலிருக்கு!

சாது : பரவாயில்லை நண்பா! உலகில் பாவம் குறைய நான் பலியாகிறேன். தவறு செய்யாதவன் எவனோ, அவன் என் மீது கல் வீசட்டும்.

சாம்பி : அதெல்லாம் வேணாம்! ஆதிரை வருத்தப்படும்.... இதோ பாரு... உலகத்தைப்பத்தி நீ கவலைப் படாதே! எப்போ நீயே திருந்திட்டியோ அப்போ இந்த உலகமும் கட்டாயம் திருந்தும்! வா இப்போ! உடம்பைக் கெடுத்துக்காதே! வா போவோம்...

சாது : அருமைப் பெருமக்களே! வருகிறேன்.

சாம்பி : *அட வாப்பான்னா.. உன் மனைவி ஆதிரை உனக்காக தவங்கிடக்கிறாள். பிரசங்கம் பண்றான்!*

சாது : *இனிமே ஆதிரையை என் மனைவின்னு சொல்லாதே பாவம். அவள் இனிமே என் குலதெய்வம்! கற்பின் தேவதை - கண்ணகி மாதிரி கையெடுத்துக் கும்பிட வேண்டிய கடவுள் - வா போகலாம்! கெட்டாத்தான் புத்தி வருது... கேட்டா புத்தி வரலியே!*

(காட்சி - 14 முடிவு)

காட்சி - 15

கலை : *இந்த மருந்தைச் சாப்பிடப்பா! உடம்பு குணமாகும்!*

உதய : *மனநோய்க்கு மருந்துண்ணும் மடையன் நானல்ல நண்பா!*

கலை : *அப்போ மந்திரமாவது போடுறேன் வா!*

உதய : *என்னை மயக்கும் மந்திரம் அந்த மேகலையின் மயல் விழிகள்தான் கலைமணி!*

கலை : *இந்தா பாரப்பா! சூரியனை தூர இருந்து பார்ப்பதோடு சந்தோஷம் அடையணும்... கிட்டப் போனா சுட்டு எரிச்சுப்பிடும். மேகலை ரொம்ப மேலே போயிட்டா! நீ வரவரப் பாதாளத்துக்குப் போயிகிட்டே இருக்கே! சரி வா! நாம் கப்பலேறிச் சாவகத் தீவுக்கு உல்லாசப் பயணம் போய் வரலாம்.*

உதய : *நான் கப்பலேறினால், கடலே பற்றி எரிந்துவிடும் கலைமணி!*

கலை : *போடு சக்கை! அப்படி எரியுதா உன் உடம்பு!*

உதய : *ஆம்! என்றும் ஆறாத ஊழி நெருப்பு, யுக யுகாந்தரமாக எரிந்து கொண்டே இருக்கும்!*

கலை : *இதோ பாரு! அப்படித்தான் அவ என்னப்பா உலக அழகியா! எல்லாப் பெண்களைப் போலத் தானே?*

உதய : *நண்பா! மேகலை ஒரு மோகன வடிவம்! என் கண்களை உன் கண்களில் வைத்துப் பார்த்தால் தான் தெரியும்... அவளை நீ ரசிக்க முடியும்!*

சித்ரா : இளவரசே! இளவரசே! என்னாங்க! எப்படி இருக்கீங்க? வந்துட்டாங்க மேகலை வந்துட்டாங்க..!

உதய : ஆ! வந்து விட்டாளா! என் மேகலை வந்து விட்டாளா? எங்கே? எப்போது? எப்படி இருக்கிறாள்?

கலை : ஏய் பாட்டி..! உன்னை யாரிங்கே வரச் சொன்னது?

உதய : கலைமணி பேசாதிரு! பாட்டி..! எங்கே? எங்கே என் மேகலை?

சித்ரா : அவ உருமாறிப் போயிட்டாங்க! பார்த்தா வயிறு பத்தி எரியுதுங்க. இந்தச் சன்யாசிகள் எல்லாம் சேர்ந்து என் பொண்ணை என்னமோ மந்திரம் கொண்டு கெடுத்துட்டாங்க! காவி கட்டிக்கிட்டுப் பிச்சை எடுக்கிறாங்க!

உதய : ஆ! பிச்சை எடுக்கிறாளா! உலகின் கலைப் பசியைத் தீர்க்க வேண்டிய கலைவாணி கமண்டலம் ஏந்துகிறாளா? கொடுமை! கொடுமை! இதற்குக் காரணமானவர்களை உடனே நாசமாக்குவேன்... கலைமணி! எங்கே நமது படைகள்! வரச்சொல் உடனே!

கலை : ஹுக்கும்... இந்தாப்பா! இப்போ நீ இளவரச னில்லே! மகாராஜாவாலே நாடு கடத்தப்பட்டுத் தலைமறைவாக அலையும் ஒரு அபாக்யவான்! படை வீரர்கள் உன் சொல்படி நடக்க மாட்டார்கள்.

உதய : தனியாகவே எதிர்ப்பேன்... உலகில் துறவு என்ற பதமே இல்லாமல் தூளாக்குவேன்!

கலை : நீ நினைப்பது போல் சுண்டைக்காய் அல்ல பௌத்த சங்கம்! அதிகம் பேசாதே! மனசு மறுபடியும் அதிர்ச்சியாயிடும்! இந்தா பாட்டி! நீ

போயிடு வெளியே! கூனி மாதிரி வந்து இந்த மனுஷனைக் கெடுத்துடாதே! போ!

உதய : *பாட்டி நீ போ! நான் போகிறேன். மேகலையை அந்த மாய மடத்திலிருந்து மீட்பேன்! மண மண்டபத்தில் மணமகளாக்குவேன்!*

சித்ரா : *போயிட்டு வர்ரேங்க மாப்பிள்ளை!*

(போகிறாள்)

கலை : *அடச்சே! போ! மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை!*

உதய : *கலைமணி! உடனே போக வேண்டும்!*

கலை : *இதோ பாரு... புத்த மடத்துக்குள்ளே நீ இப்படியே போனே, பெரிய விபரீதம் வந்திடும்! ஏற்கெனவே ஒருமுறை அறவண அடிகள் உன்னைக் கண்டித்திருக்கிறார்!*

உதய : *எப்படியும் என் மேகலையைப் பார்க்க வேண்டும்... இல்லாவிட்டால் என்னுயிர் நில்லாது நண்பா!*

கலை : *சரி... நீயும் ஒரு சாமியார் மாதிரி போ!*

உதய : *அதற்கு நீ தான் உதவ வேண்டும்!*

கலை : *சரி... வா.. பழகின தோஷம்! இரு வருகிறேன்.*

(இளவரசன் மறுபுறம் போகிறான்)

(காட்சி – 15 முடிவு)

காட்சி - 15 (a)

இடம் : ஒரு தோட்டம்

உதய : *மேகலா! மேகலா!*

மேக : *ஆ! இளவரசே!*

உதய : *நான் ஒரு பிச்சைக்காரன். மண்ணாள வேண்டிய வன் மண்பாண்டம் ஏந்தி வந்தேன்... எங்கே அன்புப் பிச்சை! கண்ணே! கண்ணே! மேகலா பார் என் பஞ்சடைந்த கண்களை....*

மேக : *ஆ! இளவரசே!*

உதய : *இல்லை... இன்று உன் காலடியில் கிடக்கும் ஒரு பிச்சைக்காரன் நான்! என் அலங்கோலத்தைப் பார் மேகலா! படபடக்கும் என் உயிரை நன்றாக உற்றுப்பார் மேகலா! உன் நினைவால் வற்றி, வாடி வதங்கி விட்ட எலும்புக் கூட்டுக்குள்ளே, அன்பெனும் பச்சைக்கிளி, சிறகொடிந்த வேதனை யால் துடிதுடிக்கும் பரிதாபத்தைப் பார் மேகலா பார்! உன் செம்மலர்ப் பார்வைக்காகச் சோழ சாம்ராச்சியத்தையே துச்சமாக எண்ணித் துறந்து விட்ட இந்த உண்மைத் துறவியைப் பார் மேகலா பார்! நம்மிலே யார் உண்மையான துறவி? உலகைக் கெடுக்கும் காவியுடையா? உயிரைக் கொல்லும் வைராக்யமா! அல்லது உயர்ந்த அன்புக்காக உலகையே துறந்த நானா! பேசு! மேகலா! பேசு... ஏன் பேசவில்லை? பேசு மேகலா! பேசு! பேசாத உன் மௌனம் என் மரண வேதனையாக முடிந்து விடும்!*

மேக : *இளவரசே! பரிதாபப்படுகிறேன்! போன ஜன்மத்தில் முடியாத பாசம், இந்த ஜன்மத்திலும்*

பற்றி வாட்டுகிறது உங்களை! பாசவலை என் வரையிலும் பற்றி எரிந்து சாம்பலாகி விட்டது.

உதய : சாம்பலைக் கூடப் புதுப் பயிருக்கு உரமாக்கலாம் மேகலா! முயற்சி செய்!

மேக : முடியாத காரியம்! இது ஆறாத சாம்பல்! பாசப் பயிர் எந்த ரூபத்தில் வந்தாலும், அதைப் பஸ்ப மாக்கி விடும். போய் வாருங்கள்...

உதய : அப்படிச் சொல்லாதே கண்ணே! உன் வார்த்தை யால் கொல்லாதே என்னை! வேண்டுமானால் உன் அல்லிக் கரத்தால் என் கழுத்தை நெறித்துக் கொன்றுவிடு கண்ணே!

மேக : ஆண்டவா! இவருக்கு நல்ல அறிவைக் கொடு!

உதய : யாரவன் ஆண்டவன்? அன்பின் போர் வாட்கள் படையெடுத்து மோதும் இந்த மகாயுத்தத்தை ஆண்டவன்கூட மத்யஸ்தம் செய்ய முடியாது! வெற்றி அல்லது வீரமரணம்! இடையில் கடவுள் வந்தால் அவனையும் தூளாக்குவேன்!

மேக : அபசாரம்! ஆண்டவனை இகழாதீர்கள்?

உதய : ஆண்டவன்! அன்புக்குத் தடை போட்டு, ஆருயிரைச் சித்ரவதை செய்யும் கருணையற்ற சாத்தானுக்குத்தான் ஆண்டவன் என்று பெயர் என்றால், அந்த ஆண்டவன் என்ற பொருளே பூண்டற்றுப் போகட்டும்! ஆசை வீணையை மீட்டிவிட்டுப் பாட்டு முடியு முன்னரே, பாசத் தந்தியைத் துண்டு துண்டாக வெட்டி எரியும் வெறிப் பேய்க்குத்தான் கடவுள் என்று பெயர் என்றால், அந்தக் கடவுள் கெட்டழிந்து போகட்டும். ஆண்டவன், கடவுள், அன்பு, கருணை, பாசம், இதயம், உண்மை, சத்தியம் எல்லாம் அர்த்தமற்ற வீண் வார்த்தைகள்! மனிதக் கிளிகள் மனப்பாடம் செய்த சொல் அலங்காரங் கள்! செவிக்குச் சுவையாயும், செயலிலே கசப்பா

யும் வேதனை செய்யும் இந்த வீண் வேதாந்தம் தேவையில்லை கண்ணே! எனக்கு வேண்டுவ தெல்லாம் உனது பவள வாய்ப் புன்னகை! பருவ மலர்ப் புதுமணம்! பளபளக்கும் பார்வை! சுக மினிக்கும் கீதம்! சரசமயில் நாட்டியம்! சலிக்காத சாகரம் போன்ற காதல். அதன் கனிவு வேண்டும் கண்ணே! கனிவு வேண்டும்.

மேக : *பட்டுப்போன மரத்திலே பழம் பறிக்க நினைக் கிறீர்கள்... பேதமை! போய்விடுங்கள்... அண்ணல் அறவண அடிகள் வந்தால்...*

உதய : *வரட்டும் அந்த வறட்டுத் துறவி! காணட்டும் இந்தக் காதல் நாடகத்தை! கருணையில்லாதவன் காவியுடைத் துறவி! காதலின் எதிரி.*

மேக : *இளவரசே போங்கள்!*

உதய : *இந்த இடத்தையே சாம்பல் ஆக்கி விடுவேன்...*

மேக : *எட்டாத பழத்துக்குக் கொட்டாவி வேண்டாம்.. பலமுறை சொல்லிவிட்டேன், உமக்கும் எனக்கும் இப்பிறவியில் இனி எந்தவித உறவும் இருக்க முடியாது! இருக்கவும் கூடாது! உம், நான்கு பேர் வந்தபின், தன் மானம் இழக்கும்முன் தயவுசெய்து போய்விடுங்கள்.*

உதய : *என்ன! மேகலா! மேகலா!*

சுமதி : *மேகலா! என்னம்மா!*

மேக : *நான் போகிறேன். (வெளியேறுகிறாள்)*

உதய : *மேகலா! மேகலா! மேகலா! (அழுகிறான்)*

கலை : *ஹஹ்ஹஹ்... பாவம்... பரதேசி வேஷம் போட்டும் பிரயோசனமில்லே! பார்த்தியா? இந்தக் கல்லிலே இனிமே நார் உரிக்க முடியாதுப்பா முடியாது.. வா போகலாம்!*

(காட்சி – 15 (a) முடிவு)

காட்சி - 15 (b)

இடம் : புத்த மடம்
(மேகலையிடம்)

காயசண்டிகை : என்னம்மா! தியானத்தில் இருக்கிறாயா! ஏன் மௌனம்?

மேக : ஒன்றுமில்லை... உலக பாசத்திலிருந்து நான் தப்பி விட்டேன்... ஆனால்...

காய : அந்த இளவரசன் இன்னும் தப்ப முடியாமல் உன்னை வந்து உபத்திரவம் செய்கிறான் என்று யோசிக்கிறாயா? ஏன் அறவணரிடம் சொல்லி, அரசருக்கு தெரிவித்தால்...

மேக : அரசர் இதை அறிந்தால் மகன் என்றும் பாராமல் மரண தண்டனை விதித்துவிடுவார்... பாவம்!

காய : பாம்பைக் கொல்வது பாபமா?

மேக : எந்த உயிரையும் அழிக்க நமக்கு உரிமை இல்லையம்மா?

காய : எல்லாம் தெரிந்த நீயே. ஒரு யோசனை சொல்லேன்... எத்தனை நாளைக்கு நீ இப்படி துன்பப்படுவாய்?

மேக : அதற்குத்தான் வழி தெரியாமல் திண்டாடுகிறேன்.

காய : ஏன் மேகலா! நீ உருமாறி என்னைப் போலாகி விடேன்.

மேக : எப்படி?

காய : உன் அருளால் என் நோய் தீர்ந்து விட்டது! நானும் என் நாட்டுக்குப் போகிறேன்.. இளவரசன்

வரும்போது என்னைப் போல் நீ உருமாறி இங்கு இரு... அவன் உன்னைக் காணாமல் ஓடிப்போய் விடுவான்.

மேக : ஆம்! நல்ல யோசனை... அப்படியே செய்யலாம்... அப்படியே செய்யலாம்...

காய : அப்போது நான் போய் வரட்டுமா?

அற : என்னம்மா காயசண்டிகை நீ இன்னும் புறப்படவில்லையா?

காய : தந்தையே! பெற்ற தாய் போல் காப்பாற்றினீர்கள்! மேகலையின் தயவால் என் வேதனையும் தீர்ந்தது. நான் போய் வருகிறேன்.

அற : போய் வா தாயே! பார்த்து எச்சரிக்கையாகப் போ! ஏன் உன் கணவன் காஞ்சனன் வந்தபின் போகலாமே!

காய : அவர் கந்தர்வ உலகில் தன்னை மறந்திருப்பார் சுவாமி! நானே புறப்படுகிறேன்....

அற : சரி.... சென்று வாம்மா!

காய : அம்மா! (மாதவியிடம்)

மாதவி : போய் வா அம்மா!

அற : மேகலா! ஏனம்மா தாமதம்? உம்.. உன் பணி தொடங்கட்டும்!

(காட்சி - 15 (b) முடிவு)

காட்சி - 16

இடம் : சித்ராபதி வீட்டின் சாலை

(இளவரசன் உதயகுமாரனுக்குப் பாட்டி சித்ராபதி தூபமிடுகிறான்)

சித்ரா : என்னாங்க இளவரசே! கேட்டீங்களா! விஷயத்தை!

உதய : என்ன?

சித்ரா : அந்த மணிமேகலை இப்போ ஒரு புதுத் தந்திரம் செய்யறாளாம்!

உதய : என்ன அது?

சித்ரா : மணிமேகலை அந்தக் காயசண்டிகை மாதிரி உருமாறி ஊர் சுத்துறாளாம்... எல்லாம் உங்களை ஏமாத்துறத்துக்கு செய்ய மந்திரம் இது!

உதய : யார் சொன்னது?

சித்ரா : என்னாங்க? இதுதானா எனக்குத் தெரியது? அவளுக்குப் பாட்டிதானே நானு! அவளுக்குத் தெரிஞ்ச விஷயத்திலே பாதி கூடவா தெரியாது எனக்கு? ஆகையினாலே புறப்படுங்க. எப்படி யாவது அவளைப் புடிச்சுக்கிட்டு வாங்க! அப்புறம் பேசிக்கலாம்.

உதய : போகிறேன் பாட்டி போகிறேன்!

சித்ரா : போயிட்டு வாங்க... பாவம்...

உதய : பாட்டி! மேகலை மட்டும் கிடைத்தால் இந்த ராஜ்யத்தில் பாதி தருவேன்! (போகிறான்)

சித்ரா : ஊக்கும். அடியேங்க பொண்டாட்டி இல்லை யாம்! இவர் ஆம்பிள்ளைப் புள்ளைக்கு போர்

வைக்குறாரு! சரி சரி போங்க! முதலிலே முதல் வரட்டும்... அப்புறம் வட்டியைப் பத்திப் பேசலாம்...

மாமா : பாவம்! கரும்பை விரும்பி வந்தான்! இரும்பா இருந்தான்! துரும்பா ஆயிட்டான்! திரும்பி வரப் போறானோ? இல்லையோ! - பாவம்! மண்ணாள வேண்டியவன்! பெண்ணாள வந்தான்! கண்ணை இழந்தான்! காவி கட்டிக்கிட்டான்!

(காட்சி - 16 முடிவு)

காட்சி - 17

இடம் : நந்தவனம்

(காயசண்டிகை வேடத்திலிருந்த மேகலையிடம்)

உதய : மேகலா!

மேக : தாங்களா! மறுபடியும் ஏன் வந்தீர்கள்?

உதய : உடலிருக்கும் வரை நிழல் தொடர்ந்து கொண்டே இருக்கும் மேகலா!

மேக : நான் மேகலையில்லை... பார்த்தால் தெரிய வில்லை...

உதய : கண்ணுக்கு நீ காய சண்டிகை! ஆனால், உள்ளுக் குள் நீ தான் என் கண்மணி என்பது நன்றாகத் தெரியும் எனக்கு.

மேக : சரிதான்! இப்படிக் கண்ட பெண்களோடு பேசுவது தான் உங்கள் ராஜகுலத்தின் தர்மம் போலிருக்கிறது?

உதய : *மேகலா! தவறு... காயசண்டிகா! பெயரும் உருவமும் மாறிவிட்டாலும், நீ என் மேகலை தான்!*

(காஞ்சனன் மறைந்திருந்து, பேசுவதை உற்றுக் கேட்கிறான்)

மேக : *மற்றொரு முறை மேகலை என்று கூப்பிடா தீர்கள்... கண் தெரியவில்லை? நான் காய சண்டிகை.*

உதய : *மேகலையின் அழகை உனக்குள் ஒளிய வைத்தி ருக்கும் காயசண்டிகா! கருணை செய். கந்தர்வப் பெண் மாதிரி வேடமிட்டால் போதுமா? காரியத்திலும் அப்படியே இருக்க வேண்டாமா! வா கண்ணே! வா! விரிந்த உன் கூந்தலை வண்டு முரலும் மலரணையாக்குவேன்! சுருண்டு, சுவை யற்று சூன்யமாகிவிட்ட உன் சுந்தர மேனியை ஸ்வர்ண விக்கிரகமாக்குவேன்! வா! காட்டிலும், மேட்டிலும், கடும் துயர் விரதத்திலும் பட்டுத் தளர்ந்து விட்ட உன் உடலைப் பட்டுப்போல் காப்பாற்றுவேன்... வா... போகலாம்! அன்னச் சிறகினும் மென்மையான உன் திருவடிகள் பட்டால், என் அரண்மனை ஆலயமாகி விடும் கண்ணே! வண்ணக் கலவையின் வான ஓவியமே! என் எண்ணக் கலவையை எல்லாம் எடுத்து உன் கன்னங் கருக்கிருட்டுப் பின்னலிலே முடிந்து விட்டாய்! வா கண்ணே! மாறன் கணைகள் மரணத்தின் ஈட்டிகளாக என் மார்பைத் துளைத்துவிட்ட இந்த ரண காயங்களில், பெருக் கெடுத்தோடும் துயர இரத்தத்தை, உன் இன்ப ஸ்பரிசத்தால் குணமாக்கி, என் உயிரைத் திருப்பிக்கொடு. காலில் விழுந்து கெஞ்சுகிறேன்... வா கண்ணல்ல! ஒளியாதே! ஓடாதே! விட மாட்டேன்...*

(காஞ்சனன் வெகுண்டு உதயனின் தலையை வாளால் வெட்டி எறிகிறான்)

உதய : *ஆ!*

மேக : *ஆ! இளவரசே! யார்? காஞ்சனா! நீயா!*

காஞ்ச : *ஆ! மேகலை - தாங்களா!?*

மேக : *உன் மனைவியின் நோய் தீர்த்தமைக்கு நீ செய்த உபகாரம் இது தானா?*

காஞ்ச : *ஐயோ! தாங்கள் காயசண்டிகை என்று நினைத்து விட்டேன் தாயே! ஐயோ! உயிர்க் கொலை!*

மேக : *காஞ்சனா! என்ன செய்தாய்? நிரபராதியான ஒருயிரைக் கொன்று, அநியாயமாகக் கொலைப் பழியைத் தேடிக் கொண்டாயே!*

(சுதமதி வந்து பார்த்து)

சுதமதி : *ஆ! கொலை... கொலை... கொலை...*

(ஓடுகிறாள்)

(ஆசிரமவாசிகள் பலரும் ஒவ்வொருவராக 'கொலை... கொலை' என்று கூச்சலிடுகிறார்கள் - அவ்வாறே தெருக்களிலும் 'ஆ - கொலை - இளவரசர் கொலை' என்று கூச்சலிடும் எதிரொலி கேட்கிறது)

⁕

இதற்குப் பிறகு நடந்த கதை நாமறிந்த ஒன்றுதான்! காதல் சிரித்தது. நகைச்சுவை விம்மியது - கடைசியில் ஓய்வுபெற்றது - கேவலம் ஒரு பெண்ணை நம்பி உயிரை விட்ட உதயகுமாரனைப் பார்த்து உலகம் சிரிக்குமா. அழுமா நீங்களே சொல்லுங்கள்.

ஆம். ஆசை அளவுக்கு மீறினால் அதுவே ஹாஸ்யப் பொருள் ஆகிவிடுகிறது. ஒரு பெண் உடம்பின் அளவைவிட, அதிகமான நகைகளைப் போட்டால், அவளே பெரிய நகைச்சுவைப் பாத்திரமாகி விடுகிறாள். அளவுக்கு மீறினால் அமுதமே நஞ்சாவதுபோல், மனித உள்ளம், கட்டுப்பாட்டை மீறினால் உலகம் சிரிக்கிறது. இந்த நாடகத்தில் நடமாடிய பாத்திரங்கள் மறைந்து பல நூறு வருடங்கள் ஆகிவிட்டன - ஆனால் அவர்கள் உண்டாக்கிய நகைச்சுவைக் காட்சிகள் மறையவில்லை.

தலைவர்கள் ஜாக்கிரதை!

(ஒரு சிறு நாடகம்)

காட்சி - 1

இடம் : கல்லூரிக்கு அருகே ஒரு சாலை

பாத்திரங்கள் : தலைவர் இட்லர்தாசன், பட்லர் நேசன், தலைவி பட்டம்மாள் தேவி மற்றும் சில பரிதாபங்கள்

உள்ளே பல குரல் ஒலிகள்! வாழ்க வளமார் இட்லர்
வானத்திலிருந்து வையகம் வந்த வாள்வலி இட்லர் வாழ்க!
கள்தோன்றி கலயந் தோன்று முன்பே கண் சிவந்து,
முன் தோன்றும் மூத்தபெரும் தலைவா! வாழ்க! விஸ்கி தோன்றி
பிராந்தி தோன்றுமுன் பிஸ்கட் ஏந்தி மஸ்கடியார் போல்
வாழ்ந்த மனிதா! போற்றியே போற்றி, அடியே போற்றி!

இட்லர்தாசன் : *நண்பா! பட்லர்! கேட்டாயா மக்கள் குரலை இம்முறை நான் எப்படியும் சரித்திர நாயகனாகியே தீரவேணும்.*

பட்லர் : *அட என் அருமை இட்லர்! அஞ்சாதே ஏற்கெனவே நீ நாயகன் தானடா!*

இட்லர் : *எப்படி?*

பட்லர் : *நீதான் வீட்டில் நிறைய நாய்களை வளர்க்கி றாயே! ஆகையால் நீதான் நாய்அகன்.*

இட்லர் : *அதுவல்ல தம்பி! நான் பெரிய தலைவனா கணும்டா.*

பட்லர் : *நீ, இப்பவே பெரிய தலைவன்தானடா...*

இட்லர் : *அப்படியா....*

பட்லர் : ஆமாம், உனக்கு பெரிய தலை இருக்கு! ஆகையாலே நீ பெரிய தலைவன்தான். அதுவும் பிறவித் தலைவன்.

இட்லர் : அதில்லே, என்னை ஒரு ஜீனியஸ் என்று இந்த உலகம் சொல்லணும்டா.

பட்லர் : நீ ஜீனியஸ்தாண்டா. நிறைய சீனி சர்க்கரை சாப்பிடுறே ஆகையாலே நீ ஜீனியஸ்தான்!

இட்லர் : நான் ஒரு காவியத் தலைவன் ஆகணும்.

பட்லர் : இது ரொம்ப சுலபம்! காவிக் கலரிலே டிரஸ் பண்ணிக்கோ! காவியத் தலைவன் ஆயிடுவே.

இட்லர் : பாரோர் புகழும் ஈரோ ஆவணும்.

பட்லர் : அடிக்கடி யாரையாவது கேரோ பண்ணு. உடனே ஈரோ ஆயிடுவே. இல்லே ஏதாவது ஒரு ஓடாத படத்திலே ஓடி விளையாடி ஹீரோ ஆக்ட் பண்ணு ஜீரோ. நீ ஒரு நீரோ.

இட்லர் : யாரும் எட்ட முடியாதபடி பட்டங்கள் பதவிகள் இரண்டும் வரணும்.

பட்லர் : அதுகள் எல்லாம் ரொம்ப ரொம்ப சுலபங்கள்! ஒரே ஒரு ரூபாய்க்கு ஒரு பட்டம் வாங்கு; ரெண்டு ரூபாய்க்கு நூல் வாங்கு. ஆடிக் காத்திலே பட்டத்தை விட்டு, நூலை அறுத்துவிடு. உன் பட்டத்தை யாருமே எட்ட முடியாது.

இட்லர் : நண்பா பட்லர்..! நான் எப்படியும் நாடு போற்றும் தலைவனாகியே தீரவேணும். இது என் அறிவின் களிப்பு! ஆசையின் அழைப்பு! காலத்தின் தீர்ப்பு! என் பெயர் கொட்டை எழுத்திலே பத்திரிகை யிலே அடிபடணும்! நாட்டிலே தலைவர்களுக்கு ஏகப்பட்ட பஞ்சம் வந்து விட்டது. தலைவர் பஞ்சத்தைத் தீர்க்கவே நான் தலைவனாய்ப் பிறந்துள்ளேன். பத்திரிகைகள் என் பெயரைக் கண்டு பயப்படணும்.

பட்லர் : பத்திரிகை என்ன! இருபது அடி போஸ்டரே அடித்து தூள் பரப்பலாம்! அட என் போஸ்டர் தலைவா! உன்னை நான், மாஸ்டர் தலைவனாக்கு வேன்!

இட்லர் : மேலும் ஒரு அருமையான பிளான் போட்டி ருக்கேன்.

பட்லர் : செய்யப்பா செய்! நம்ம சோனாச்சலம் வேறே தேர்தல்ல நிக்கப் போறாரு. அவருக்கு உதவி செய்யறதா நீ வாக்கு கொடுத்திருக்கிறே!

இட்லர் : வாக்கு கொடுத்தா என்ன? கொடுத்த வார்த்தையை எடுத்துச் சாப்பிடுவதுதான் அரசியல் உலகில் முன்னேறுவதற்குரிய அடிப் படைத் தகுதி!

பட்லர் : சபாஷ்! அசல் அரசியல் வியாபாரி ஆயிட்டே. எப்படியோ உன் பிளான் ஏரோப்பிளான் வேகத்திலே போகட்டும். ஆனா, நடுவழியிலே பெட்ரோல் இல்லாம போயிடக் கூடாது. உலைக்காமே புகல் எடுக்கணும்னா மலைக்காம ஒரு புதுப்போர்முனையை துவக்கணும். புதிய இட்லர் ஆகணும். ஜனங்களை பயமுறுத்தணும். ஒரு இயக்கம் வேணும். அப்பத்தான் மக்களுக்கு அரசியல் மயக்கம் வரும்.

இட்லர் : இயக்கம்! ஐடியா.. ஒரு நல்ல பெயராச் சொல்லு.

பட்லர் : பலமை ஒலிப்பு இயக்கம்! இன்னு வச்சிட்டா என்ன.

இட்லர் : ரொம்ப பழசா இருக்கே!

பட்லர் : பேர் பலசு. செயல் புதுசு. அதாவது மத்தவங்க இருக்குன்னு சொல்றதை நாம் இல்லேண்ணு சொல்லணும். உடனே மக்கல் மந்தை நம்மைத் திரும்பிப் பார்க்கும். இந்த மக்கல் செம்மறியாட்டு மந்தைகல். நாம்தான் அதைக் காக்கும் காவல்

புலிகள் எப்பவுமே புதுக் கூச்சலைக் கேட்டா மக்கலுக்கு ஒரு சபலம்! அதுதான் நம்ம பலம்! மத்தவங்களை தாக்கிப் பேசுனா மகில்ச்சியோடு மாலை போடுவாங்க கை தட்டுவாங்க.. காசு தருவாங்க.. காலைப் புடிப்பாங்க. என்னா சொல்றே? பலமை ஒலிப்புப் போர் முனைன்னு பேர் வைக்கட்டுமா?

இட்லர் : பலமை ஒலிப்புப் போர்முனை. பிரமாதம். சிறுமலை வாழைப்பழம் மாதிரி சும்மா, அப்படி கமாகமான்னு மணக்குது. கேக்கும்போதே இனிக்குது. சுத்த வலவலா கொல கொலான்னு இல்லாமே, பல பலா சிலுசிலு குலுகுலுன்னு இருக்குது இல்லே?

பட்லர் : ஆமாம். இந்தக் கொல்கைப்படி நடந்தா பலமை யான பலக்க வலக்கங்களை ஒலிச்சுப்பிடலாம். கலையையும் வலத்து புடலாம். எதுத்துப் பேசறவங்கலை கில்லிப் போட்டுடலாம். கில்லி! இல்லை? நம் கொல்கை வால்க!

இட்லர் : அடே பட்லர்! அதோ பார். மறுபடியும் அந்த பட்டு மாமி முகத்தை நீட்டிக்கிட்டு வர்ரா!

பட்லர் : ஆம்; இக்கால இராமனாகிய உன்னைத் தேடி அந்த சூர்ப்பணங்கை வர்ரா...

இட்லர் : நோ.. நோ... இந்த அர்ச்சுனனைத் தேடி அல்லி ராணி வர்ரா...

பட்லர் : பவளக் கொடின்னு சொல்லுடா!

இட்லர் : இல்லை 'பச்சைக் கொடி' காதலின் கிரீன் சிக்னல் வருது டோய்...

பட்லர் : ஆசையப்பாரு! அவகிட்ட நான் பேசறேன், கொஞ்ச நாலா அவன் நம்மலையே சுத்திகிட்டி ருக்கால் (பட்டு வந்ததும்) வாய்யா பட்டு.. வா நல்லாயிருக்கயா...? உடம்பு எப்படிடா இருக்குது மேன்?

பட்டு : சீ..., யாரைப் பார்த்து மேன் மீன், அய்யா பய்யாங்கறே.

பட்லர் : கோவிச்சுக்காதேப்பா. நீதான் ஆம்பிள்ளை விட தைரியசாலியாச்சா. அதனாலே அய்ய இன்னேன்!

பட்டு : ஷட்-அப் You Perfect Fool உன்னைப் பார்த்தது தங்கையேயென்று கூப்பிடனும் போல இருக் அட தங்காய் You a feminine man of foolish breed.

இட்லர் : பட்டு! ஏன் இப்படி காக்கா மாதிரிக் கத்தறே கழுகு மாதிரி வட்டம் போட்டு எங்களை சுத்தி கிட்டே இருக்கே!

பட்டு : வேண்டாத பொருளை அகற்றி சுத்தப்படுத்த வரைக்கும் கழுகு அப்படித்தான் வட்ட போடும். ஏன் இன்னும் இங்கேயே நிக்கிறீங் பெண்கள் ஹாஸ்டல் பக்கம் உங்களுக்கு என் வேலை?

பட்லர் : பட்டு! நாங்கள் ஒரு புதியதொரு போ முனையை ஸ்டாட் பண்ணியிருக்கோம்.

பட்டு : நீங்களா? போர்முனையா? என்ன இட்லிப் போ முனையா? தோசைப் போர்க்களமா?

பட்லர் : ஆ! இட்லி! பிரியாணி! புது ஐடியா! கவர்ச் கரமான கருத்து. இட்லிப் போர். அப்புற இப்போ இட்லர் போர்முனை. நீங்கள் கூ நம்மல்கூட சேர்ந்திடுங்க. இட்லர் இட் தின்பதை சாவகாசமாக நடத்துவோம். முதலி எதிரிகளை நசுக்கும் போர். எல்லாருமா சேர்ந் புசிக்கும் போர். புது உலகத்துக்கு வ காட்டிகளா இருக்கலாம்.

பட்டு : புது உலகத்துக்கு வழிகாட்ட வேணுமானா புதிய போர்முனை தேவை இல்லை. அல்லல்படு

மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபட்டாலே போதும்.

பட்லர் : அப்படின்னா என்ன அருத்தம்?

பட்டு : இப்படிச் சும்மா சோம்பேறித்தனமா, ஊர் சுத்தறதை விட்டுட்டு, சுறுசுறுப்பா உழைக்கணும்னு அர்த்தம்.

பட்லர் : ரொம்ப மோசமான காரியம் செய்யச் சொல்றே. யாரைப் பார்த்து உலைக்கச் சொல்றே? நாங்க யாரு? நாடாளும் பரம்பரை! நாங்க உலைக்கிறதா? எங்க பரம்பரையையே மறந்து பேசறே! முரட்டு வேந்தர் வலி வந்தவர்கள், எங்க முகத்தைப் பார்த்தா வேலை செய்யச் சொல்றே.

பட்லர் : உலைக்காம நோகாம உக்காந்து சாப்பிடற உயர்ந்த பாரம்பரியம் நாங்கள். வீரர்வலி வந்தவங்க.

இட்லர் : எஸ். யாரைப் பார்த்து உழைக்கச் சொல்றே? இந்த அணுகுண்டு யுகத்திலே, ராக்கட் காலத்திலே, ஸ்புட்னிக் யுகத்திலே, ஒரு பெண் பேதை பேசற பேச்சா இது! சே! பிற்போக் காளியே! பழம் பஞ்சாங்கமே! சீமான் சிறு தொழில் புரிவதா! சே, வீரன் வேலை செய்வதா? பழமையானது, கோழைத்தனமானது. ஏய்! குள்ள நரிக் குணத்தாளே! கொள்கையில்லாத குட்டிச் சாத்தானே! குலைக்காதே! எங்க தலைமையின் மதிப்பைக் குறைக்காதே - நான் யார்? சேரனின் பேரன், சோழனின் தோழன். பாண்டியனுக்கு வேண்டியவன். பல்லவனுக்கு வல்லவன். இந்தக் காளையைப் பார்த்தா குற்றேவல் புரியச் சொல்லுகிறாய்!

பட்லர் : பாவம்! புரியவில்லை. நம்மல் கொள்கை அதுவல்ல! உலைப்பது மத்தவங்க வேலை. பலமையை

ஒலிச்சுட்டு புதுமையை வலக்கிறது, அதாவது வேரைப் புடிங்கிட்டு செடியை வலக்கிறது. சுவரை இடிச்சுட்டு சுண்ணாம்பு அடிக்கிறது! ஏரோப்பிளான் இல்லாலே ஏர்லே மிதப்பது. ராக்கட் இல்லாமலே சந்திரனுக்குப் போறது! இது எங்க திட்டம், புதுமை! போற்றடி என் பொங்கல் கரும்பே!

பட்டு : போதும் போதும்... நீங்கள் புதுமை வளர்க்கும் இலட்சணம். இப்படிப் புதுமை செய்தால், இந்தப் பூமி தாங்காது. தோழனே தாங்காது.

பட்லர் : பட்டு, இப்போ நீ என்ன சொல்றே? பலமை ஒலிய வோணுமா வோணாமா!

பட்டு : எதை ஒழிக்கப் போகிறீர்கள்? ஒழிப்பதற்கா நம்ம நாட்டில் என்ன இருக்கிறது? மனித சரித்திரத்தின் பழமையில் இருந்துதானே உலக வளர்ச்சியை நாம் கூர்ந்து பார்க்க முடிகிறது. அதை ஒழிக்கும் படியாக நீங்கள் அடைந்துவிட்ட புதுப்பெருமை தான் என்னவென்று சொல்ல முடியுமா? அறிவைப் பயன்படுத்திச் சிந்தியுங்கள். உங்களைப் போன்ற மகாபுத்திசாலிகளை இனி இந்த நாட்டு மக்கள் நம்ப மாட்டார்கள். வீண் முயற்சியில் உங்கள் பொன்னான வாழ்க்கையைப் பாழ் படுத்திக் கொள்ளாதீர்கள். மேலும் மாணவர் களுக்காகப் பேசுவதற்கு நீங்கள் யார்? நீங்கள் மாணவர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. முன்னாள் மாணவர்கள். மாஜிமுன்ன வர்கள். பயிலும் பருவத்தைக் கடந்துவிட்ட வர்கள். தோற்றோரியற் கல்லூரியிலும் தோற்றுப் போனவர்கள், அறிவியலுக்கே வேற்றார்கள், மதியிழந்த மாற்றலர்கள்! மாணவரின் கூற்று வர்கள்!

இட்லர் : பேசு! பேசு! வெற்றியும் தோல்வியும் வீரருக்கு ஒன்றுதான். மேலும் நாங்கள் மாணவர்கள்

இல்லையென்பது குற்றம்! மனிதர்கள் சாகும் வரை மாணவர்கள்தான் என்று ஒரு சேஷப் பய்யர் கூறியிருக்கிறார்.

பட்டு : அது யார் சேஷப்பய்யர்.

இட்லர் : அவர்தான் கும்பகோணத்திற்குப் பக்கத்தில் காவேரிக்கரை கிராமத்தில் பிறந்து இங்கி லாந்திக்குப் போய் நாடகம் எழுதினார், சேஷப் பய்யர், ஷேக்ஸ்பியரானார். ஜெகப் பிரசித்தி பெற்றார். இது நம்ம ஆராய்ச்சி.

பட்டு : ஓகோ அப்படிச் சொல்லுதா உங்க ஆராய்ச்சி! இதோ நம்ம ஆராய்ச்சியைச் சொல்றேன் கேளு. போன . ஜன்மத்திலே அந்த ஷேக்ஸ்பியர் தோட்டத்திலே புகுந்து பழத்தை திருடின ரெண்டு கழுதைகள்தான் இந்த ஜன்மத்திலே இங்கே இப்படி இரட்டையர்களாகி அரட்டை அடிக்கின்றனவாம்! எப்படி இந்த ஆராய்ச்சி! உன் ஆராய்ச்சியிலே இடிவிழ! அது போகட்டும். இந்தக் கல்லூரிக்கும் உங்களுக்கும் என்ன சம்பந்தம்.

இட்லர் : எங்கெங்கே அதர்மம் குறைந்து தர்மம் தழைக் கிறதோ அங்கெல்லாம் தோன்றி கலவரம் செய்து குழப்பத்தை உண்டாக்கவே கடவுள் எம்மைப் படைத்துவிட்டான்.

பட்லர் : நாங்கள் எடுத்த கொள்கையை கைவிட மாட்டோம். இடது காலை எடுத்து முன்வச்சுட் டோம். இப்போ எப்படி பின் வாங்கிறது! நாங்க தான் வீரர்களாச்சே! முன்வச்சக் காலை பின் வைக்க மாட்டோம்.

இட்லர் : ஆமாம், மாட்டோம், மாட்டவே மாட்டோம்.

பட்டு : இரண்டு பைத்தியங்களுக்காக உலகம் மாறி விடாது மனிதா!

இட்லர் : அநியாயம் - என்ன எங்களைப் பார்த்து மனி தான்னு சொல்லிப்புட்டா.

பட்டு : மன்னிக்கவும்; மறந்து மனிதா என்று கூறி விட்டேன். இரண்டு பூனைக் குட்டிகளுக்காக பகல் இருட்டாகி விடாது மனிதா!

பட்லர் : நாங்கள் - பூனைகள் அல்ல - புலிகள் - பூதங்கள் அல்ல - வாதங்கள்! நான் சொல்வது வேதங்கள்! புரிந்துகொள்ள ஆகும் பல மாதங்கள்! நீ யார்? ஆப்டர் ஆல், நீ ஒரு கட்லெட் சமைக்கும் காரிகை! நாரியர் குலத்துப் பேரிகை! யாம் யார்? வீரர் பரம்பரை! புதுவுலகத்தைச் சமைப்போம். பழையதைச் சாப்பிடுவோம்.

பட்டு : புது உலகை உங்களால் சமைக்கவும் சாப்பிடவும் முடியாது. கொலைஞன் நீதிபதியாக முடியாது, பொய்யன் அருட்பாவின் பொருளை உணர முடியாது. கள் உண்பவன் காந்தியத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

இட்லர் : ஏன் முடியாது? இந்த உடம்பே ஒரு மாமிச மலைதானே! அதில் தஞ்சாவூர் கதம்பம் தள தளன்னு மணம் வீசவில்லையா தையலே? அதைப்போல் நாங்களும்கூட நல்லவராக முடியும்.

பட்டு : உங்கள் பேச்சு இந்த நாட்டின் புனிதமான வரலாற்றையே அவமானப்படுத்துவது போல் தெரிகிறது.

இட்லர் : நண்பா! காரிகை என்று எண்ணினோம். இது சரியான காக்கை! கரைகிறது. நாரீமணி என்றோம், நரிமணி போல் ஊளையிடுகிறது!

பட்டு : உம் கிடக்கிறாள். தோழா! ஆப்டர் ஆல் நம்ப பட்டு மாமி. சிட்டு மாதிரிக் கத்துகிறாள். கத்தட்டும். நீ உன் பூகம்பப் பிரசங்கத்தைத்

துவக்கு! பேச்சுப் புழுதியை வாரி இறை! இந்த உலகம் கண்மூடிக் கொள்ளட்டும்.

(அங்கே கூடியிருந்தவர்களுக்கும் புறப்பட்ட சிலருக்கும்)

இட்லர் : வீரர்களே! வீரிகளே! இருபால் தோழர்களே! ஸ்ட்ரைக்! மாஜி மாணவ உலகத்துக்கே ஒரு ஜீவாதாரமான உரிமை! ஸ்ட்ரைக் என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'அடி' என்று அர்த்தம். ஆம் பழமைக்கு நாம் கொடுக்கும். முரட்டு அடிதான் ஸ்ட்ரைக்காக மலர்ந்துள்ளது.

பட்லர் : ஆமாம்! படிக்காத மாணவனுக்கு சைபர் வாங்க எவ்வளவு உரிமையுண்டோ நமக்குப் பிடிக்காத ஆசிரியருக்கு வினோதப் பெயர்களை வைப்ப தற்கு எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு உரிமை ஸ்ட்ரைக் செய்வதற்கும் உண்டு.

இட்லர் : ஆம்! குளிக்காத முகத்தில் கூடப் பவுடர் தடவலாம்.

பட்லர் : ஆம்! பல் விளக்காத வாயிலேகூட, காபி குடிக்கலாம். இது காபி சுதந்திரம்.

இட்லர் : சாப்பாடு இல்லாதபோது கூட, சிகரெட் பிடிக்கலாம். இது புகை விடுதலை.

பட்லர் : காரணம் இல்லாமலே ஸ்ட்ரைக் செய்யலாம்.

இட்லர் : பெண் இல்லாமலே காதலிக்கலாம். இந்த அடிப்படை உரிமைக்கு மக்குகள் கூடப் பாடு படலாம்.

பட்லர் : என்னுடைய உடன்பிறப்புகளே! மாணவர்களே மாணவிகளே; தோலர்களே! தோலியர்களே! கூர்ந்து கவனியுங்கள். ஒரு அடிப்படை உரிமைப் பிரச்னை! ஒரு வாரத்திற்கு முன்னால், ஒரு பெண் மாணவியின் தலையிலிருந்து ரோஜாப் பூவை

பின்பெஞ்சுமேல் அமர்ந்தபடி ஒரு பிஞ்சு மாணவன் கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டான் என்பதற்காக ஒரு கல்லூரி முதல்வர் அஞ்சு ரூபாய் அபராதம் போட்டார்.

இட்லர் : நான் கேட்கிறேன். அந்தப் பஞ்சை மாணவன் செய்த குற்றமென்ன? அவன் அந்தப் பெண் தலையில் சூடிய ரோஜாப் பூவைச் சாப்பிட்டானேயன்றி, பெண்ணையா சாப்பிட்டான்? இல்லையே? ஆகவே தோழர்களே, இங்கே கள் குடிப்பது தவறு என்பது போல, ரோஜாப்பூ சாப்பிடுவது குற்றமா? இது மட்டுமல்ல நண்பர்களே!

பட்லர் : பெண் மாணவிகளைக் கண்டால் விலகி நடக்க வேண்டுமென்று பிரின்ஸ்பால் பேசுகிறார்! சிந்தனையிருந்தால் அவர் இப்படிப் பேசியிருப்பாரா? துஷ்டனைக் கண்டால் தூர விலகு என்பதுதான் பழமொழி! ஆனால், இங்கே இந்தக் காலேஜிலே பெண் மாணவிகளைக் கண்டால் ஆண் மாணவர்கள் தூர விலக வேண்டுமென்று உத்தரவு! அப்படியானால் நமது பெண் மாணவிகள் எல்லாம் துஷ்டர்களா! பயங்கரி களா; பத்ரகாளிகளா? என்று முதல்வர் நினைக்கிறார்களா?

இட்லர் : ஆம்! நாங்கள் பத்ரகாளிகள் தான்!

பட்லர் : ஆ! காலி! காலி! அப்படின்னா நான் காளிதாசன்!

இட்லர் : ஆம்! காளிதான்! உம்மைப் போன்ற காலிகளை அப்போதுதான் ஒடுக்கி விரட்ட முடியும்.

பட்லர் : ஆ! மிஸ் காளி! சவாலே சமாளி படம் பார்த்திருக்கியா?

இட்லர் : இப்போதெல்லாம் பெண்களைக் கண்டு ஆண்கள் விலகிப்போனால், அந்த ஆண்களைக் கண்ட பெண்கள், ஆப்ரிக்க நாட்டு ஹிப்போ பொடமஸ் எருமைகளைப் பார்ப்பது போல் பார்க்கிறார்கள். இன்றைய நியதிப்படி பெண்ணும், ஆணும், எருமைப் பால் காபியையே குடிப்பதால், இருவரும் ஒருவரைப் பார்த்து இன்னொருவர் விலக மாட்டார்கள். விலகக் கூடாது. இது பால் உரிமை! விலக முடியாது.

பெண் : வெல்செட்! கேளுங்கள். கேளுங்கள்.

இட்லர் : மேலும் பெண் மாணவிகளைப் பார்த்து சிரித்தோமென்று அபராதம் போடுகிறார் பிரின்ஸ்பால்! மனிதனுக்குத்தான் கடவுளின் படைப்புகளிலேயே சிரிக்கத் தெரியும் என்பது மாபெரும் அறிஞர்கள் முடிவு செய்துள்ளார்கள். ஆனால், அந்தச் சிரிப்புக்கு இங்கே தடை! இளமையின் எழுச்சிக்கு எதிர்ப்பு! என்ன நினைத்துக் கொண்டார் கல்லூரித் தலைவர்? சகிக்க முடியாத கோரம்; வயதானவர்; வாலிபத்துக்குத் தரும் தூக்குத் தண்டனை; பெண் மாணவிகளைப் பார்த்து, ஆண் மாணவர்கள் ஒப்பாரி வைத்து அழவேண்டுமென்று நினைக்கிறாரா தலைவர்? தர்க்க ரீதியாகக் கேட்கிறோம்! தருவாரா பதில்?

பட்லர் : ஐயோ - ஐயோ - ஐடியா மன்னன் - அறிவு மழை; அய்யோ! கை தட்டுங்கள், கரவொலி எலுப்புங்கள். கையைப் படைத்தவர்களே! கையைத் தட்டுங்கள். வாயிருப்பவர்களே, விசில் அடியுங்கள்! இன்னா பேச்சு! இன்னா பேச்சு! பேச்சுன்னா இதுன்னா பேச்சு.

இட்லர் : சரி. இனி நீ பேசு - மூச்சு வாங்குது ஆ - சோடா! வெறும் சோடா கூடவா இல்லை? ஆகா

உங்களுக்கு உழைக்கும் தலைவனுக்கு இது கூடவா இல்லை! சரி தலைவா தியாகம் செய் - ஆ என் சோடாத் தியாகியே சொல்லடா மேலே -

பட்லர் : மற்றுமொரு நண்பன் நடுவகுப்பில் குயில் போலக் கத்தினான் என்பதற்காக நான் கட்டிய அபராதம் பத்து ரூபாய். சினிமாவில் கதாநாயகன் உக்கிரமாகப் பேசும்போது, பின்னணியில் ஏதாவது வாத்தியங்கள் வாசித்து, அதற்கு இன்னும் அழுத்தம் தருகிறார்கள் அல்லவா! அது போலவே எனது நண்பன் பேராசிரியரின் இயற்கையான பாட விலக்கப் பேருரைக்கு ஏற்றதொரு பின்னணி இசை கட்டுவதற்காகக் குருவி போல 'கீ... கீ' என்று பாடினான். அது புரியவில்லை அந்த ரசனையற்ற பாவிகட்கு. அந்தத் தலைவருக்கு இசை பிடிக்காது, சிரிப்புப் பிடிக்காது, பெண் பிடிக்காது. பின் எதுதான் பிடிக்கும்?

இட்லர் : இதோடு கொடுமை நின்றதா! பெண்கள் ஹாஸ்டலுக்குள் போக மாணவர்களுக்கு உரிமை வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்கள் பட்டாசுக் கட்டைக் கொளுத்தி, அந்த ஹாஸ்டல் காம்பவுண்டுக்குள் போட்டார்கள் என்று சிலரை டிஸ்மிஸ் செய்து விட்டார். இன்று மாணவர் களுக்கு வந்தது நாளை மாணவிகளான உங்களுக் குந்தானே வரும். உங்களுக்காக உரிமைக்குரல் கொடுக்க வேறு யாரிருக்கிறார்கள் எங்களைத் தவிர; வாழ்க மாணவ சுயாட்சி வாழ்க!

பட்லர் : ஒருநாள் ஹாஸ்டலில் போன வாரம் செய்த ஹல்வா நன்றா இல்லை என்பதற்காக வந்த ஹல்வாவை வார்டனும் பிரின்ஸ்பாலும் சாப்பிட வேண்டுமென்று நாலு நாள் தனியே பொட்டலம் கட்டி வைத்து, ஐந்தாம் நாள், மாணவர் சார்பில் அவர்களிடம் எடுத்துச் சென்றேனல்லவா!

அதற்காகக் கூட்டு அபராதம் போட்டார்கள். மேலும் சொல்லுவேன்.

இட்லர் : நானும் சொல்லுவேன். கல்லூரி மாணவர்களுக்கு பரீட்சை எதுக்கு? ஆரம்ப ஒண்ணாம் கிளாஸ் பள்ளிக்கூடங்களிலே கூட பரீட்சை வைத்துத் தான் 'பாஸ்' போடுகிறார்கள். பள்ளிக்கூடங் களிலே போடக் கையாளும் முறையை, அறிவும் வயதும் வந்தவர்கள் படிக்கும் கலாசாலை வகுப்புகளிலும் கையாலுவது நீதியா?

பட்லர் : இருபது வயது வந்த ஒருவன் புட்டியில் பால் அருந்துவதை ஒக்கும் என்றேன்! இப்படிப் பலப்பல சிந்தனை முத்துக்களை அல்லித் தெலித்தேன். அதற்காக என்னை டிஸ்மிஸ் செய்து விட்டாராம். கட்டிய சம்பலப் பணத்தை திருப்பிக் கொடு என்று கருத்து முழக்கம் செய்ததற்கு, எனக்கு கிடைத்த தியாகத் தலும்பு 'டிஸ்மிஸ் ஆர்டர்' ஒரு பெரிய அலும்பு! மீறி விட்டது வரம்பு! துடிக்கிறது நரம்பு! தலைவரின் மனமோ இரும்பு! அதைச் செய்திடுவேன் கரும்பு!

இட்லர் : இனிமேல் உலகத்தில் காலேஜ்கள் ஏற்பட்டால், அவைகல் பிரின்ஸ்பால் இல்லாதவைகளாக இருக்க வேண்டும்.

பட்லர் : ஆகவே சொல்லுங்கள். என்னையும் தலைவர் இட்லர் தாசனையும் சங்கத்திலிருந்து டிஸ்மிஸ் செய்ததற்காக ஸ்ட்ரைக்! பரீட்சைகள் ஒழிவதற் காக ஸ்ட்ரைக் - அதாவது அடி - அவர்கள் அதி காரத்திலே அடி ஆதிக்கத்திலே இடி - பலமை யின் காலை ஒடி. உன் பிரசங்கக் காகிதத்தை மடி - பேச்சை முடி.

பட்டு : இல்லை. இது அநியாயம். நடக்க முடியாது. நடக்கவிட மாட்டேன். கல்லூரியின் நல்ல பெயரை பாதிக்கும் முயற்சி இது. இதை நான் எதிர்க்கிறேன். ஸ்ட்ரைக் செய்யக் கூடாது.

பட்லர் : எதிர்க்காதே! நாங்கள் புயல்! பூகம்பம்! நீ ஒரு புதிய பூஞ்செடி. உஸ் என்று ஊதிவிடுவோம்.

பட்டு : உஸ். பேசாதே நீ ஒரு பைத்தியம்! கோயில் பெருச்சாளி! நல்லவர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள். எரி நட்சத்திரங்கள் வானத்திலிருந்து வீழ்கின்றன என்பதற்காக, சூரியனும் சந்திரனும் வீழ்ந்துவிட வேண்டும் என்று நினைக்கிறீர்களா? நரிகளுக்கும், நாய்களுக்கும் பயந்து நல்லதொரு நாதக்குயில் ஓடிவிட வேண்டுமென விரும்புகிறீர்களா! ஊளையிடும் ஓநாய்கள் ஒளியை விரும்பாத ஆந்தைகள் - இவைகளுக்காக உதயசூரியன் உதிக்காமலிருக்க வேண்டுமென்கிறார்கள் இந்தப் புதிய உபதேசிகள்! அம்மாவுக்கு வயதாகி விட்டால் அம்மாவைப் பழமை என்று மறக்கச் சொல்லுகிறார்கள் இந்த அதிகப் பிரசங்கிகள். பட்டமரத்தை வெட்டினால் பழ மரங்களையும் வெட்ட வேண்டுமென்று தெளிவுரை தரும் கிறுக்குவாதிகள்! நீங்களே சொல்லுங்கள் நாம் இங்கே வந்தது அறிவை வளர்த்துக் கொண்டு எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்குவதற்காகவா? அல்லது நாச வேலைகளில் எல்லாம் ஈடுபட்டுக் கல்வி நிலையத்தை களங்கப் படுத்துவதற்காகவா? பொன்னெடுக்க வந்தோம். பூநாகம் பிடிக்கச் சொல்லுகிறார்கள். சந்தனத்திற்குப் பதிலாக சேற்றையா எடுத்துப் பூசுவது? மூடத் தனத்தினால் மொட்டைத் தலையர்கள், முடி மன்னர்கள் ஆக முடியாது. பெட்ரோலில் குளிப்பதால் உடல் களைப்பு தீர்ந்துவிடாது. தலை நரைத்து விட்டது என்பதற்காக தார் எண்ணெயைப் பூசுவது முட்டாள்தனம்.

இட்லர் : தலைமுடிக்கும் - தார் எண்ணைக்கும் என்ன சம்பந்தம்! ஊசிப்போன உவமை! ஓய்ந்துபோன பழமை; நான் சொன்னபடி கேளுங்கள். உம்

கத்துங்கள்! கல்லூரி வேண்டாம். காதலே வேண்டும். உம் ஏந்துங்கள் புரட்சிக் கொடிகளை! மானமுள்ள மலர்க்கொடிகளே! உம் புறப்படு. மாணவ சுயாட்சி வேண்டும்.

பட்டு : பார்த்தீர்களா! இந்த இட்லர் உங்களுக்குத் தீராத இன்னல் தர எண்ணுகிறார். வகுப்புக்குப் போக வேண்டாமென்று வீர முழக்கம் செய்கிறார். தான் கெட்ட குரங்கு வனத்தையே கெடுத்த கதையைப் போல, தங்களுக்கு வரும் கஷ்ட நஷ்டங்களுக்கெல்லாம் ஈடு கொடுத்துக் கொண்டு வயிற்றை ஒடுக்கி வசதிகளைச் சுருக்கி நம்மைப் பெற்றவர்கள் அனுப்பிய பணத்தை எல்லாம் சிங்காரச் சிந்து விளையாடித் தொலைத்துவிட்ட புத்திமான், உங்களை தனக்காக போராடச் சொல்லுகிறார். குளத்திலே உள்ள பாசிக்காக தாமரைக் கொடியைப் பிடுங்கி எறியுங்கள் என்கிறார். இதுதான் புரட்சியா? நல்ல நம் நாட்டிலே நாச வேலைகள் பெருகி விட்டன. அறிவுப் பீடத்திலே அக்ரமங்கள் குவிந்து விட்டன. ஆசிரியர்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று மாணவர்கள் சட்டமியற்றும் புதிய ஜனநாயகம் தோன்றி இருக்கிறது.

இட்லர் : ஆகா! குலத்தைக் கெடுக்கிறது கோடாரிக் காம்பு! நம் கையே நம் கண்ணைக் குத்துகிறது. அடே! ஐந்தாம் படையே? ஏடி! எட்டப்பன் வாரிசே! காட்டிக் கொடுக்கும் கருங்காலியே! ஸ்ட்ரைக் எமது பிறப்புரிமை. அதை மறுப்பதோ உன் பெருமை! பொறுப்பது இனி அருமை! நீ பேசுவது சிறுமை! உன் அறிவிலே வறுமை! தோலர்களே! வாருங்கள் வரிசையற்ற ஆசிரியர் களை வலிமையாக எதிர்ப்போம்.

பட்டு : நில்லுங்கள். யார் யாரை எதிர்ப்பது? நமது முகத்தை நமக்குக் காட்டும் கண்ணாடியை

உடைப்பவன், நல்லதொரு பைத்தியக்காரனே தவிர புத்திசாலி ஆகமாட்டான்! கல்வி தரும் ஆசிரியரை எதிர்ப்பது குறும்புத்தனம். காவிரித் தோப்பிலே முளைத்த காளான்கள், பழ மரத்தின் உயரத்தை அளக்க முயன்றது போல், இந்த மகா புத்திசாலிகள் ஆசிரியர்களையே எதிர்க்க ஆரம்பித்து விட்டனர். ஆலமரத்தில் வசிக்கும் வண்ணப் பசுங் கிளிகளுக்குத் தாலாட்டுப் பாடுவதாக எண்ணி, நள்ளிரவில் வந்து அலறும் ஆந்தைக் கூட்டம் போல, இந்த அதிமேதாவிகள் நமக்கு அறிவுரை புகல ஆரம்பித்து விட்டார்கள். பத்து வயதுக் குழந்தை பெற்ற தாய்க்கே பாடம் போதிப்பதைப் போன்ற வேடிக்கை! ஏ மனிதா - நீ நல்ல குடும்பத்தில் பிறந்தவன். நாச வழியில் இறங்காதே! நாட்டுப் புறத்தை விட்டு நகரத்திற்கு வந்தது எதற்காக, கலைபல பயின்று, அறிவியலை ஆராய்ந்து வருங்கால நாட்டின் வாழ்வுக்கு அணி செய்ய வேண்டிய கோடிக்கணக்கானவர்களில் நீயும் ஒருவன். வீணாகப் பிஞ்சிலே வெம்பிக் காய்ந்துக் கருகி விடாதே மனிதா!

இட்லர் : ஆ! ஆ! சொன்னதையே சொல்லும் கிளிப் பிள்ளை மாமனாரை மயக்கும் மாப்பிள்ளை! மாமியாரை மடக்கும் பெண்பிள்ளை. தலை யாட்டும் தம்பிரான் பிள்ளை, அஞ்சி நடுங்கும் அணிப்பிள்ளை. கருநாகத்தைக் கடித்துவிட்டுக் கதறிச்சாகும் கீரிப்பிள்ளை - இந்த அப்பாவிப் பிள்ளைகளின் அனுதாபப் பட்டியலில் பட்டுவும் ஒருத்தி. இவள் பேச்சில் சோகப் பெருமூச்சைத் தவிர வேறு எந்தவித மாற்றத்தையாவது கண்ட துண்டா? இல்லை. காரணம் காண முடியாது. காண இயலாது. காணக் கூடாது.

பட்டு : சீ! கீறல் விழுந்த கிராமபோன் ப்ளேட்! சொன்ன தையே சொல்லும் மேடைப் பிரசங்கி! மோனை

எதுகைக்காகவே பேசும் மொழிச் சூதாடி! அழகுக்காகவே பேசும் அரசியல் கோமாளி! இந்தத் தகுதியைத் தவிர வேறெந்தத் தகுதியு மில்லாத இந்த மனிதன் மறுப்புப் பேசுகிறார்!

இட்லர் : தோழர்களே! பட்டு என்னை வெட்டிப் பேசுகிறாள். தேள் போல் கொட்டிப் பேசுகிறாள். மருட்சி கொண்ட மடமான் புரட்சிப் புலிமீது பாய்கிறது, அதை ரசிக்கிறீர்கள். காரணம், முடிவை அறிவீர்கள்! புலியின் மீசையை புல் லென்று எண்ணி மெல்ல வந்த இந்தப் புள்ளிச் சிறுமான் விளையாடுகிறது. புள்ளி மானின் இரை, புலிக்கு இனிக்குமாகையால், நானும் பட்டுவின் பேச்சைக் கேட்கிறேன். ஐசுகிரீம் மாதிரி ரசிக்கிறேன். அந்த ரசனையின் எல்லை யிலே சிரிக்கிறேன். ஆம் நான் ஒரு ரசிகன்.

அவள்தரும் நோஸ் கட்டுகளை யெல்லாம், பேஸ் (Face) கட்டுகளாக ஏற்றுக் கொள்ளுகிறேன். நீ பேசு பட்டு! பேசு! சீறிக் குமுறும் உன் சிங்காரப் பேச்சு, சினிமாக் கதாநாயகியின் சோகக் கட்டத்தைத் தவிர வேறெதையும் இதுவரையில் சித்தரிக்கவில்லையம்மா! பேச்சென்றால் பிரிய மதிகம் எனக்கு, உன் கண்வெட்டுப்போலவே, உன் சொல்வெட்டும், பொன் வெட்டிப் பாய் கிறது! உம் பேசு தோழி! பேசு! உம்! வீசு உன் புலமையை! அத்தனையும் காசு!

பட்டு : சே! சிறங்கு பிடித்தவன் தலையைக் குரங்கு வந்து சொறிவதால் புண் அதிகமாகுமே தவிர, குறையாது! இவனது மனக்குரங்கு, உங்களையும் மகாபுத்திசாலிகளாக்கப் பார்க்கிறது. அது நடக்க இடம் கொடுக்காதீர்கள். எச்சரிக்கை.

இட்லர் : ஷட்அப் பட்டு! என் அடிப்படை உரிமையை அவமதிக்கிறாய்! பரம்பரைப் பெருமையைப் பயமுறுத்துகிறாய்! ஜாக்கிரதை! இப்படிப் பேசி

ஊருக்கு உபதேசம் செய்த உன் தந்தையார் கடைசியில் அனுபவித்த கதியை நீ மறந்து விடாதே பெண்ணே!

பட்டு : என் தந்தையின் மரணத்தைக் காட்டி என் உணர்ச்சிக்கு அணை கட்ட முயலாதே மனிதா! உண்மை சொன்ன உத்தமர்களுக்கெல்லாம் எந்த முடிவு கிடைத்ததோ, அதே அழிவற்ற அமர நிலைதான் அவருக்கும் கிடைத்தது. எனக்கும் அதே நேரலாம். அதுதானே உன் எண்ணம்? கவலையில்லை! உலகில் கொலைப் பட்டியலின் தொகை ஏற ஏற, உண்மையான தேசத் தொண்டர்களின் கணக்கும் அதிகமாகிக் கொண்டு தானிருக்கும்.

இட்லர் : *(தோழர்களிடம்)* உங்கள் முடிவு?

ஒருவன் : பிரின்ஸ்பாலிடம் மன்னிப்புக் கோருவோம். பரீட்சை வேண்டும். பட்டுதான் இனிமேல் நம் வழிகாட்டி, நீ ஒரு மாஜிப்பயல்! எங்களுக்கும் உனக்கும் சம்பந்தமில்லை.

பட்டு : நன்றி, வாழ்க. வாருங்கள்.

(எல்லா மாணவர்களும், மாணவிகளும், பட்டுவின் நல் வழியைப் பின்பற்ற அவளுடன் போய் விடுகிறார்கள். ஏமாற்றமடைந்த இட்லரும், பட்லரும்)

இட்லர் : அடே அழகு பட்லர்!

பட்லர் : என்னடா இட்லர்.

இட்லர் : தலைவலி வரும் வரை பேசினேன்டா!

பட்லர் : கடைசியில் தலைவி அவளாகி விட்டாள். என்ன கொடுமை! தலைவலி உனக்கு - தலைமை அவளுக்கு - விடாதே - மன்னா விடாதே - அட என் தலைவலித் தலைவா! அமிழ்தாஞ்சன

மன்னா! முன் வைத்த காலைப் பின் வைக்காதே. இதோ அமிழ்தாஞ்சனம் எடுத்துக்கொள் - தலைவலி நிலையற்றது - தலைமை என்றும் நிலைத்திருப்பது, கேவலம், நிச்சயமற்ற தலை வலிக்காக, நிரந்தரமான தலைமைப் பதவியை விட்டு விடாதே - மோட்சம் வரும் சமயத்தில் தான் கடவுள் ரொம்ப சோதிப்பான் என்பான் புராணிகள். அதுபோல தலையைத் தந்து, இயற்கை உன்னை சோதிக்கிறது அஞ்சாதே, அதோ பார் மற்றொரு ஆட்டுமந்தை. இன்னும் பேசுவோம் - அவர்கள் மனதைக் கரைப்போம். மக்கள் - நெல்லிக்காய் மூட்டைகள் - தம்பி வா - செம்மறியாட்டு மந்தைகள் வா.

இட்லர் : ஆமாம். பாறையிலே கொட்டிய பாதரசத் துளிகள். பாலைவனத்திலே கொட்டிய பால்... வா கிராமத்துக்குப் போகலாம்.

பட்லர் : தோழனே! தோல்வி கண்டு துவளாதே! அதோ பார் வெற்றி என்ற வீரக்காதலி வரவேற்க வருகிறாள் நம்மை!

(காட்சி 1 முடிவு)

காட்சி - 2

(தலைவர் கிராம மக்களை மயக்குகிறார்! மற்றொரு காட்சி ஒரு சிற்றூர் மக்களிடம் பேசல்)

இட்லர் : *உலகத்தில் என்னென்னவோ நடக்கிறது! ஆனால் இங்கே என்ன நடக்கிறது. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்த குடிகளாகிய நமது நிலை என்ன? கால் தோன்றி, வால் தோன்றா நேரத்தே, தேள் தோன்றி, ஒருநாள் தோன்றாக் காலத்தே மூவாயிரம் அடி ஆழத்திலே புதையுண்ட நமது மூதாதைகளது எலும்புக் கூடுகளின், தற்கால நிலை என்ன என்பதைப் பற்றி ஒரு நாளாவது நாம் எண்ணிப் பார்த்ததுண்டா? ஒரு காலத்தில் அழியாத திருமேனியாக இருந்தோம். இன்று கருமேனி சிறுமேனியாகக் காரணம் என்ன? ஏன்? யாரிந்த சூழ்ச்சி செய்தது? கடல்கொண்ட காமேரியா கண்டத்தின் கல்வெட்டுகளைப்பற்றி காரசாரமான ஆராய்ச்சிகளின் முடிவு என்ன வானது? என்றோ புதைந்து, எப்போதோ மக்கிப் போன எலும்புக் கூடுகளில்தானே நமது நாகரீகம் நிறைந்து கிடைக்கிறது. இதையறியாமல் காலத்தைக் கடத்தலாமா? வாழ்வை நடத்தலாமா?*

மக்கள் : *ஆகா என்ன ஆராய்ச்சி? ஆராய்ச்சி? சோடா கொடுப்பா...*

இட்லர் : *இவ்வளவு பெரும் தத்துவ ஞானிக்கு வெறும் சோடா தானா? விஸ்கி சோடா தரணும்!*

பட்லர் : *நான் உங்களைக் கேட்கிறேன். தென்னாடுடைய சிவன், வடநாடு சென்றதன் மர்மம் என்ன? சிவபெருமான் தலையில் இருந்த குடுமி சிவப்பா,*

கருப்பா - அதில் என்ன மலரைச் சூடிக் கொண்டிருந்தார்? எருக்கம் பூவா? முருக்கம் பூவா? நறுக்கம் பூவா? அது கிடக்கட்டும், மலையழகனான முருகனுக்கு மூத்த மனைவி யார்? தெய்வானை யார்? அவள் தேசம் எது? அவள் பரம்பரை என்ன? எந்தக் கல்லூரியில் படித்தாள்? அவள் ஒரு சமூக சேவகியா? அவள் லுங்கி கட்டாத காரணம் என்ன? மினி ஸ்கர்ட் போடாததன் இரகசியம் யாது? வள்ளியம்மை யார்? வனதேவதையா? வேடர்குலப் பெண்ணா? அவள் கற்ற கலை என்ன? பரத நாட்டியமா? குறவஞ்சி நடனமா? ட்விஸ்ட் நடனமா? பாம்பு டான்ஸா? குறிஞ்சிப்பண் பாடுவாளா? அவள் ஆடல்! பாடல் இவற்றின் மாடல் என்ன?

இட்லர் : தாங்கையில் எறிந்த தருந்தேன் கொம்பியன் யார்? அவன் துணிந்து செய்த போரில் தோளில் பட்ட புண்ணுக்கு மருந்து தடவிய வைத்தியர் எவர் கொல்! அவன் வெற்றியைப் பற்றிப் பொய்க் கீர்த்தி பாடிய கற்காலப் புலவர் யார் சொல்? அவர் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் யாவை? அவ்வை என்பது என்ன?

பட்லர் : அவ்வையார் என்பவர் பாட்டியா? எந்தக் கல்லூரியில் படித்தார்? கன்னியா, விதவையா? அல்லது காதல் முறிவா? அவள் செவ்விய கொவ்வைச் செவ்வாயில் வவ்விய கவிதைகள் யாவை? அவள் சமுதாயத்தால் ஒதுக்கப் பட்டவளா? அவள் பாடிய கண்ணன் என்ற காதலன் யார்? ஆண்டாள் யார்? அவள் என்ன உடை உடுத்தினாள்? என்ன மாதிரி பாடலைப் பாடினாள்! அவர்கள் லிப்ஸ்டிக் உபயோகித்த துண்டா! என்று ஒரு நாகரீக ஆய்வாளர் அலறுகிறாரே, அக்கூற்றுக்கு ஆதாரம் எது? யார்? எங்கே என்றெல்லாம் விவாதம் செய்த

பட்டிமன்றப் புலவர்களிருவர்க்கும் மண்டை உடைந்து ஆஸ்பத்திரியில் இருப்பது ஏன்! அதைப்பற்றி அசெம்பிளியில் கேட்ட கேள்வியின் கதி என்ன? இதற்கு நாடாளமன்றத்திலிருந்து நல்ல பதில் வராதது குறித்து தாயகமே கொந்தளிக்கிறது என்று மாராள்மன்றத்தில் ஒரு பயங்கரமான செய்தி வந்ததாமே! ஐக்கிய நாட்டிலும் அதை வெளியிடாத தகவல்துறை என்ன செய்கிறது? அத்தனையும் சூழ்ச்சி! சூழ்ச்சி! நமது தாழ்ச்சி!

இட்லர் : ஆகா பலே ஆள். இவருக்கு எதுவேணுமானா லும் கொடுக்கலாம். ஆனா கையிலே ஒண்ணும் இல்லையே. இவன் என்ன மனுசந்தானா? பைத்தியக்காரனா?

பட்லர் : ஏ! ஜனங்கலே! இங்கே வாங்க! நான் உங்கலுக்கு ஒண்ணு கூற ஆசைப்படுகிறேன். ஏ மக்கலே! நீங்கல்லாம் ரொம்ப ரொம்பப் பாவமாக இருக் கறீங்கோ. ஆகையினாலே உங்களுக்கு நிறைய தொண்டு செய்யத்தான் நாங்கல்லாம் நரகத்திலே இருந்து சாரி நகரத்திலே இருந்து, படிக்கிறோம் உங்க பட்டிக்காட்டை இருபது வருஷமா அப்படியே வச்சிருக்காங்கோ, சுதந்திரம் வந்து பல வருஷம் ஆச்சு, இன்னும் உங்க ஊர் இருக்க லாமா? நான் மந்திரியா வந்தா இந்தப் பட்டிக் காட்டையெல்லாம் ஒரே நால்லே அலிச்சுப் புடுவேன்.

கிராம : ஓய்! அபசகுணம்! நீ என்னய்யா பேசுறே!

இட்லர் : ஆமாம் கிராமம் கிளோஸ். ஏழை கிளோஸ். குடிசை, குட்டை எல்லாம் கிளோஸ்.

கிராம : எல்லாம் குளோஸ்! அப்புறம் எங்கே போறது?

இட்லர் : நீங்க எல்லாரும் பட்டணம் வந்துடுங்க. ஆல் கம்டு மெட்ராஸ். அங்கே கார் இருக்கு. காசு

இருக்கு கட்டடம் இருக்கு. கட்சி இருக்கு பார்ட்டி இருக்கு. பாலிடிக்ஸ் இருக்கு. பீச்சு இருக்கு. பேச்சு இருக்கு காட்சி இருக்கு. சூழ்ச்சி இருக்கு. ஆட்சி இருக்கு. டாக்ஸி இருக்கு. பாக்ஸிங் இருக்கு. சினிமா இருக்கு. ஹோட்டல் இருக்கு. இது இருக்கு! அது இருக்கு!

வீரபெரு: இவ்வளவும் இருக்கு. சோறு இருக்கா?

இட்லர் : இருக்கணும். சோறு எதுக்கு. கேக்கு துன்னுங்க! சப்பாத்தி சாப்பிடுங்க! பாவம். பாருங்க எப்படி வாடி இருக்கீங்க. நீங்க இப்படி உலைக்கலாமா? இப்படி பிலைக்கலாமா? உலுவலாமா? அலுக லாமா?

வீர : என்னப்பா பேசுறே! நாங்க உலைக்கலேன்னா, உலையிலே அரிசி வேகாது அப்பனே!

கிராம : அய்யா இவர் பேசறது ஒண்ணும் நல்லதா தெரியிலியே...

இட்லர் : குரல் இனிது யால் இனிது என்பர் தம்மக்கல் மலலைச் சொல் கேலாதவர்.

வீர : பாவம் பேசட்டும், குலந்தை ஏதோ பேசப் பிரியப் படுகிறான். பேசுப்பா. பேசு... உன் ஆள் ஜெயிச்சா என்ன பண்ணுவான்.

இட்லர் : இரகசியமா சொல்றேன் கேலுங்க, நம்ம ஆலு உயர்திரு ஒலிவெல்லம் ஜெயிச்சா பட்டிக்காடே இருக்காது. தீவச்சு கொலுத்திப் புடுவோம். பட்டிக்காட்டை எல்லாம் தூக்கி பட்டணத்திலே கொண்டு போயி... போட்டுடுவான்.

கிராம : அப்புறம் பட்டணத்தை எங்கேய்யா தூக்கி கிட்டுப் போவே?

இட்லர் : பட்டணத்தை சீமையாக்குவாரு. சீமையை சொர்க்கமாக்குவாரு.

வீர : எல்லாம் ஆக்குவாரு சாப்பாட்டை யாரு ஆக்கறது சொல்லு.

இட்லர் : எல்லாம் மெசின் ஆக்கும் மனுஷன் வேலை செய்யாமலேயே சாப்பிடலாம்.

வீர : வேலை செய்யாமச் சாப்பிட்டா அஜீரணக் கோளாறு வந்திடும்பா.

இட்லர் : பாவம் நீங்கல்லாம் வேலை செய்யவே கூடாது.

வீர : ரெஸ்ட் எடுக்கணும். எல்லாரும் நல்லாத் தூங்கணும். அதுக்குத்தான் சுதந்திரம் வந்தது. அது தெரியல்லே, ஆட்சி உங்கலை உலைக்கச் சொல்லுது!

ஒருவன் : ஆமா இவன் நல்லாத்தானே இருந்தான். ஏன் இப்படி திடீரென்று தமிழைக் கொண்ணு திங்கிறான்.

வீர : பாவம் தம்பிக்குப் பசி தாங்கலே! தமிழையே சாப்பிடுறான்.

(கிராமவாசி சிரிக்க)

இட்லர் : நீங்கல் சிரிக்கிறீர்கள். நான் தீவிரமாக சிந்திக்கிறேன். நீங்கள் என்னைப் பார்க்கிறீங்கள். நான் உங்களைப் பாக்குறேன்.

வீர : ரெண்டு பேத்தையும் கடவுள் பார்க்கிறார்.

இட்லர் : நோ கடவுள்! கடவுள் பாவம் காலமாயிட்டார்... அவர் பேரே சொல்லாதீங்கோ! கடவுள் தற்கொலை பண்ணிக்கிட்டார்.

கிராம : ஆம். உன்னைப் பிறப்பிச்ச கடவுள் சாகாம என்ன பண்ணறது? அடப்பாவி! என்னடா உளர்றே?

வீர : இருப்பா... தம்பி பேசட்டும்.. டே பையா முடிஞ்சுதா?

இட்லர் : முடியல்லே. இன்னும் ஒண்ணு சொல்வேன் உங்க முதலாளி ஒரு கொலையாலி.

கிராம : யோவ். எங்கய்யாவைப் பத்தியா பேசுறே. அவரு காலையிலே வயலுக்கு வந்தா சாயந்திரந்தாய்யா வீட்டுக்கு போவாரு. ஆளைத் தெரியாம பேசாதே.

வீர : பேசு தம்பி. ஆசை தீரப் பேசித்தொலை.

இட்லர் : பண்ணையார் பலைய பரமசிவம் 'தட் ஒல்டு மேன்' அவன் உடம்பை உத்துப்பாரு. அவன் உடம்பிலே உங்க உயிர் இருக்குது! நீங்க பாவம் இலைக்கறீங்க, அவன் நல்லா கொழுக்கிறான். நீங்க உலுவுறீங்க. அவன் அறுக்கிறான். நீங்க வெட்டிறீங்கோ, அவன் கட்டுறான்.

வீர : இப்பதான் விஷயத்துக்கு வர்றான், சமதர்மம் பேசுறதோடே லட்சணம் இப்பத்தான் தெரியுது.

இட்லர் : பேச்சுரிமை இருக்கு. பேசுறேன், நாங்க இப்படி பேசத்தான் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தாங்க.

வீர : ஏண்டா தம்பி! டே, படாதபாடுபட்டு லட்சக்கணக் கான வீரர்களும், மேதைகளும் உயிர் கொடுத்து வாங்கின சுதந்திரம், நீ இப்படிப் பேசறதுக்குத் தானா?

இட்லர் : பைத்தியக்காரப் பசங்க. வீரர்களை யார் சாகச் சொன்னா? சுதந்திரத்தை வெறும் வாய்ப் பேச்சாலே வாங்கத் தெரியல்லே! பலி ஆடு மாதிரி பத்தாயிரம் கணக்கிலே செத்தானுங்க - நாங்க இருந்தா எங்க நாவன்மையாலேயே நாட்டை வாங்கியிருப்போம். அது கெடக்கட்டும் இப்போ விஷயத்திற்கு வருவோம். உங்க ஊரிலே

முதலாளி ஒருமேல் ஜாதி முதலை நீங்க எல்லாம் கீழ் ஜாதித் தவலை! அவன் புலி! நீங்க கிலி. அவன் இரும்பு நீங்கள் கரும்பு. அவர் பானை நீங்க சோறு. அவன் காரு. நீங்க டயரு. ஆகை யினாலே அவருக்கு ஓட்டு வேணாம், எங்க தலைவர் சொரிமுத்து சோணாச்சலத்துக்குப் போடுங்க. சொல்லாததை எல்லாம் செய்வாரு. உங்கலை பட்டணவாசிகல் ஆக்கி விடுவார். இதோ பாருங்க... ஓட்டுக்கு நல்ல பணம் உண்டு. நல்லா பாருங்க. தேர்தல் நெருங்க நெருங்க ஓட்டு மார்க்கட் விலை ஸ்டடியா ஏறும்?

வீரபெ : டே, தம்பி! இதுவரை விளையாட்டா பேசினே விட்டுட்டேன். இப்படி நீ பேசினது வினை, இனி ஒத்துக்காது. கேளு தம்பி, ஓட்டுங்கறது மனித உரிமையின் சின்னம். மகாத்மா காந்தி தந்த செல்வம். மனோசாட்சியின் மதிப்பீடு! ஓட்டு உரிமை எங்கள் சுயமரியாதையின் உயிர். இதை விலை போட்டு வாங்கலாம்னு நினைக்கறீயே நீ மனுசந்தானா! உன்னைப் பெத்த பாவி யார்ரா?

இட்லர் : எதுக்குக சந்தேகம் - மனுசந்தான் - மக்களே போல்வர் கயவர்.

கிராம : யோவ். உனக்கு ஓட்டு இருக்கா - உண்மையைச் சொல்லு, உனக்கு ஓட்டிருக்கா?

வீரபெ : அவன் ஓட்டில்லாத ஆசாமி! அவனைப் போயி ஏன் கேக்கிறே... பாவம்-யோவ்... எந்த ஓட்டர் லிஸ்டிலாவது உன் பேர் இருக்கா?

இட்லர் : இல்லை, இருக்காது. காரணம் நான் பிஸி மேன். ஓடோடி உலகம் சுற்றுகிறேன். நான் ஒரு ஓட்டல் மனுஷன். ஆகையினால் ஓட்டர் ஆகல்லே. அதைக்கூட உங்களுக்காக தியாகம் செய்திட்டேன் பாருங்க. தேர்தல் வேலைக்காக ஓட்டர்

பதவியை தியாகம் செய்த சுத்தமான தியாகி நான். என்னைப் போலவே எல்லோரும் செஞ்சா.

வீரபெ : உன்னைப் போல செஞ்சா - அப்புறம் உலகத்திலே எலெக்ஷனே இருக்காது. போய் முதல்லே ஓட்டர் பட்டியல்லே உன் பெயரைப் பதிவு பண்ணிட்டு வா. அப்புறம் தேர்தல்லே நிற்கலாம். தெருவெல்லாம் சுத்தலாம்.

இட்லர் : ஆகா நீங்க என்னை இன்னும் புரிஞ்சுக்கலே - நான் நிக்கமாட்டேன் - மத்தவங்களை நிக்க வைப்பேன். நான் கிங் அல்ல - கிங்மேக்கர். நான் ஒரு அகிலவுலக மனுஷன். உலகம் புகழும் உத்தமன். இது ஒரு இண்டர்நேஷனல் சப்ஜக்ட். எப்படி இந்த நாட்டு ஓட்டர் ஆகமுடியும்?

வீரபெ : அடே போய்யா! ஆக முடியாட்டி வாயை மூடிகிட்டுப் போய் ஏதாவது முடியற வேலையாப் பாரு. சும்மா தண்ணி குடிச்ச வரட்டுத் தவளை மாதிரி தொணதொணன்னு சத்தம் போட்டு ஆளைக் கொல்லாதே.

இட்லர் : ஆகா. வருங்காலத் தலைவனுக்கு வரட்டுத் தவளைப் பட்டம்.

பட்லர் : அட தம்பீ! ஒரு திவான் பகதூர் - கேவலம் ஒரு பட்டபூஷன் சப்தபூஷன் பட்டம் கூட இல்லையா - கேவலம் வரட்டு தவலைதானா - பரவாயில்லை - தவலைக்கும் ஆமைக்கும் ஆயுசு அதிகம்.

இட்லர் : நண்பா - தலைவலி வரும்வரை முன்பு பேசினேன் - இப்போ நெஞ்சு வலி வரும்வரை கத்தினேன். அப்படியும் தலைவனாக முடியவில்லையே.

பட்லர் : இந்த வலிகள் எல்லாம் கேக்கறவனுக்கு வரணும்பா. பேசற உனக்கு வரக்கூடாது.

இட்லர் : மயக்கம்கூட வரும்போல இருக்கு. மண்டையிடி.

பட்லர் : *இந்த மாத்திரை!*

இட்லர் : *தலை தெறிக்கமாதிரி பேசியும் தலைவனாக முடியல்லையே!*

பட்லர் : *சீக்கிரம் ஆயிடுவே - மொதல்லே கொஞ்சம் பணம் - ஓட்டர் லிஸ்டில் உன் பேரு - பத்திரிகை பேச்சு! புது கச்சி! ஒரு இயக்கம்! பாரு அப்புறம் - நீதான் தலைவன்.*

இட்லர் : *சரி வா - எதைச் செய்தாவது ஒரு தலைவன் ஆயே தீரணும். அப்பத்தான் தலைவலி தீரும். சரி வாடா எந்தன்.*

தலைவலித் தலைவா வாழ்க

தடுமாறும் அழகா வாழ்க

(அதைத் தொடர்ந்து ரேடியோவில் தவறு தவறு மன்னிக்கவும் வானொலியின் வர்த்தக ஒலி பரப்பில் ஒரு பாடல்)

(மண்ணொலியின் கள்ள மார்க்கட்டில் கேட்கும் ஒரு ஒலிபரப்புப் பாடல்)

பாடல் :

தலைவலி! தலைவலி! தலைவலி!
தலைவருக்கும் தொண்டருக்கும் தடுமன்மண்டைத் தலைவலி
உளறுகின்ற பெரியவர்க்கும் உங்களுக்கும் தலைவலி
பாட்டுப்பாடும் தவளைகட்கும் காக்கைகட்கும் தலைவலி
கேட்டிருந்த ரசிகருக்கும் எங்களுக்கும் தலைவலி

உலகில் கூச்சல் அதிகம் - உடனே வாங்குங்கள் - தலைவலி மாத்திரை. தலைவர் தாண்டவராயர் சிபார்சு செய்கிறார். இட்லர் பட்லர் எதையோ இழந்து விட்டார்கள் போல் விழித்தவண்ணம் தங்களை அறியாமலேயே தங்கள் பையில்

வைத்திருந்த தலைவலி மருந்தை எடுத்து தடவிக் கொள்ளுகிறார்கள்.

ஒரு இரகசியம் மேற்கண்ட தலைவர்கள், அந்தப் பிரதேச முழுமைக்கும் தலைவலி மாத்திரை விற்கும் பிரதம ஏஜெண்டுகள் என்பதை வாசகர்கள் அறிய வேண்டுகிறோம். புரட்சி இயக்கம் என்பதெல்லாம் வெறும் புரட்டு! இவர்கள் பேச்சினால் ஊரில் தலைவலி மருந்து அதிகமாக விற்பனையாகிறது. இவர்களது வியாபாரம் வாழ்கிறது. ஆகவே இவர்கள் அசல் தலைவர்கள் அல்ல. தலைவலித் தலைவர்கள். இதைப் போன்ற தலைவர்களிடம் ஜாக்கிரதையாக இருங்கள்... இல்லாவிட்டால் வருவதை அனுபவியுங்கள்.

சிரிக்காதவர் மாநாடு!

சுதந்திரம் பெற்று முப்பது ஆண்டுகள் ஆகிவிட்டன! இனியாவது ஒவ்வொருவரும் சுதந்திரத்தைப் பற்றி கொஞ்சம் சிந்திக்க வேண்டியது கடமையாகும்.

எதற்காக விடுதலை பெற்றோம்? மக்கள் எல்லோரும் கவலையை மறந்து, கடமையைச் செய்து, களிப்பாக வாழ்வதற்காகத்தான் உரிமை பெற்றோம். முடிந்தவரை உழைப்பது, நியாயமான தேவைக்கு மீறியதைத் தேவையுள்ளவர்க்குத் தருவது, வீட்டுக்கும் நாட்டுக்கும் உண்மையாக நடப்பது, அழுகையை விட்டு ஆனந்தமாக வாழ்வது, சிடுமூஞ்சித்தனத்தை விட்டுச் சிரிப்போடு இருப்பது, பகையை மறந்து புன்னகையோடு பேசுவது, இன்ன பிற நன்மைகளைப் பெறத்தான் நாம் உரிமையைப் பெற்றோம், என்பது திருவாளர் சிரிப்பானந்தரின் திடமான கருத்து. ஆனால் அவருடைய கருத்தை அவ்வளவு எளிதாக உலகம் ஒப்புக் கொள்வதாக இல்லை.

சிரிப்பு என்பது ஒருவகை நரம்பு நோய்! சிரிப்பு என்பது சோம்பலில் விளைந்த ஒருவித அபாயகரமான வலிப்பு! சிரிப்பு என்பது ஒரு ஆடம்பரப் பொருள்! - என்பது ஒரு பிரபல ஆராய்ச்சியாளரின் முடிவு.

அவர்தான் உலகமறிந்த உயர்திருவாளர் சர்வ ஸ்ரீ வெறுப்பானந்த வேந்தர் என்பவர்!

இந்த வீரத்திரு வெறுப்பானந்தரைப் பற்றி வாசக நேயர்கள் எளிமையாகக் கருதக் கூடாது. உலகமெங்கும் புகழ் பெற்றவர் இவர்! இவரைப் போற்றாத நாடு இல்லை, மொழி இல்லை, இனமில்லை! புகழாத படிப்பாளிகள் இல்லை!

இவருடைய மகத்துவம் மகா பெரியது! ஜகமெங்கும் புகழ்தாங்கி நிற்கும் செல்வாக்குப் பெற்றவர் ஸ்ரீமான் வெறுப்பானந்தஜி அவர்கள்! இவ்வளவு எதற்காக? இன்றைய

ஜனநாயக யுகத்தில் ஓட்டு எடுத்துப் பார்த்தால் ஏராளமான ஓட்டுகளால் எளிதில் வெற்றிபெறும் பாக்கியசாலி - இந்த வெறுப்பானந்தர் தான் என்பதால் கொஞ்சங்கூட சந்தேகமில்லை.

சுதந்திர தினத்தில் சிவத்திரு. சிரிப்பானந்தர் செம்மல் அவர்களைக் கொண்டு ஒரு நகைச்சுவை மாநாடு நடத்தி விடுதலை நாளைக் கொண்டாட வேண்டும் என்பது ஸ்ரீமான் பொதுஜனத்தின் ஏற்பாடு... அதற்காக பெரிய பெரிய சுவரொட்டிகளில் விளம்பரமும் செய்து விட்டார்.

இந்த விளம்பரத்தைக் கண்ட வெறுப்பானந்தரின் உள்ளம் கருப்பாகிவிட்டது. ‘மனித குலத்தின், மகத்தான சத்துருவான அந்தச் சிரிப்பு கெட்ட கேட்டுக்கு ஒரு மகா நாடாவது... அதிலும் சிந்தனைமிக்க செந்தமிழ் நாட்டில் சிரிப்புக்கு ஒரு சிறப்பு மாநாடு கூட்டுவதா? அதிலும் எனது பரம எதிரி சிரிப்பானந்தன் தலைமை தாங்குவதா? அதுவும் பட்டிமண்டபத்திலா? கூடாது! நடக்காது! இந்த சிரிப்பைக் கொண்டு இந்தப் போலிச் சுதந்திரத்தைப் பெரிதாக்கப் பார்க்கும் இந்த பயங்கரமான சூழ்ச்சியை சுட்டுப் பொசுக்கியே தீரவேண்டும்” என்று தீர்மானம் செய்து விட்டார்....

அது மாத்திரமா? திருவாளர் வெறுப்பானந்தர் சிவத்திரு சிரிப்பானந்தருக்கு விடும் சவால் - ‘அறிவின் திறமிருந்தால், என்னை வாதப் போரில் வெல்லட்டும். அதன் பிறகு சிரிப்பு என்ற நரகத்தில் அவரும் அவரைப் பின்பற்றுபவரும் போய் விழட்டும்!” என்று சகல பத்திரிகைகளிலும் முதற் பக்கத்தில் அறிக்கை வெளியிட்டு விட்டார். ஆமாம். அன்று தினசரியில் வழக்கமாக எட்டுக் கால முக்கியத்துவம் பெறும் கொலைச் செய்திகளும் - கலைப் பகுதிகளும் இரண்டு காலத்தில் இளைத்து விட்டன! இந்த வெறுப்பானந்தரின் சவாலுக்கே முக்கிய இடம்! காரணம், பத்திரிகைகளுக்கெல்லாம் இந்த வெறுப்பானந்தரிடம் ஏகப்பட்ட அச்சம்!

சுதந்திர தினத்தை சும்மா வெறும் சடங்காக நடத்துவதைவிட, கொஞ்சம் சத்துள்ளதாக, சாரமுள்ளதாக, முடியு

மானால் காரசாரமாகவே நடத்த வேண்டும் என்று திட்டமிட்டிருந்த திருவாளர் பொதுஜனத்துக்கு இந்த வெறுப்பானந்தரின் சவால் சமயத்தில் வாய்த்ததொரு சஞ்சீவியாக வந்து சேர்ந்தது!

வெறுப்பானந்தரின் சவாலை சிரிப்பானந்தரும் ஏற்றுக் கொண்டார். பட்டிமண்டபமும் ஒப்புக் கொண்டது.

வேடிக்கையாக வந்த இந்த வாய்ப்பு ஒரு சிறந்த உரைக்கோவை மாநாடாகவே உருவெடுத்து விட்டது!

மாநாட்டில் சிவத்திரு சிரிப்பானந்தரும், வீரத்திரு வெறுப்பானந்தரும் விவாதம் நடத்துவதை நடுநிலை நின்று தீர்ப்புக் கூற செகத்திரு சிந்தனையானந்தரை தலைமை ஏற்கும்படி, ஸ்ரீமான் பொதுஜனம் கேட்டுக் கொண்டார். அவரும் ஒப்புதல் தந்துவிட்டார்.

மாநாடு நடந்தது. அதில் நடந்த வாதக் கோவையை அப்படியே எழுதி உங்களுக்கு அனுப்பி விட்டோம்.

காரணம், உயர்திரு பொதுஜனத்தைக் கடந்த முப்பதாண்டு காலமாக, அகமும் முகமும் மலரும்படி, ஆனந்தச் சிரிப்பில் ஆழ்த்திய குற்றம், தவத்திரு உங்களைத்தான் சாரும் என்பது, வெறுப்பானந்தரின் ஆணித்தரமான வாதம்!

இந்த வாதத்தின் ஆணித்தரமான முடிவை தவத் திருவான நீங்கள் அறிய வேண்டுமென்பது பெருந்திரு பொதுஜனத்தின் விருப்பம்.

அத்தோடு கடந்த முப்பதாண்டு காலமாக உம்முடன் நெருங்கிப் பழகும் நேயர்களுக்கும் இந்த வாதத்தின் விவரம் தெரிந்திருக்க வேண்டும் என்று அந்த மாநாட்டின் வாதக் கோவையை பட்டிமன்றத்தின் பேச்சுக்களை அப்படியே தருகிறோம்:

பட்டிமன்றம் பத்து மணிக்கென விளம்பரம் செய்யப் பட்டும் எட்டு மணிக்கே மண்டபம் நிறைந்து விட்டது.

சரியாக மணி பத்து அடித்தது!

ஸ்ரீமான் பொதுஜனத்தின் சாட்சாத் விஸ்வரூபமான பெருங்கூட்டம், கைபொலி எழுப்பி, செயற்கை இடி யோசையைக் கிளப்பியது.

நடுவராக வருகைதந்த செந்திருவாயர், தத்துவ வித்தகர், எதிர்மறை மறலியார் (பிரதிவாதி பயங்கரம்) உயர்திரு. சிந்தனையானந்தர் கிழட்டுச் சிங்கம் போல உறுமிக் கொண்டு போய் தமது இருக்கையில் அமர்ந்தார்!

அடுத்தது இளஞ்சிங்கம் போன்ற இடியேறு பீடு நடையுடன் வீரத்திரு வெறுப்பானந்தர் நடுவரின் வலது புறம் வந்து இறுமாப்புடன் தம்முடைய இருக்கையைப் பற்றினார்...

பாவம்... பழகிப் போன பசுமாடு மாதிரி புன்னகையோடு வந்த சிவத்திரு சிரிப்பானந்தர் துஷ்ட தேவதைகளுக்கு பலியாகப் போகும் ஆடு மாதிரி அவரது இடத்தில் அமர்ந்தார்!

இந்த மூன்று பிரமுகர்களும் முப்பெரும் சக்திகளாக அமர்ந்ததும், மூலச்சக்தியான கூட்டம் தனது பெருங் குரலெடுத்து ஒலி எழுப்பியது!

செழுமை தரும் சிரிப்பு வாழ்க!

வெற்றி தரும் வெறுப்பு வாழ்க!

சீர்மைதரும் சிந்தனை வெல்க...

என்றார்கள். ஒருமுறை எல்லோருமே கொல்லென்று சிரித்தார்கள்.

கையொலியுடன் இணைபிரியாமல் வருவது 'சிரிப்புத் தானே'. வெறுப்பானந்தரை ஆதரிக்க வந்த திருக்கூட்டம் கூட, தன்னை மறந்து சிரிப்பின் மாய வலையில் விழுந்து விட்ட துயரத்தைத் தனது கண்ணெதிரிலேயே காணச் சகிக்காத வீரத்திரு. வெறுப்பானந்தர், வெடுக்கென எழுந்தார். (இனிமேல் இவரைக் குறிக்க 'வெறுப்பு' என்ற சொல்லையே பயன்படுத்தலாம்.

வெறுப்பு : வெறுப்புமிக்க தோழர்காள்! தோழியர்காள்! உங்கள் சார்பில் நடுவருக்கு ஒன்று நவிலுவேன்! அதாவது எந்த ஒரு சிரிப்பு என்ற பகையைச் சாட இங்கே கூடியுள்ளோமோ அந்தச் சிரிப்பு எனும் மோகினி வலையில் எனதருமை வெறுப்பாளர்கள் வீழ்ந்து கலங்கும்படியான சூழ்ச்சி இந்தப் பட்டி மண்டபத்திலே நடைபெறுகிறது. இதனை நடுவராய் வந்துள்ள சிந்தனையானந்தர் தமது சிவந்த விழிகளால் கண்டு தக்க பரிகாரம் செய்யக் கடவர்.

சிந்தனை பேசுகிறார்: *அய்யன்மீர்! அருள்கூர்ந்து சிரிக்காதீர்கள். சிரிக்காமல் இருந்தால்தான் இந்தப் பட்டிமன்றம் நடுவு நிலையுடன் நடைபெறும். யான் நடுநிலையாளன். சிரிப்புக்கும் வெறுப்புக்கும் இடையே நேரும் மன அரிப்புக்கு அடிமையாதல் தகாது! நீங்கள் அவ்வண்ணம் இருக்க வேண்டுமேயானால் உடனே சிந்தனையாளராக மாறுங்கள். வாழ்க சிந்தனை! உங்கள் முகங்களை உம் என்று வைத்துக் கொள்க.*

இப்போது சிவத்திரு சிரிப்பானந்தர் தமது சீருரையால் பட்டிமன்ற விவாதத்தைத் துவக்குவார்!

(மீண்டும் வெடுக்கென விம்மி எழுந்தார் வெறுப்பானந்தர்)

வெறு : *குறுக்கே ஒரு வார்த்தை...! இந்தப் பட்டிமன்ற மாநாடே இந்த ஆண்டில் முதல் நிகழ்ச்சி. ஆதலால் முதலில் இறந்து போனவருக்கு அனுதாபத் தீர்மானம் போட்ட பிறகு தான் நிகழ்ச்சி துவங்க வேண்டும்! என்று வேம்பின் கசப்போடும், கடுவம் பூனை வெறுப்போடும் அபசகுணமாகக் காட்சி தந்தார்! தேவேந்திரன்*

சபையில், அரிச்சந்திரனை பொய்யனாக்குவ தாக சபதமிட்ட விசுவாமித்திரர்போல், அவ்வளவு பயங்கரமாகக் காட்சி தந்தார். கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் நிறை வேற்றுவது முறைப்படி நியாயமே, ஆனபடி யால் தலைமை வகித்த நடுவர் எழுந்து,

சிந்தனை : சரி, இறந்த அங்கத்தினர் பெயரைப் பகர்மின் அனுதாபம் அறிவிப்போம் என்று பரிதாப மாகக் கேட்டார் கூட்டம் கொல்லென சிரித்தது. நமது பட்டிமண்டப அங்கத்தினர் எல்லோரும் சந்தோஷமாகச் சிரித்து வாழ்வ தால் யாருமே சாகவில்லை என்றார்கள்.

சிந்தனை : மிகவும் கவலைப்படுகிறோம்! என்னய்யா இது? இப்படி ஒருவருமே சாகவில்லை யானால் எப்படி அய்யா அனுதாபத் தீர் மானத்தை நிறைவேற்ற முடியும்? எப்படி அய்யா மேற்கொண்டு மாநாடு நடைபெறும்?

என்று உண்மையாகவே கவலைப்பட்டார். இந்த நெருக்கடியைத் தீர்க்கும் வலிமையோடு எழுந் தருளினார் ஸ்ரீமான் வெறுப்பு.

வெறுப்பு : ஆகா பார்த்தீர்களா? இந்தச் சிரிப்பின் தீமையை! இதனுடைய மாயவலையில் மனிதன் விழுந்தால் லேசில் சாகமாட்டான். சங்கடப்பட்டுக் கொண்டே வாழ்ந்து கடைசி யில் இப்படிக் கேவலம் ஒரு அனுதாபத் தீர்மானத்துக்குக்கூட பயன்படாமல் இருப் பான்!

கூட்டம் : அப்போது சிரிப்பால் மனிதன் அதிக நாள் வாழலாம் என்பதை திரு. வெறுப்பானந்தர் ஒப்புக் கொள்ளுகிறாரா?

வெறுப்பு : இல்லை... இல்லை! சிரிப்பாலும் அகால மரணம் அடைந்தவர் பலர் உளர்.

கூட்டம் : *சரி. பலர் உளர் எனில் பெயரைப் பகர லாமே!*

வெறுப்பு : *நினைவில்லை!*

கூட்டம் : *சரி. நினைவு வந்தபின் உங்க அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றலாம். இப்போது பட்டிமன்ற மாநாடு துவங்கட்டும். பேசட்டும்! சிரிப் பானந்தர் சீருரை ஆற்றட்டும்.*

தவத்திரு சிரிப்பானந்தரின் சீருரை : *நடுநிலை தாங்கும் சிந்தனையாளர் அவர்களே! சிரிப்பை வெறுக் கும் வீரத்திரு வெறுப்பானந்தர் அவர்களே! சிரிப்போடும், மானத்தோடும், மகிழ்வோடும், செழிப்போடும் மனை மக்களோடும் வாழப் பிறந்துள்ள அருமைத் தமிழ்ப் பெரியோர் களே! உங்களுக்கு எனது வணக்கம். சுதந்திரம் பெற்று 26 ஆண்டுகள் ஆகிவிட்டன. அதற்கு முன் இருபது ஆண்டுகளுக்கு முன்பே சுதந்திரத்தை வரவேற்று, நமது மகாகவி பாடினார்... ஆடினார்... 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே - ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று - ஆடுவோமே! இதில் ஆனந்தம் என்ற வார்த்தையின் பொருளின் புறத்தோற்றந்தான் சிரிப்பு எனப்படும் சீரிய செல்வம். பயிரின் வளர்ச்சி உணவாகிறது! கொடியின் மலர்ச்சி மலராகிறது. மகிழ்வின் மலர்ச்சியே சிரிப்பாகிறது. செழிப்பின் மணமே சிரிப்பு. பண்பின் பண்பே சிரிப்பு. நெஞ்சின் நிறைவே சிரிப்பு. நினைவின் சுவையே சிரிப்பு...*

பெரியோர்களே இத்தகைய சிரிப்பைக் காரண மின்றி வெறுப்பவரும் உலகில் இருக்கிறார்கள் என்றால் அது இந்த உலகின் குறையேயன்றி, சிரிப்பின் குற்றமன்று!

மலர் வேண்டாத செடி இருக்குமானால், சிரிப்பை வேண்டாத மனித உயிரும் இருக்க முடியும். ஒளி வேண்டாத விழி இருக்க முடியாது. நகை வேண்டாத நங்கை இருக்க முடியாது. சுவை வேண்டாத நாக்கு இருக்காது. அமைதி வேண்டாத அறிவு இருக்காது. அதே போல் சிரிப்பை வேண்டாத, சிந்தனையும் இருக்க முடியாது.

(ஒரே கையொலி)

ஒவ்வொரு பிறவியும் ஒவ்வொரு விதத்திலும் தனது மனமகிழ்ச்சியைக் காட்டுகிறது. நாய் தன் நன்மகிழ்வை வாலின் ஆட்டத்தில் காட்டு கிறது. குரங்கு தன் சந்தோஷத்தைக் கண் சிமிட்டலில் காட்டுகிறது. பூனையும் தன் குதூகலத்தை ஒரு விதக் குரலால் காட்டுகிறது. குதிரை தனது மனநிறைவை காதுகளை மடக்கிக் காட்டுகிறது. மாடும் அவ்விதமே. ஆனால், மனித இனம் ஒன்றுதான் தனது மகிழ்வை, அழகான உதட்டிலும், அணியான பல் வரிசையிலும் கனிவான கரங்களிலும் காட்டும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. இத் தகைய சிரிப்பு, கடவுள் மனிதனுக்குத் தந்த மகத்தான செல்வம். இணையற்ற பரிசு. பகுத்தறிவு பெற்ற மனித குலத்துக்குச் சிரிக்கும் திறமையை மட்டும் அளித்திருக்காவிட்டால் மானிட இனம் இத்தனை காலம் வாழ்ந்தி ருக்கவே முடியாது. உலகில் ஒவ்வொரு பொருளும் சிரிப்பையே நாடி நிற்கிறது. ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர்வரை, எல்லாமே ஆனந்தத்தை நாடி நிற்கிறது. நம்மைப் படைத்த ஆண்டவன் எப்போதும் நகை முகத்தோடே விளங்குகிறார்! உண்மை அறி வானந்தமான சச்சிதானந்தமே சதானந்தமாகச்

சிரிக்கிறது. ஆனந்த நடனமிடுகிறது. அந்த ஆனந்தத் தாண்டவத்தின் அசைவின் விசை தான் உலக வாழ்க்கை! உயிர்களின் இன்பம்! ஆனந்தம் என்ற பொருளை விரும்பாதவர் யார்? ஏன் ஆனந்த மயமான சிரிப்பை எதிர்க்க வந்திருக்கும் நமது வீரத்திரு வெறுப்பானந் தரின் பெயரிலேயே ஆனந்தம் இருக்கிறது.

வெறுப்பு : இதை இடை மறுக்கிறேன் பெயருக்கும் பொருளுக்கும் என்ன சம்பந்தம்?

சிரிப்பு : கண்ணுக்கும் பார்வைக்குமுள்ள சம்பந்தம் தான்!

வெறுப்பு : வெறுப்பானந்தன் என்றால் வெறுப்பிலே ஆனந்தமுள்ளவன் என்று பொருள். நண்பர் என்னையும் என்னருமை வெறுப்பையும் பிரித்து சதி செய்யப் பார்க்கிறார்.

சிரிப்பு : இல்லை, ஆனந்தமே உமது இயற்கை. வெறுப்பு உமது செயற்கை. செயற்கையை விட்டு இயற்கை யோடு வாழ வேண்டுகிறேன். ஆகா! நமது வெறுப்பானந்தருக்குத் தான் எத்தனை அழகான முகம்! முல்லைப் பற்கள்! பவள இதழ்கள்! வாழ்க்கையில் ஒரு தடவை யாவது அவர் சிரித்துவிட்டால்போதும் நான் மகிழ்வேன். அவர் சிரித்தால், இந்த உலகமே சிரித்த மாதிரி. இவர்சிரித்தால், இந்த உலகில் உள்ள சகல ஜீவராசிகளும் சிரித்த மாதிரி.

கூட்டத்தில் ஒருவர்: மன்னிக்க வேண்டும்! தோழர் வெறுப் பானந்தஜி அவர்கள் சிரிக்காமல் இருப்பதே நல்லது. அவர் சிரித்தாலே தேவாங்குப் பூனையும், குள்ள நரியும் சிரிப்பது போல இருக்கும். பயங்கர மனிதன்! உலகை அழ வைக்கவே பிறந்த வெறுப்பானந்தஜி அவர் கள்... நூறாண்டு வாழ்க! அவரது உடம்பு திமிங்கலம் போல் ஊழூழி வாழ்க!

நடுவர் : சிந்தனையானந்தர் எழுந்து கனைத்து நின்ற கோலத்தைக் கண்டு; கூட்டம் கைகொட்டிச் சிரித்தது. அதைப் பார்த்த சிந்தனையானந்தர்:

சிந்தனை : பெருமக்களே! நகைத்தல் வேண்டா... நா வன்மைக்கு அடிமையாக வேண்டா. யாம் இப்போது உம்மிடம் ஒரு வினாவினைக் கடாவுகிறோம்.

நகையின் மிகை பற்றி பெருந்தகை சிரிப்பானந்தர் உரையினைச் செவியுற்றீர்கள்! தொகை வகை யாகக் கூறினார்! புகையே தீயெனல் போல் நகையே வாழ்வெனல் என்கொல்? பகையே ஆயினும், தகைமிகு நகை ஏது கொல்? உமது கருத்து என்னையோ? அவை அறியப் பகர்மின்!

கூட்டத்தில் ஒருவர்: தலைவர் என்ன சொல்றார்? என்ன மொழி பேசறார்? ஏன் திடீரென வேற்று மொழி பேசறார்?

மற்றொருவர் : நல்ல தமிழில் புரியும்படிதானே பேசிக் கிட்டிருந்தார்... இப்போ என்ன? என்னமோ சொல்றாரே?

ஒருவர் : முன்பு அவர் பேசியது மக்கள் தமிழ், இப்போது பேசியது செக்கர் தமிழ். அதாவது சிறிது சிக்கல் மிக்கது. அதாவது விக்கல் தமிழ்!

சிந்தனை : யாம் கடாவிய வினாவினைத் தொடாமலே நீவிர் தடாலென முடிவினைக் கொடாதெனக் கொடுமையிது!

ஒருவர் : என்னய்யா சொல்றீங்க? எங்கமேலே ஏன் இப்படி கோபிக்கிறீங்க?

சிந்தனை : அந்தோ! என்னை இது? வெகுளி உம்மீதில்லை. கற்றறிவுற்ற என் நற்றமிழ் பற்றலானோம் ... சொற்றொடர், விற்றொடர்

மற்றிரு தொழில் களில் இன்று வெற்றியைப் பெற்றதார் சொல்? நகைச்சுவையா? பகைச் சினமா?

(கூட்டத்தில் தாங்க முடியாத வெடிச் சிரிப்பு எழுந்தது)

வெறுப்பு : *தோழர்கள்! தோழியர்காள்! என்ன இது? அலங்கோலம்? நான் மறுத்துரை செய்வதற்கு முன்பே உங்கள் கருத்தைக் கேட்கிறார் தலைவர்? இது அநீதி. இருபுறமும் உரை கேட்ட பின்னரே தீர்ப்பைக் கேட்க வேண்டும்! சிரிப்பின் சீரழிவில் சிந்தனையானந்தரின் சிந்தை யும் கந்தலாகி விட்டது போலும்!*

கூட்டம் : *சரி... சரி. சீக்கிரம்... பேசுமய்யா.*

ஒரே ஒருவர் : *வெற்றித்திரு. வெறுப்பானந்தரின் வெகுளிக் குரல் கேட்கட்டும்! எம்மவரின் குரல் எட்டுத் திக்கும் எதிரொலிக்கட்டும்!*

வெறுப்பு : *சிந்தனை நடுவரே! சிரிக்கும் பெரியரே! சிரிப்பு என்பது ஒருவிதமான அரிப்பு என்பது மேலோர் கண்டுபிடிப்பு. சிரிப்பினால் அழிந்த சரித்திரங்கள் ஆயிரம்! ஒரு கூனியின் சிரிப்பினால், இராமாயணம் என்ற பரிதாபம் தோன்றியது. ஒரு பாஞ்சாலியின் சிரிப்பினால், பாரதப் போர் என்ற பயங்கரம் எழுந்தது ஏன்? "பெண் சிரித்தால் போச்சு" என்ற பெருமொழி உங்களுக்குத் தெரியாதா? சிரிப்பு என்பது ஒரு நஷ்டமான வேதனை. கஷ்ட மான சித்ரவதை. பாவம். வாழ்க்கை இன்ன தென்றே அறியாத வாலிப வாலிபைகள் கேவலம் இந்தச் சிரிப்பின் வலிமையிலே, வலையிலே வீழ்வதனால் அல்லவா காதல் என்ற விலங்கை மாட்டிக் கொண்டு காலம் முழுவதும் கண்ணீர்ச் சிலை களாகி மடி கின்றனர்.*

இந்தச் சிரிப்பு என்ற ராட்சஸ குணத்தால்தான் உலகத்தில் எல்லாவிதச் சிரமங்களும் உண்டா கின்றன.

உலகில் ஒன்றுமில்லாதவர்கள் தான் சிரிப்பார் கள். நான் கூறுவது பைத்தியக்காரத்தன மாக இருக்கலாம். ஆனால், உலகில் பெரிய உண்மைகள் எல்லாம் முதலில் பைத்தியக் காரத்தனமாகத்தானிருக்கும். சில உதாரணங் களைத் தருகிறேன். நீங்களே எண்ணிப் பாருங்கள். உண்மை விளங்கும். உள்ளங்கைப் பூசணிக்காய் போல் தெரியும்.

உலகின் மிகப் பெரிய பணக்காரர்கள், மேதாவிகள், வீரர்கள் யாராவது ஒருவராவது சிரித்த முகத்தோடு இருந்ததாகக் கேள்விப் பட்டதுண்டா? இல்லை... காரணம் பண மிருப்பவன் ஒருமுறை சிரித்தால் அடுத்த நாள் ஆயிரம் குசேலர்கள் அவன் வீட்டு வாசலில் முற்றுகை போட்டு தர்மங்கேட்டு (கேரோ) செய்வார்கள்.

மேதாவிகள் சிரித்தால் ஸ்குரு லூஸ் மாதிரி தெரியும் என்பதற்காக அவர்கள் எல்லாம் கன்னத்திலோ அல்லது தலையிலோ கைவத்த படி கலங்கிய கண்களோடு காட்சி தருவார் கள்.

வீரர்கள் எனப்படுவர்கள், சதா மரணத்தைப் பற்றியே நினைப்பதால் சிரிப்பு வருவதில்லை அப்படியே வந்தாலும் அது பிரதேச சிரிப் பாகத் தானிருக்கும்.

அட இதுவெல்லாம் தொலையட்டும். உலகையே ஏதோ சந்தி சிரிக்க வைத்து விட்ட தாக ஜம்ப மடித்துக் கொண்ட அந்த சிரிப்பரக்கன் பர்னாட்ஷா இருந்தாரே, அவர்

முகத்தைப் பார்த்தீர்களா? மருந்துக்காவது அந்த முகத்தில் சிரிப்பு உண்டா? ஊஹும், கிடையாது. பர்னாட்ஷா மட்டும் பல்லைக் காட்டி சிரித்திருந்தால் அவர் பணமெல்லாம் பறி போயிருக்கும். பணம் போயிருந்தால் எண்ணத்தை எழுதியிருக்க முடியுமா? ஒரே சோகமயமான ஹாம்லெட்டுக்களைத்தான் எழுதியிருக்க முடியும். ஆக பெர்னார்ட்ஷா சிரிக்காமலிருந்ததால்தான் பெரிய ஷா ஆக முடிந்தது என்பது வெள்ளிடை மலை-

அட அதுதான் போகட்டும். நம்ம மிஸ்டர் திருவள்ளுவர் இருக்கிறாரே... அவர் சிலையைப் பார்த்தீர்களா? ஏதாவது மாதிரிக்காவது சிரிப்பு ரேகை இருக்கிறதா? இல்லை, காரணமென்ன? சிறந்த ஞானியான வள்ளுவருக்குச் சிரிப்பின் பயங்கரம் நன்கு தெரியும். இதற்கு அகச்சான்று வேண்டுமானால், அதாவது தக்க ஆதாரம் தேவையென்றால் திருக்குறளிலிருந்தே தெரிவிக்க முடியும்.

எனக்கு முன் பேசிய சிரிப்பானந்தர் என்ன சொன்னார்? மனிதனுக்கு முகம் இருப்பதே நகைப்பதற்காகத்தான் என்றார். இதை அடியோடு, முடிவோடு, தடிகொண்டு தாக்குகிறார் வள்ளுவப் பிரான். ‘முக நக நட்பது நட்பன்று’ எனும் குறளில். அன்று என்பதை தீபகமாக வைத்துக் கொண்டுபார்த்தால், பொருள் வெளிச்சம் நன்கு புலப்படும். அதாவது, முகம் நக அன்று. ஆகவே முகநக நட்பது நட்பன்று என்பதே சிரிக்காத வள்ளுவரது எண்ணம். இந்தக் கருத்தை அடுத்த குறளில் வலியுறுத்துகிறார்’

“நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்”

- என்ற குறளில், நெஞ்சத்தின் கடுப்பைத்தான் முகம் காட்டும் என்கிறார். நெஞ்சின் சிரிப் பதைக் காட்டும் என்றாரா? இல்லை. இல்லவே இல்லை.

கூட்டத்தில் ஒருவர்: நிறுத்துக வெறுப்பரே! "மோப்பக் குழையும் அனிச்சம் - முகம் திரிந்து பார்ப்பக் குழையும் விருந்து" என்ற பாட்டின் கருத் தென்ன?

வெறுப்பு : அந்த குறளும் என் கருத்துக்குத்தான் உதவி செய்கிறது. ஆம்... முகந்திரிந்து பார்த்தால் வந்த விருந்தாளி முகங்கோணும். கோணிக் கொண்டு போய் விடுவான் என்கிறார். இதனால் யாருக்கய்யா லாபம்? ஆகா! இந்தப் பஞ்ச காலத்தில் நமக்கு சமய சஞ்சீவியாகப் பயன் படும் சிரஞ்சீவிக் குறள். என்னே வள்ளுவர் தம் தீர்க்க தரிசனம், இப்படி நாமெல்லாம் ரேஷனில் கஷ்டப்படும்போது, வரும் அழை யாத விருந்துகளை, அஹிம்சை முறையிலே விரட்டும் ஒரு வழியை இரண்டா யிரம் ஆண்டு களுக்கு முன்பே தெரிந்து கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார் என்றால், அவருடைய தீர்க்கத் தரிசனத்தை, அதாவது தொலை நோக்கை என்னவென்று சொல்லுவது.

கூட்டம் : ஓய்! இதுதான் நீர் திருக்குறள் படித்ததன் லட்சணமா?

வெறுப்பு : ஆம்! அதற்கென்ன ஐயம்?' தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' என்போன்ற மாந்தர்க்கு 'கற்றனைத்து ஊறும் அறிவு'

கூட்டம் : இதற்கு முன் இதுவரை திருக்குறளுக்கு இவ்வாறு வலிந்து பொருள் கொண்டவர் எவரும் இல்லை.

வெறுப்பு : எக்காலத்தவர்க்கும், எவ்வித நெருக்கடிக்கும் ஏற்ற பொருள்தரும் பெருநூல் அல்லவா குறள்!

சிரிப்பு : 'நானோக்க நிலம் நோக்கும்'. 'நோக்காக்கால் தானோக்கி மெல்ல நகும்.' என்று காதல் சிரிப்பைப் பற்றி வள்ளுவர் கூறுகிறாரே. அதற்கென்ன சொல்லுகிறீர்?

வெறுப்பு : காமத்துப்பால் வள்ளுவர் செய்தது அல்ல என்பது என் அசைக்க முடியாத ஆராய்ச்சியின் முடிவு! இதை மெய்ப்பிக்க ஆறுநாள் கூட்டம் போடுங்கள். நிச்சயமாக நிரூபிக்கிறேன்:

(கூட்டம் வெடிபடச் சிரிக்கிறது)

வெறுப்பு : ஏன் இந்த இடர்ச் சிரிப்பு? வெடி நகைப்பு?

கூட்டம் : அதுவா! 'இடுக்கண் வருங்கால் நகுக' என்றார் வள்ளுவர். இப்போது நீர்தான் பெரியதொரு இடுக்கண்ணாக வந்துள்ளீர். அதை மடக்க நகைக்கின்றோம்.

வெறுப்பு : அப்படியானால் நீங்களே எமக்கு இடுக்கண்களாவீர்!

கூட்டம் : அப்படியானால் நீரும் சிரியும் - நகையும்.

வெறுப்பு : அப்படியா? பேச விடுங்கள்.

கூட்டம் : இல்லை சிரிக்க விடுங்கள்.

வெறுப்பு : இது சிரிக்காதவர் மாநாடு.

கூட்டம் : சிரிக்காதவன் மனுஷனல்ல, நகைக்காதவன் நல்லவனல்ல.

வெறுப்பு : பல்லிளிப்பவன் பைத்தியக்காரன். உரக்கச் சிரித்தால் உள்ளம் வெடிக்கும். அதிர நகைத்தால் ஆவியும் சிதறும். கடைக்கண் சிரித்தால் காதல் நோய் வரும்.

கூட்டம் : வாழ்க சிரிப்பு. வாழ்க காதல், வாழ்க காதலர் வெறுப்பாளர் ஓய்! வெறுப்பாளர், ஒன்று சொல்லும். நீர் ஆயுளில் ஒருமுறைகூடச் சிரித்ததில்லையா!

வெறுப்பு : இல்லை... இல்லை.. இல்லவே இல்லை.

கூட்டம் : பின் எப்படிக் கலியாணம் செய்து கொண்டீர்?

வெறுப்பு : திருமணமா அது? என் வெறுப்பின் உச்ச கட்டம்.

கூட்டம் : சிரிக்காத நீர் எட்டுப் பிள்ளைகளுக்கு எப்படி தந்தையானீர்? எப்படி அய்யா முடியும்? ஆ! எட்டுப் பிள்ளைகள்! பயங்கரம்! நீர் உம் மனைவியைப் பார்த்துச் சிரிக்காமல், இத் தகைய பயங்கரம் எப்படி நிகழ்ந்திருக்க முடியும்?

வெறுப்பு : இல்லை. நம்புங்கள். நகைக்காமலும் தந்தை யாகலாம்.

கூட்டம் : பொய்... ஆனால் உமது பிள்ளைகள் நன்றாக வாய் விட்டுச் சிரிக்கிறார்களே? உமது வாதம் உமது குலத்தின் கண் ஐயத்தை ஏற் படுத்துகிறது.

வெறுப்பு : வாழத் தெரியாதவர்கள்.

கூட்டம் : வம்பு வேண்டாம். வெறுப்பை விடுமின். சிரிப்பைத் தொடுமுன்.

வெறுப்பு : எப்படி அய்யா முடியும்?

கூட்டம் : முடியும். முடிந்தாக வேண்டும். காரணம், நீர் மனிதர். அதுவும் படித்தவர், பேச்சாளர், உலகம் புகழும் அறிவாளி. நீர் சிரிக்கா விட்டால் அது நமது தேசத்துக்கு பெரிய நஷ்டம், அவமானம்.

ஆம் சிரிக்காதது தேசத் துரோகம். ஆம், தேசத் துரோகி வெறுப்பானந்தர் வீழ்க. வெறுப் பானந்தர் வீழ்க.

சிரிக்காத வாய்க்குப் பல் எதற்கு...? மகாத்மா கூட சிரிக்க வேண்டுமென்றுதான் கூறி யிருக்கிறார்.

வெறுப்பு : நான் மகாத்மாவை வெறுப்பவன். அந்த மனுசன் செய்த விபரீதத்தால் வந்த வினை தான் விடுதலை. இந்த விடுதலையில்லாமலி ருந்தால் இந்த நாடு வெள்ளைக்காரன் தலைமையில் நன்றாக வாழ்ந்திருக்கும்.

கூட்டம் : ஓய், திசை திருப்பாதீர். அடிகளாரே! சிரிப்பைப் பற்றிப் பேசும். அரசியலைப் பற்றிப் பேச நீர் யார்?

கூட்டம் : ஓய் வெறுப்பானந்தரே! பட்டிமண்டப வாதத்தில் நீர் தோற்றுவிட்டீர்! ஆகவே நீர் சிரித்தே ஆகவேண்டும். இல்லையேல் விட மாட்டோம். பலாத்காரமாகச் சிரிக்க வைப் போம். நீர் சிரிக்கும் வரை நீர் - நூறு மைசூர் பாகுகளை, ஆயிரம் ஜிலேபிகளைத் தின்றாக வேண்டும். என்ன சொல்லுகிறீர், சிரிக்கப் போகிறீரா? ஜாங்கிரி தின்று சித்ரவதைக்கு ஆளாகப் போகிறீரா? மைசூர்பாகு தின்று மடியப் போகிறீரா?

வெறுப்பு : அடப் பகுத்தறிவற்றவர்களே! பலாத்காரக் கூட்டமே! உங்களைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது... (என்று ஓங்கிச் சிரிக்கிறார் - பைத்தியக்கார னைப் போல) அடுத்த கணம் அவர் கட்டி யிருந்த போலிப் பல் வரிசை எங்கோ போய் கூட்டத்தின் நடுவில் விழுந்து விடுகிறது?

கூட்டம் : *ஆ! வெற்றி! கடைசியாக வெறுப்பானந்தர் சிரிப்பின் பெருமையை ஒப்புக் கொண்டார். சிரிப்பே வென்றது. சிரித்து விட்டார்! சிரித்தே விட்டார்!*

வெறுப்பு : *ஆ! எனது பல் வரிசை எங்கே? ஆயிரம் ரூபாய் செலவு செய்து கட்டிய பல் வரிசை... ஐயகோ? எங்கே என் பல்? எங்கே என் சொல்? அந்த ராமனுக்கு வில்? எனக்குப் பல் தானே எல்லாம்? எங்கே எனது பல்?*

ஒருவர் : *ஓய்! சிரிக்காத வாய்க்குப் பல் எதற்கு?*

பட்டிமன்றத் தலைவர் முடிவுரை : *அவையோர்களே! அமைதி! சிரிப்பு வென்றது. மனிதனுக்கு மட்டு மல்ல. மற்றுமுள்ள ஜீவராசிகளுக்கும் சிரிக்கத் தெரியும். நன்கு கவனியுங்கள்! தெரியும்.*

நாய்தனது சிரிப்பைத்தன் வாலில் காட்டும்
நரி, தனது தீங்குரலில் நகைத்துக்காட்டும்!
நல்மாடு காதுகளை மடித்துக் காட்டும்!
நற்குதிரை சிரிப்பதனைக் கனைத்துக் காட்டும்!
நண்டுசிப்பி மீன்வெயிலில் நகைத்துக்காட்டும்!
நாமென்ன இதைவிடவா கெட்டுப்போனோம்!
நாளைமுதல் சிறிதேனும் முயற்சி செய்வோம்,
நாளாக நாளாக நாம் சிரிப்போம்!
செயலில் இதைக்காட்டியவர் காந்தி அண்ணல்,
சுட்டுவிட்டான் அக்கணமும் சிரித்திருந்தார்!
சிரிக்காத பேருக்கு பல்லெதற்கு?
கொடுக்காத கஞ்சர்க்குக் கையெதற்கு?
குதிக்காத குரங்குக்குக் கொம்பெதற்கு?
கொத்தாத கிளிகட்குப் பழமெதற்கு?
அச்சத்தைத் தீர்க்காத அரசெதற்கு?
அறிந்துபணி செய்யாத அமைச்செதற்கு?
கொஞ்சாத மலடிக்குக் குழந்தை வேண்டாம்!
கொள்கையே இல்லார்க்குக் கொடி எதற்கு?

செரிக்காத வயிற்றுக்குச் சோறெதற்கு?
தீராத வியாதிக்கு மருந்தெதற்கு?
ஜெனிக்காத பிள்ளைக்குப் பேரெதற்கு?
ஆடாத மயிலுக்கு அழகெதற்கு?
பாடாத குயிலுக்குக் குரல் எதற்கு?
ஜெயிக்காத தேர்தலில் செலவெதற்கு?
ருசிக்காத வாய்க்கு விருந்தெதற்கு?
ரசிக்காத பாவிக்குக் கவி எதற்கு?

கூட்டம் : *வாழ்க சிரிப்பு! வாழ்க நல்லுலகம்*
வென்றது பட்டி மண்டபம்

(நாடகம் முடிவு)

படம் முடியாது இனித் துயரம்...

காலை நேரத்தை வரவேற்க, வழக்கப்படி கடற்கரைக்குப் போனேன். முருகக் கடவுளின் கருணைக்குரிய நீலமயில் போன்ற அடிவானத்தில், அருணோதயத்தின் கதிர்த் தோகைகள் வானெங்கும் நீண்டு பரவி, நீலவிதானத்திலே கோலம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தன. சூரிய நமஸ்காரம் செய்ய ஆயத்தமானேன்.

அப்போது சிறிது தூரத்தில் ஒரு படகின் பக்கத்திலிருந்து ஏதோ முணகல் சப்தம் கேட்டது. என்னடா இது, காலையில் எவனோ ஒருவன் சலித்துக் கொள்கிறானே! என்ன சங்கடமோ, பார்ப்போம்! என்றெண்ணிப் படகின் பக்கமாகச் சென்றேன். அங்கே ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார். படம் முடியாது இனித் துயரம் படமுடியாதரசே, பட்டதெல்லாம் பட்டணத்தில் பட்டதெல்லாம் முடியாதரசே' என்று திருவருட்பாவை கொஞ்சம் மாற்றியும் மழுப்பியும் தம் சௌகரியப்படி பாடிக் கொண்டிருந்தார். ஓ! இவர் ஒரு அரைகுறை அருட்பா பக்தர் போலிருக்கிறது. வள்ளலாரின் ரசிகர் போலிருக்கிறது என்று எண்ணி, அருகில் போய்ப் பார்த்தேன். அதே, படம் முடியாது, என்று பல்லவியைப் பாடினார். "ஐயோ! நீர் யார்?" என்று கேட்டேன்.

அவர் கொஞ்சம் கூடத் தயங்காமல், "நான் ஒரு படுபாவி சார்!" என்றார்.

'என்ன ஐயா இது! உம்மை நீயே கோபித்துக் கொள்ளுகிறீரே! என்ன விஷயம்? ஏனிப்படி தனிமையில் உட்கார்ந்திருக்கிறீர்" என்று கேட்டேன்.

அவர் ஒருமுறை கனைத்துக் கொண்டு, "எவன் தனக்குத் தானே தண்டனை விதித்துக் கொள்கிறானோ, அவன்தான்

ஐயா மனிதன்! ஒருவன் தன்னைத் தானே கோபித்துக் கொள்ளும் சமயத்தில் ஒரு வேதாந்தி ஆகி விடுகிறான். அதாவது திருந்துவதற்குத் தயாராகி விடுகிறான்" என்று உறுதியான குரலில், ஒருவருக்கும் இலேசில் புரியாத பீடிகை ஒன்றைத் தூக்கிப் போட்டார்.

"ஏன் ஐயா! இவ்வளவு ஒழுங்காகப் பேசும் நீர், ஏன் தனிமையில் சலித்துக் கொண்டு இப்படி கடலோடும், அலையோடும், பேசிக் கொண்டிருக்கிறீர்? ஒருவேளை நீர் இயற்கையோடு பேசும் ஒரு எழுத்தாளரோ?" என்று கேட்டேன் சந்தேகத்துடன்.

"இல்லை. நான் எழுத்தாளன் இல்லை. ஒரு நல்ல எழுத்தாளரைக் கொன்ற கொலைப் பாதகன் நான்" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே பதில் அளித்தார் அந்த மனிதர்.

"ஏன் ஐயா! போயும் போயும் ஒரு எழுத்தாளனையா கொன்றீர்! அவனைக் கொல்ல வேறொருவரும் தேவை இல்லையே! எழுத்தாளன் என்பவன் தானாகவே தற்கொலை செய்து கொண்டு செத்துப் போகும் ஒரு வினோதப் பிராணி ஆயிற்றே!" என்றேன் அனுதாபத்துடன்.

"ஆமாம், ஆமாம். நீர் சொல்வது முழுவதும் உண்மை. அந்த எழுத்தாளரை என் கையால் கொல்லவில்லை. எல்லாக் கவிகளையும் போல, அவராகத்தான் காலமானார். ஆனால் அவர் இறப்பதற்கு நான்தான் காரணமாக இருந்தேன். எழுத்தாளர் மட்டும் அல்ல. இன்னும்..." என்று மேலும் இழுத்தார்.

"என்ன ஐயா! 'எழுத்தாளர் மட்டும் அல்ல, இன்னும்...' என்று இழுக்கிறீர்! இன்னும் யார் யாரை ஐயா கொன்றீர்?" என்று பயத்துடன் கேட்டேன்.

"சொல்லுகிறேன் சார்! எழுத்தாளர், டைரக்டர், கதாநாயகன் இந்த மூன்று பேர் மரணத்துக்குமே நான் தான் முக்கியமான காரண பூதமாக இருந்தேன்" என்று அங்கலாய்த்தார் அந்த மனிதர்.

ஏதேது! ஆசாமி பேசும் ஸ்டைலைப் பார்த்தால், சினிமா பாஷையாக இருக்கிறதே என்று உற்சாகம் அடைந்தேன்.

"எழுத்தாளர், டைரக்டர், கதாநாயகன் ஆகிய மூன்று பேரும் இறந்தால் கதாநாயகியும் புரொட்யூஸரும் கூட..."

சுவர்க்கத்துக்குத்தானே போயிருக்க வேண்டும்? நீர் சொல்லும் கதை, முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே! கதையில் விறுவிறுப்பு, கொஞ்சம் குறைகிறதே! ஓகோ! இப்போதுதான் உம்மைத் தெரிந்து கொண்டேன். மனுஷன் காலையில் வந்து ஏதோ சினிமாவுக்காக கதையைக் கற்பனை பண்ணுகிறீர். இல்லையா? தாராளமாகச் செய்யும். நானும் எனக்குத் தோன்றிய சில 'ஐடியா'க்களை சொல்லி வைக்கிறேன்"

இவ்வாறு கூறி என் பேச்சு வன்மையின் முதல் மூச்சைக் காட்டு முன்பே, அந்த மனிதரின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வழிந்தது. அப்போது தான் எனக்குத் தெரிந்தது. எனது ஹாஸ்யப் பேச்சு அவரை அப்படி ஒரே அடியாக அழ வைத்து விட்டது என்று! என்ன செய்வது? சில பேருடைய நகைச்சுவை சரியான சோகரசத்தை உண்டாக்கிவிடும். கோபம் என்று வீராவேசம் பேசினால், சரியான ஒன்னாம் நம்பர் சிரிப்பாக முடியும். நம் பேச்சும் இப்படி ஒரு சுவை மயக்கமாகவே அமைந்தது போலும்.

தழுதழுத்த குரலில் தடுமாறிப் பேசினார் அவர். "என்னைக் கொஞ்சங்கூடத் தெரிந்து கொள்ளாமல் நையாண்டி செய்து விட்டீர்கள்!"

"நான் வேதனையிலே வெம்பிப்போன வெள்ளரிப் பழம் சார். சோதனைக்கல்லால் தாக்குண்ட சுரக்காய் சார்! பாதகப்பாகில் ஊறிய பாதாம் அல்வா! நீரில்லாத ஆறு! மோரில்லாத சோறு! ஆவியில்லாத பாவி! மேளமில்லாத தாளம்! வாசல் இல்லாத பங்களா!" என்று சினிமாவில் வருவது போன்ற சோகவசனங்களைச் சொல்லி சுகமான நகைச்சுவை விருந்தை அள்ளி வீசினார் அந்த மனுஷர்.

"சரி சரி நீர் யார், பேசுவதைப் பார்த்தால், சந்தேகமில்லாமல் நீர் ஒரு சினிமா வசனகர்த்தாவேதான். உமது அடுக்கு மொழிகளைக் கேட்டால், உமது அறிவின் தேம்பல் புலப்படுகிறது! எதனால் இப்படி ஆனீர்? வெளியில் சொல்லி யாவது உம் துயரத்தை ஆற்றிக் கொள்ளும். முடிந்தால் என்னால் ஆன உதவியைச் செய்கிறேன்" என்றேன் கடைசியாக.

அவ்வளவுதான்! சினிமா முடிந்ததும், ஒன்றை ஒன்று இடித்துக் கொண்டு வெளியேறும் ஜனக்கும்பலும் - சைக்கிள் கூட்டமும் போல், அவரது சோகக் கதையும், சூடான கண்ணீரும் ஒன்றையொன்று முட்டி மோதிக் கொண்டு வெளியே வந்தன.

அவர் தமது வரலாற்றைச் சொல்லத் தொடங்கினார். சார்! என் பெயர் சோணாசலம். சொந்தக் கிராமத்தில் சுகவாசியாயிருந்தேன். பத்து வேலி நிலம், நாலு வீடு. ஆள், தேள், வண்டி, கிண்டி எல்லாம் இருந்தன. உலகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல், உலகம் நம்மைத் தெரிந்து கொள்ளட்டுமே என்று அலட்சியமாக இருந்தேன். அதற்காக, உலகம் என்னைப் பழிவாங்க நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது போலும். என் விதியின் தூதராக வந்தான் ஒரு ஆசாமி! அவன் பெயர்தான் உயர்திரு ஆசைமணி!

எனது செல்வமெல்லாம், அமைதியான நதிக்கரை, தாவரக் கடலான வயல்கள், அசைந்தாடும் தென்னந்தோப்பு, அதில் அசை போடும் கால்நடைகள், சுகமான சாப்பாடு, சொந்த வீடு இவைதாம். இந்த இன்பங்களை விட்டு நிக்கல் ரூபாய்களிலோ, பித்தளைக் காசுகளிலோ, அல்லது தொட்டால் தூளாகும் சாமான்கள் மீதோ, எனக்கு நாட்டம் பிறந்ததில்லை. ஆனால், அந்த ஆசைமணி என் வீட்டில் அடியெடுத்து வைத்தது தான் தாமதம், என் மனம் தடுமாறத் தொடங்கியது.

பாழாய்ப் போன ஆசையாரின் பிடிவாதத்தின் பேரில் தற்காலிகமாக நான் சென்னையில் குடியேறினேன். ஸ்ரீமான்

ஆசையார், என்னை எங்கெல்லாமோ இழுத்தடித்தார். கார்ப்பரேஷன் மேஸ்திரிகூட, அப்படித் தெருத் தெருவாகச் சுற்றியிருக்க மாட்டேன். நாங்கள் அப்படி அலைந்தோம். முதன் முதலாகச் சென்னையில் எனக்கு சிநேகமானது... ஹோட்டல் சாப்பாட்டினால் வந்த 'டயோரியா' நோய். அதன் காரணமாக ஒரு டாக்டரின் நட்பு. அது நீடிக்க ஒரு காரின் தேவை. கார் காரணமாக நான்கு பேர் சிநேகம். நண்பர்கள் நீடிக்க ஒரு பங்களா, பங்களா நீடிக்கப் பணம் - இப்படியாக எனது தேவையின் பட்டியல் குரங்கின் வால் போல வளர்ந்து கொண்டே போயிற்று. உயர்திரு ஆசை யாருக்கு அனுமார் என்ற புனை பெயரும் உண்டு என்பதை யும் அறிந்து கொண்டேன்.

பங்களா வாங்கிவிட்டுப் பேசாமல் உட்கார்ந்திருந்தால் மேலே காரியம் நடக்குமா?

ஆகவே நாங்கள் ஒரு 'பிஸினெஸ்' ஆரம்பிக்கத் திட்டம் போட்டோம். 'ஹோட்டல் வைக்கலாமா?' என்று கேட்டார் ஸ்ரீமான் அனுமார்.

"ஹோட்டல் உலகம் தெரியாதே" என்றேன்.

"பத்திரிகை ஆரம்பிக்கலாமே!"

"எழுதத் தெரியாதே. என்ன செய்வேன்!" என்று கையை விரித்தேன்.

"சினிமா பிடிக்கலாமே" என்றார்.

"சினிமாவைப் பார்க்கக் கூடத் தெரியாதே! பிடிப்பது எப்படி என்றேன்.

"பரவாயில்லை? பணமிருந்தால் போதும். அறிவை விலைக்கு வாங்கித் தொழில் செய்ய முடியும். பிறர் அறிவும், நமது பணமும் சேர்ந்தால், கொள்ளை லாபம் தானாகவே கதறிக் கொண்டு வரும். மேலும் சினிமாத் தொழில் பெரிய கம்பச் சித்திரமல்ல. ஒரே மாதத்தில், சினிமாவின் சகல தொழில் இரகசியங்களையும் கற்றுக்கொள்ள முடியும். அதற்கு மேல் கற்றுக் கொள்ள அதில் ஒன்றுமில்லை. உங்கள்

அறிவுக்கு ஒரு மாதமே அதிகம்!" என்று என்னை முடுக்கி விட்டார் மிஸ்டர் அனுமர். ஆசை என்ற அனுமாரின் வலையில் விழுந்த என்னை தமது வாலைக் கொண்டு சரியாகக் கட்டிப் போட்டு விட்டார். சினிமா ப்ரொட்யூஸர் என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டேன். தலை ஆட்டங் கண்டது. மண்டையில் வீக்கம் கண்டது!

கிராமத்தில் எனக்குச் சொந்தமான வீடுகளை விற்றேன். பட்டணத்தில் உள்ள பங்களாவுக்குக் கொடுக்கும் வாடகைப் பங்களாவாக மாறின. காவிரிக் கரை வயல்களின் வாய்க்கால் ஊற்றுக்கள், காருக்குப் பெட்ரோல் ஊற்றாக உதவின. அருமையான மாந்தோப்பை விற்றேன். அந்தத் தொகையைக் கொண்டு ஸ்டுடியோவில் காகிதத் தோப்புகளை நிர்மாணித் தேன். பணத்தை வாரி இறைத்தேன்.

படத்தைப் பிடித்தேன். தங்க நகைகளை விற்றுத் தகர டப்பாக்களை வாங்கினேன். சொக்கத் தங்கத்தை மாற்றி, செல்லுலாய்ட் பிலிம்களைச் சுருட்டினேன். சிவந்த ரோஜா மலர்களால் கடவுளை அர்ச்சித்த என் கைகள் காலையில் சிகரெட்டு டப்பாக்களை ஏந்திய வண்ணம் கருகிக் கொண்டிருந்தன. இப்போது சென்னையில் இருபது மாதங்களையும் ஏழு லட்சத்தையும் செலவு செய்த ஒரு பெரும்பட முதலாளி நான் படம் பாதி முடிந்தது. அதற் குள்ளாக இயற்கையாக என்னிடம் அமைந்திருக்கும் குணங் களும் பாதி மறைந்தன.

இப்போது எனக்கு எவரைப் பற்றியும் கவலையில்லை. ஏனெனில் நான் சினிமாவைப் பற்றி எல்லாம் தெரிந்தவனாக, சகல கலா வல்லவனாக ஆகிவிட்டேன். இந்த அபிப்ராய போதை அகங்கார விஷமாக மாறி, என் அறிவைச் செல்லரித்து விட்டது. நான் எடுத்துக் கொண்டிருந்த படத்தைப் பற்றி, எல்லோரும் ஒரே குரலில் புகழ்ந்து பேசியது உண்மைதான்.

அதுவரை வேலை செய்தவர்களைக் கொண்டே தொடர்ந்து முடித்திருந்தால் நிச்சயமாக அது நல்ல

படமாகத்தான் வெளிவந்திருக்கும். பணமும் கிடைத்திருக்கும். என்னவோ, போங்கள்! திடீரென்று நான் மாறிவிட்டேன்! ஆசையின் வேகம், பணம் போட்ட மமதை, கேட்பாரற்ற காட்டுச் சுதந்திரம், இந்தச் சூழ்நிலையால் என் மதி, மயங்கியே விட்டது. எனக்குத் தெரியாத கலை நுட்பம் எதுவுமே இல்லை என்ற தலைக்கனம் மலைக்கனமாக ஏறிவிட்டது!

யார் யாரோ எனக்கு நல்லதைச் சொல்ல முன் வந்தார்கள். நல்லவர்கள் பேச்சு என் காதில் விழவில்லை. காரணம் கதாநாயகி கற்பூரவல்லி கண்வலையில் நான் ஒரு கலை மீனாகி விட்டேன். பாதிப்படம் வரை எல்லோருக்குமே வெகு திருப்தியாயிருந்த கதையில் திடீரென எனக்குக் கோளாறு தென்பட்டது. அன்று ஒருநாள் படத்தின் கதாநாயகி தனக்குக் கதை பிடிக்கவில்லை என்று என்னிடம் தனியாகச் சொன்னது தான், என் மனமாற்றத்துக்குக் காரணம். அவளுக்கு அப்படித் தோன்றுவதற்கு காரணம் எங்கள் கம்பெனியின் கதை ஆசிரியர்! கதாநாயகியைக் கண்டதும் எழுந்து நின்று கும்பிடவில்லை என்பதுதான் எல்லாவற்றிற்கும் மேலான முக்கியமான காரணம்! அதை விட முக்கியமான காரணம் என் கெட்ட காலம்!

உடனே அந்த கதாசிரியரைக் கூப்பிட்டேன். கதா நாயகனுக்கிருந்த கட்டங்களை வெட்டச் சொல்லி, கதா நாயகிக்கே அதிகப் பகுதிகளை மாற்றி அமைக்கச் சொன்னேன். 'கதை செத்துப் போகும்' என்று வாதாடினார் எழுத்தாளர். அவர் கூறியது உண்மைதான். ஆனால் அவரது வார்த்தைகள் அப்போது எனக்குக் கோபத்தைத் தான் மூட்டின. 'ஓய்! கதை என்னய்யா கதை! உம்முடைய கதை என் படத்துக்காக. என் படம் கதாநாயகிக்காக. இந்தக் காலம் கதாநாயகிகள் காலமே தவிர, கதாநாயகர்கள் காலமல்ல, ஆகையால் உலக சேமத்தை முன்னிட்டு, உமது கதையைக் கதாநாயகிக்காக மாற்றிவிடும். கதை சாகட்டும். கதாநாயகி பிழைக்கட்டும் அவள் ஒரு கற்பகச் சோலை' என்று கடிந்து கொண்டேன்.

எழுத்தாளரோ, எதற்கும் அசையாத இலட்சியவாதி. என்னிடமே நேரிடையாக எதிர்த்துப் பேசினார்!

"சார்! கதை நான் பெற்ற குழந்தை. அதை நானே சாகடிக்க மாட்டேன். உலகில் ஒன்றை ஆக்கவே நமக்கு உரிமை. அழிக்க அல்ல!"

"மேலும் சினிமா உலகத்தைப்பற்றி உங்களுக்கு என்ன ஐயா தெரியும்?" என்று என் மண்டையில் அடிப்பது போல் ஒரு கேள்வி கேட்டார். அத்துடன் அவர் நிற்கவில்லை. "சிந்தனையிலே அறிவை ஆவியாக்கி முடிவு செய்யும் எங்கள் உள்ளம்தான் உலகம்! குழி விழுந்த எங்கள் கண்கள்தான் காலத்தின் கண்ணாடி. எங்கள் பேச்சுத்தான் மக்களின் குரல். எங்கள் எழுத்துத்தான் சமுதாயத்தின் சட்டம். உம்மிடம் பணமிருக்கலாம். அது எங்கள் அறிவைப் பயன்படுத்திக் கொள்ளலாமே தவிர, எங்களை அடிமைப் படுத்திவிட முடியாது. போம்! உமக்குக் கெட்ட காலம் ஆரம்பமாகி விட்டது. ஆகையால் தான் மன மலடியான கதாநாயகியின் திருவடியில் வீழ்ந்து விட்டீர். உங்கள் அபிப்ராயப்படி கதைக் குழந்தையைக் கொல்லுங்கள்! கொல்லுங்கள்! ஏதேதோ உளறுகிறீர்! கதையை மாற்ற முடியாது. நான் போகிறேன் பாக்கிப் பணத்தை அனுப்பி விடும்" என்று வெறி பிடித்தவர் போல் கூறிவிட்டு வெளி யேறி விட்டார் எழுத்தாளர்.

நானும் அவரைத் துரத்தி விட்டேன். பேசியபடி பணத்தையும் கொடுக்கவில்லை. என்னை நம்பிக் குடும்பத் தோடு பட்டணத்துக்கு வந்து இராப் பகலாக உழைத்துக் கொண்டிருந்த அவர் ஏகப்பட்ட கடன் வாங்கியிருந்தார். திடீரென்று நான் விரட்டியதால், அவர் மனம் நொந்து, வியாதி வந்து, ஆஸ்பத்திரியில் அடைக்கலம் புகுந்து, அகால மரணம் அடைந்து விட்டார். சும்மா சொல்லக் கூடாது. ரொம்ப நல்ல மனிதர்! அவரது அரிய நண்பர்கள் அவரை மறக்காமல் அனுதாபத் தீர்மானத்தையும் நிறைவேற்றி விட்டார்கள். அந்த எழுத்தாளருக்கு இந்த உலகத்தில் நிலையான செல்வம் அனுதாபத் தீர்மானம் ஒன்றுதான்.

இவ்வாறு கூறிப் பெருமூச்சு விட்டார் சோணாசலம். பிறகு, நிறுத்திய இடத்திலிருந்து மேலும் கதையைத் தொடர்ந்தார்.

மறுநாள், 'பிரபல எழுத்தாளர், பைத்தியக்காரச் சித்தன் தம் கடைசிப் படத்திற்கு வசனம் எழுதி முடிவுக்கு முன்பே காலமாகி விட்டார்' என்ற செய்தியைக் கொண்டு வந்த ஸ்ரீமான் ஆசையார், "சார்! நல்ல மனிதர்கள் இறக்கும் போதுகூட பிறருக்காக ஒரு நன்மை செய்து விட்டே போகிறார்கள்! பாருங்கள். இப்போது நம் கதாசிரியர் சித்தன் காலமானதுகூட, நம் நன்மையை உத்தேசித்துத்தான். அவர் மரணம் நம் படத்தின் பண வசூலுக்கு ஒரு முக்கிய காரணமாகப் போகிறது. 'அவர் எழுதிய கடைசிப் படம்' என்று விளம்பரம் செய்தால் அதற்காகவே தினம் ஆயிரம் பேர் வருவார்கள். எப்படி என் 'ஐடியா'? என்று கேட்டார்.

டைரக்டர் உள்ளே வந்தார். எப்படியாவது காலஞ் சென்ற சித்தன் எழுதிய கற்பனைப்படியே கதையை எடுத்தால் தான் ஓடும். இல்லாவிட்டால் படம் படு தோல்வி யடையும் என்று ஒரே பிடிவாதமாகக் கூறினார் டைரக்டர்.

"டைரக்டர் சொல்லுகிறபடி கதையை எடுப்பதானால், நான் நடிக்க முடியாது" என்று கதாநாயகி ஒரே உறுதியாக ஒற்றைக் காலால் நின்றாள். அதோடு அவள் நிற்கவில்லை. "எனக்காகத் தான் கதையே தவிர, கதைக்காக நான் இல்லை," என்றும் உறுதியாகக் கூறிவிட்டாள்.

நான் என்ன செய்வது, இந்தப் பக்கம் டைரக்டர் விழிக்கிறார்; அந்தப் பக்கம் கதாநாயகி மிரட்டுகிறாள். இரண்டு ரேடியோவை ஏக காலத்தில் திருப்பியது போல, இருவரும் ஒருமணி நேரம் சரமாரியாக ஏதேதோ பேசிக் கொண்டார்கள்.

இருபதாயிரத்துக்கு வேலை செய்யும் டைரக்டரின் சொற்படி நடப்பதா! அல்லது இரண்டு லட்சத்தை ஏப்பம் விட்டுவிட்டு, மூன்றாவது லட்சத்திற்கு மோப்பம் பிடிக்கும் நட்சத்திரத்தின் சொற்படி கேட்பதா? எனக்கு ஒன்றும்

புரியவில்லை. கடைசியாக நட்சத்திரத்தின் முடிவுக்கே நான் வோட்டுக்....... கொடுத்தேன். ஆரம்பத்தில் இந்த டைரக்டரே தான் அந்தக் கதாநாயகிக்கு இரண்டு லட்சத்தை வாங்கிக் கொடுத்தார். இப்போது அவள் சொற்படி நடக்க மாட்டேன் என்று அவர் சொன்னால், அது வியாபார நியாயமாகுமா? எனது முடிவைக் கேட்ட டைரக்டர், என்னிடம் கோபித்துக் கொண்டு தமது ஆட்களுடன் வெளியேறி விட்டார்.

கதாநாயகி இப்போது என் கம்பெனியின் சர்வாதிகாரி ஆனாள். "இன்னும் ஆறு மாதத்தில் படத்தை முடிக்கா விட்டால், மேற்கொண்டு இரண்டு லட்சம் தரவேண்டும்" என்று பயமுறுத்தினாள். எனக்கோ வேறு டைரக்டர் கிடைக்கவில்லை.

ஆகவே நானே 'டைரக்டர்' ஆனேன். கதை எழுத எந்தக் கவியும் முன்வராமல் போகவே கதாநாயகியே கதை, வசனம், பாடல், நடனம், சங்கீதம் எல்லாவற்றையும் கற்பனை செய்து என் அறிவைச் சென்னைச் சாக்கடையாக்கிக் கொண்டிருந்தாள்.

அதன் பலனாகத் திடீரென்று ஒருநாள் கதாநாயகனும் மனம் நொந்து, என் கம்பெனியிலிருந்து வெளியேறி விட்டார்.

'மேக்கப் மேன்' என்னைக் கதாநாயகன் ஆக்கிவிடுவதாக தைரியமளிக்கவே, நான் கதாநாயகனானேன். கதாநாயகி டைரக்டரி ஆனாள்; ஒரு மாதிரியாகப் படம் முடிந்தது.

இனி படத்தை விற்று, வாங்கிய கடனைக் கொடுத்து விடலாம் என்று பெருமூச்சுடன் உட்கார்ந்தேன். படத்தை வாங்க எவரும் முன்வரவில்லை.

இந்தக் கவலையில் நான் தத்தளித்துக் கொண்டிருந்த போது, முன்பு என்னிடம் கோபித்துக் கொண்டு போன டைரக்டர் அதிகம் குடித்த காரணத்தினால் மாரடைப்பால் காலமானார்! என்ற ஒரு செய்தி வந்தது. அதற்கு மறுநாள், கதாநாயகனுக்குக் கதாநாயகி மேல் கொண்ட காதல் முறிவு காலனாக முடிந்ததால் அவனும் செத்ததாகச் செய்தி வந்தது.

அதற்கடுத்த வாரம் எங்கள் படத்தை நாங்களே திரையிட ஏற்பாடு செய்தோம். செத்துப் போன சித்தர் - டைரக்டர் - கதாசிரியர் இத்தனை பேருக்கும் இதுவே கடைசி படம் - காணத் தவறாதீர்கள் - என்று விளம்பரம் செய்தோம்.

எவ்வளவு கேவலமான சுயநலம் பாருங்கள்! செத்துப் போனவர் பெயரைச் சொல்லி, பொதுமக்களின் பணத்தைப் பறிக்கும் அளவுக்கு, எங்கள் அறிவு மட்டமாகிவிட்டது சார்!

ஆனால் நம் ஜனங்களா ஏமாறுபவர்கள்? எப்படி எல்லாமோ, 'பார்க்கத் தவறாதீர்கள்' என்று பக்கம் பக்கமா விளம்பரம் போட்டும், என் படத்தை எல்லோருமே பார்க்கத் தவறிவிட்டார்கள். ஸ்ரீமான் அனுமாரும் என்னைத் தவிக்கும் படி செய்து விட்டு எங்கேயோ தாவி மறைந்து விட்டார். "சார்! நான் என்ன செய்வேன்?' என்று கூறி ஓவென்று கதறினார் அந்த மனிதர்.

"ஏன் ஐயா அலறுகிறீர்! வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமே என்று அழுகிறீரா? பேசாமல் 'முடியாது' என்று கைவிரித்து விட்டு நிம்மதியாயிரும். இந்தக் காலத்தில் கடன் கொடுத்தவன்தான் அழவேண்டும், வாங்கியவன் ஜாலியாக இருக்கலாம்" என்றேன்.

'என் காரணமாக அகால மரணமடைந்த அந்த எழுத்தாளர், டைரக்டர், கதாநாயகன் இம்மூவருடைய குடும்பங்களுக்கும் ஏதாவது ஒரு வழி செய்தால்தான் என் உயிர் அமைதியாகப் பிரியும். அதுவரையில்...." என்று கூறி விம்மத் தொடங்கிவிட்டார் அந்த மனிதர்.

அவர் அழுகையைக் கண்ட எனக்கு ஏதோ ஒரு உணர்ச்சி உண்டாகிவிட்டது. உமது வாழ்வின் முடிவில் நீர் இல்லை. இப்போதுதான் உமது புது வாழ்வைத் துவங்கி இருக்கிறீர்! செய்தவற்றை உணர்ந்த நீர்தான் புதிய மனுஷர்! அழுகையை விட்டுவிட்டு என்னோடு புறப்படும். முடிந்த வரை நீர் செய்த பாவத்துக்குப் பிரயாச்சித்தம் தேடலாம்.

பணம் போனால் போகட்டும். உம் குறையை உணர்ந்த உமது உயிர், இனி மறுமலர்ச்சியுடன் விளங்கும். நீர் கண்ட அனுபவத்தால் புது வாழ்வு - மலரும், ஆனால் ஒன்று, நானும் ஒரு எழுத்தாளன் - என்னையும் கொன்று விடாதீர்" என்று கூறி அவரை அழைத்துச் சென்றேன்.

வாழ்வின் துவக்கத்தைக் காணப் புறப்படும் ஐந்து வயதுப் பாலகனைப் போல் அந்தச் சோணாசலம் என்னுடன் புறப்பட்டார்.

அன்றைய உலகைத் துவக்கி வைத்த சூரியன் தங்கத் தடாகத்தில் குளித்து, வைரப்பந்தாக உருண்டு, வானிலே எவ்வி எல்லையிலா ஒளிக்கடலில் நீந்திக் கொண்டிருந்தான்.

முற்றும்